மறைசையந்தாதி,

நல்லூர்: சின்னத்தம்பிப்புலவர்

இயற்றியது.

இஃது

உடுப்பிட்டி

ஸ்ரீமத். அ. சிவசம்புப்புலவர்

எழுதிய

உரையுடன்

நூலாசிரியர் வரலாறுஞ் சேர்த்து

யாழ்ப்பாணம்

சைவபரிபாலன சபையாரால்

தமது

சைவப்பிரகாசயந்திரசாலையில்

அச்சிடப்பெற்றது.

2-ம் பதிப்பு.

பவ வருஷம் ஆடி மீ.

1934.

பிரதிகள் 500] [விலை சதம் 30.

நூலாசிரியர் வரலாறு.

இம் மறைசையந்தாதியை இயற்றிய வரகவியாகிய சின்னத்தம்பிப் புலவர் இற்றைக்கு இருநூறு வருடங்கட்கு முன்னர், ஒல்லாந்தர் இந்நாட்டை ஆண்ட காலத்தில், யாழ்ப்பாணத்து நல்லூரில் வாழ்ந்திருந்த வில்லவராயமுதலியாரென்னும் பிரபுவின் புதல்வராவர். வில்லவராயமுதலியார் உயர்குடிப்பிறப்பு, கல்வியொழுக்கம், செல்வம், செல்வாக்கு, அதிகாரம் முதலிய சுகுணங்களோடும் நற்செயல்களோடும் கூடியவர். இம்முதலியாருடைய கல்வித்திறமையையும் நற்குண நற்செய்கை செல்வம் செல்வாக்கு என்னும் இவைகளையும் அறிந்த ஒல்லாந்த அரசினர் தேசவழமையை எழுதுவதற்கு அக்காலத்து விளங்கிய அறிஞர் பன்னிருவரை, ஒருசபையாகக்கூட்டி அச்சபைக்கு வில்லவராய முதலியாரையே தலைவராக நியமனஞ் செய்தனர். இச்சபையார் எழுதிய தேசவழமையே இப்பொழுதும் கையாளப்பட்டுவருவதாகும். அருளம்பலமுதலியார், சந்திரசேகரமாணுமுதலியார், மனப்புலி முதலியார், வன்னியராயமுதலியார், சயம்புநாதமுதலியார், சேனாதிராசமுதலியார், இராசரத்தின முதலியார் முதலிய பிரபுக்கள் நமது வில்லவராய முதலியாரின் தலைமையில் அச்சபையிலிருந்து தேசவழமையை எழுதியுள்ளார்கள்.

1707-ம் ஆண்டு ஏப்பிரல்மீ 5-ந் தேதி இவர்கள் தேசவழமையை எழுதி முடித்தவுடன், ஒல்லாந்த தலைவருக்கு எழுதிய கடிதம் தேசவழமைப்பிரதியிற் காணப்படுகின்றது.

இப்படியான அறிவிற் சிறந்த வில்லவராய முதலியாருடைய புத்திரராகிய இவர் சிறுபராயத்திற் கல்வி கற்றலை அலட்சியஞ் செய்து விளையாட்டிலேயே தம் சிந்தை செல்லப்பெற்றிருந்தாரென்றும், இங்ஙனம் மாடுமேய்க்குஞ் சிறுவருடன் கலந்து தெரு

வில் விளையாடிக்கொண்டு நிற்குஞ் சமையத்தில், இவரது தந்தையாராகிய முதலியாரைக் காணும்படி இந்தியாவிலிருந்து இங்கே வந்த தமிழ்ப்புலவரொருவர், "முதலியாருடைய வீடு எவ்விடத்ததோ" என்று இவரைக் கேட்க, அப்பொழுது ஏழுவயசுப் பராயமுடையவராகிய இவர் வசனத்தில் அப்புலவருக்கு விடைசொல்லாமல்,

"பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்
நன்பூ தலந்தோர்க்கு நன்னிழலாம்—மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்லவரா யன்கனக
வாசலிடைக் கொன்றை மரம்.

எனவிடையிறுத்தாரென்றுஞ்சொல்வர். அதன்பின்பே இவர் வரகவியென்பது உலகோர்க்குப் புலனாயிற்று. இவர் வரகவி யென்பதற்கு ஆதாரமாக இன்னும் பல ஐதிகங்கள் உண்டு. அவற்றுள் ஒன்றை மாத்திரம் இங்கே எடுத்துக் காட்டுகின்றோம். இப்புலவர் பால்யத்திற் கல்வி கல்லாது விளையாட்டிலேயே மனஞ்செல்வாராய்த் திரிவதைக் கண்ட தகப்பனார் பலமுறை புத்தி புகட்டியும் கடிந்தும் தண்டித்தும் இவரைத் திருத்த முயன்று இயலாமை கண்டு தம்வீட்டைவிட்டு அகற்றிவிட்டனர். தந்தையார் இவ்வண்ணஞ் செய்தாரேனும், "பொல்லாத சேயெனில் தாய் தள்ள நீதியோ, புகலிடம் பிறிதுமுண்டோ" என்றவாறாய் இவர் தாயார் தம்பிள்ளையை முதலியார் இல்லாத சமையம்பார்த்து வீட்டிற்குவந்து உண்டுவிட்டுப் போகும்படி இரகசியமாக ஒழுங்கு செய்திருந்தார். இப்படித் தினந்தோறும் கரவாக வீட்டிற்கு வந்து தாயிடம் உண்டுசென்ற இவர் ஒருதினம் கூரையின் உட்புறத்தே ஒரு வெள்ளேடு சொருகி இருப்பக் கண்டு அதனை எடுத்துப் பார்த்தபோது, தமது பிதாவின் கையெழுத்தில் ஒரு அந்தாதிச் செய்யுளில் இரண்டு அடிகள் மாத்திரம் வரையப்பட்டிருந்ததைக் கண்டு, மற்றை இரண்டு அடிகளையும் எழுதி அச்செய்யுளைப் பூரணமாக்கி ஏட்டினைப் பழையபடி சொருகிவிட்டு விளையாடப் போய்விட்டார். அன்று சிறிது நேரஞ்செல்லத் தம் வீட்டிற்கு மீண்டு வந்த முதலியார் தாம்பாடிக் கூரையில் வைத்த செய்

யுளை நிரப்பும்படி அந்த ஏட்டை எடுத்துப் பார்த்தபோது ஈற்றடி யிரண்டும், தாம் எண்ணியிருந்ததினும்பார்க்க அதிக சொற்சுவை பொருட்சுவைகளோடு வரையப்பட்டிருத்தலைக் கண்டு அற்புதங்கொண்டு "இங்கு யார் நான் இல்லாத நேரத்தில் வந்தார்" என்று தம் மனைவியாரை வினவ, அவர் சிறிது யோசித்துவிட்டுப் பின்னர் "உங்கள் மகனைத் தவிர வேறு எவரும் இங்கே வரவில்லை" என்று தெரிவிக்க, முதலியார் அடங்கா மகிழ்ச்சி கொண்டு தன்மகனைக் கூப்பிடுவித்து அன்பு பாராட்டி வித்தை கற்பித்து வந்தனர். நமது புலவர் வரகவியாயிருந்ததோடு மாத்திரம் அமையாது இலக்கண இலக்கியங்களைச் சந்தேக விபரீத மற ஆசானிடத்திற் கிரமமாகப் பயின்றுள்ளா ரென்பது, அவர் இயற்றிய நூல்களை ஆராய்வார்க்குத் தெற்றெனப் புலப்படும்.

மேலும் நமது புலவர் புராணேதிகாசங்களை நன்கு ஆராய்ந்து அவற்றின்கண்ணுள்ள நுண்பொருளையுணர்ந்துள்ளா ரென்பது கீழ் வரும் ஐதிகத்தால் இனிது விளங்கும். ஒல்லாந்தர்காலத்தில் உத்தியோகம் அரச சந்மானம் என்னுமிவைகளோடு வாழ்ந்த கணேசையர் என்பவர் தமது இல்லத்திற் பல வித்துவான்களை அழைத்து நாள்தோறும் இராமாயணத்திற்கு அர்த்தஞ் சொல்லுவித்துவந்தாரென்றும், ஒருதினம் அவ்வித்துவான்கள் கம்பசூத்திர மொன்றிற்குப் பொருள்காண வியலாது மயங்கியவிடத்து, இப்புலவர் அதன் பொருளை அச்சபையிலுள்ளார்க்குத் தெள்ளிதில் விளக்கிச் சபையோரை அற்புதமுறச் செய்தாரென்றும், அதற்கு மகிழ்ந்து கணேசையர் நல்லூரிலுள்ள பண்டாரக்குளம் என்னும் வயலைப் புலவருக்குச் சந்மானமாகக் கொடுத்தாரென்றும் வரலாறுண்டு.

சின்னத்தம்பிப்புலவரவர்கள் இயற்றிய நூல்கள் மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, கரவை வேலன்கோவை, பறாளை விநாயகர் பள்ளு என்னுமிவைகளாம். இவற்றுள் முதனின்ற இம்மறைசையந்தாதியை, நமது புலவர், சிதம்பரம் வேதாரணியம் முதலாம் சிவஸ்தலங்கட்கு யாத்திரை சென்ற காலத்து வேதார

ணிமேசுவரர் மீது பாடினரென்ப. இவ்வந்தாதிக்கு உடுப்பிட்டி, அ. சிவசம்புப் புலவரும், மதுரை மகாவித்துவான் சபாபதிமுதலியாரும் தனித்தனி உரை இயற்றியுள்ளனர். இவ்வந்தாதி சிவசம்புப் புலவருடைய உரையோடு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் அச்சிடப்பெற்றுள்ளது.

இரண்டாவதாகவுள்ள கல்வளை யந்தாதி சண்டிருப்பாயிலுள்ள புராதன தலமாகிய கல்வளைப்பதியில் எழுந்தருளிய விநாயகர்மீது பாடப்பெற்றதாகும். இதுவும் ஷ சபையாரால் இப்பொழுது புத்துரையோடு வெளியிடப்பெற்றுள்ளது. மூன்றாவதாகவுள்ள கரவை வேலன்கோவை வடமராட்சியைச் சேர்ந்த கரவெட்டியில் வாழ்ந்த வேலாயுதப்பிள்ளை என்னும் பிரபுவின் மேற் பாடப்பெற்றதாகும். இக்கோவையிலுள்ள சில கவிகள் செந்தமிழ்ப் பத்திரிகையில், சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் எழுதிய உரையுடன் வெளிவந்துள்ளன. இந்நூல் முழுவதும் அகப்பட்டுள்ளதெனவும், இது விரைவில் அச்சாகி வெளிவருமெனவும் அறிந்து மகிழ்ச்சியுறுகின்றோம்.

இறுதியிற் சொல்லப்பட்ட பறாளை விநாயகர் பள்ளு, சுழிபுரத்தைச் சேர்ந்த பறாளை (பறளாய்) என்னுந் தலத்திற் கோயில் கொண்டருளிய விநாயகக்கடவுள்மேற் பாடப்பெற்றது; சொற்சுவை பொருட்சுவை மலிந்தது. இது மலாய—சுழிபுர ஐக்கிய சங்கத்தின் பொருளுதவிகொண்டு, வித்தியாபிமானியாகிய திரு மயிலை சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையாற் பரிசோதித்து அச்சிடுவிக்கப்பெற்று வெளிவந்திருக்கின்றது.

இந்நூலாசிரியர்காலத்து விளங்கிய தமிழ்ப்புலவர்கள், கூழங்கைத்தம்பிரான், சித்தாந்தசரபம் சொக்கலிங்கதேசிகர், சிவராத்திரி புராணம் ஏகாதசிபுராணம் முதலியவற்றை இனிது பாடிய வரதராஜகவிராசர், புலியூரந்தாதி யாழ்ப்பாணவைபவம் என்னும் இவைகளை இயற்றிய மாதகல் மயில்வாகனப்புலவர் முதலியவர்களாவர். வரதராஜகவிராசர் இயற்றிய சிவராத்திரி புராணத்திற்கு, இந் நூலாசிரியராகிய சின்னத்தம்பிப்புலவரும் மாதகல்

மயில்வாகனப் புலவரும் பாயிரம் பாடியுள்ளனர். இவற்றால் ஒல்லாந்தர் தமது யாழ்ப்பாணத்தைப் பரிபாலித்த காலத்தில் தமிழ்மொழி பெரிதும் விருத்தியடைந்த தென்பதும், பல அரிய நூல்கள் தமிழிற் செய்யப்பட்டன வென்பதும், இந்த ஆங்கில பரிபாலன காலத்திலேயே தமிழ்மொழி அதோகதி யடையலா யிற்றென்பதும் நன்கு புலப்படும்.

இவை இங்ஙனமாக, இப்புலவரது வரலாற்றை எழுதிய சரித்திர நூலாசிரியர்கள் சிலர் இவரது தந்தையாராகிய வில்லவராய முதலியாரையும் பிற்காலத்திலிருந்த வில்லவதாச முதலியார் என்பவரையும் ஒருவரென மயங்கி எழுதியிருப்பக் காணப்படுகிறது. வில்லவராயமுதலியார் நல்லூரை ஜெந்மஸ்தானமாகக் கொண்டவர்; இவர் தேசவழமைச் சங்கத்தில் தலைமை வகித்திருந்துத் தேசவழமையை எழுதி முற்றுவித்த தினம் 1707-ம் ஆண்டு ஏப்பிரல் மாசம் 5-ந் தேதி என்பதை மேலே காட்டியுள்ளோம்: இனி மற்ற வில்லவதாச முதலியார் காலம் இம்முதலியாருக்கு 140 வருடம் வரையிற் பிந்தியதாகும். இத்தாச முதலியாரின் இயற்பெயர் தாமோதரர் சிற்றம்பலமாகும். இவர் சங்கானை மடப்பத்தைச் சேர்ந்தவர்; ஜெந்மவூருஞ் சங்கானையாகும். பெண் கொண்டு வசித்த ஊர் சண்டிருப்பாயென்பர். சென்ற 1849-ம் ஆண்டு மேமீ 25உ இவ்வில்லவதாச முதலியார் தமது கைச்சாத்தோடு முடித்துக்கொடுத்த நன்கொடை உறுதிச் சாதனமொன்றை நாம் நேரிற்பார்த்துள்ளோம். இவரை நேரில் அறிந்த காலங்கண்ட முதியோர் சிலர் இப்பொழுதும் உள்ளனர். சண்டிருப்பாயில் "முதலியார் வளவு" என வழங்குங் காணியும் இவருடையதேயாகும். இந்த ஆதாரங்களால் நல்லூர் வில்லவராய முதலியார் வேறு, சண்டிருப்பாய் வில்லவதாச முதலியார் வேறு என்பது ஆசங்கையின்றி இனிது விளங்கக்கிடக்கின்றது.

கணபதி துணை.

மறைசையந்தாதி

மூலமும் உரையும்.

காப்பு.

அந்தமு மாதியு மில்லா மறைசையி லத்தர் தம்மேற்
செந்தமிழ் நூற்பொரு ளந்தாதி பாடச் சிலம்பிலன்னை
யிந்தன வாணுதற் சுந்தரி யம்பிகை யீன்றெடுத்த
சுந்தர வீரகத் திச்சே தகன்றாட் டுணை துணையே.

(இதன் பொருள்.) அந்தமும் ஆதியும் இல்லா மறைசையில் அத்தர் மேல்-முடிவும் முதலும் இல்லாத வேதாரணியத்துச் சிவபெருமான்மேல், செந்தமிழ் நூல் பொருள் அந்தாதி பாட-செந்தமிழ் நூலில் வழங்கும் பொருளையுடைய அந்தாதியைப் பாடுதற்கு, சிலம்பில் அன்னை இந்து அனவாள் நுதல் சுந்தரி அம்பிகை ஈன்று எடுத்த - (இமைய) மலையிலுதித்த மாதாவாகிய பிறையை யொத்த ஒளியைக்கொண்ட நெற்றியையுடைய பார்வதிதேவி பெற்ற, சுந்தர வீரகத்திச் சேதகன் துணைத்தாள் துணை-அழகையுடைய வீரக் கொலையாலாய (பழியைத்) துடைத்தவராகிய கணேசரது உபய திருவடிகளும் (எனக்குத்) துணையாகும் என்றவாறு;

இல்லா என்னுமீறுகெட்ட பெயரெச்சம், பெரியபுராணத்தில், "அங் கண ரோலைகாட்டி யாண்டவர் தமக்குநாடு" என்றவாறு பாலிழுக்கின்ற அத்தரோடு முடிந்தது. தம் சாரியை. சுந்தரத்தைத் தாளோடு சேர்ப்பினு மமையும். தாளென்பது, "எருமைநாற்கானீர்க்கீழவ்வே" என்றதுபோல முற்றும்மை விகாரத்தாற்றொகின்றது. ஏ ஈற்றசை. அந்தாதியென்பது, தண்டியலங்காரத்தில், "செய்யுளென்பவை தெரிவுறக் கிளப்பின்-முத்தகங்குளகந் தொகை தொடர் நிலையென-வெத்திறத் தனவு மீரிரண்டாகும்" என வரையறுத்து, "சொல்லினும் பொருளினு மிருவகை தொடர்நிலை" என வகுத்து, "செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே" என விரித்ததி லமைவதென்க. பஃறொடையவாய் நேரிசை இன்னிசை யென்னும் பகுப்போடு பட்டவற்றின் மேற் பஃறொடைவெண்பாவென்னும் பெயர்வழங்காமைபோல, சொற்றொடர் நிலையவாய்க் கலம்பகம்நான்மணிமாலை யென்னும் பகுப்போடு பட்டவற்றின்மே லிப்பெயர் வழங்காதாயிற்று. இதுவுங் கலம்பகமும் முதலிய வெழுத்துத் தொடர்நிலையாய் வருவனவுமுள; அவை யாண்டமையப்படுமெனிற் கமுகந் தோட்டமென்றாற்போல நின்ற இச்சொற்றொடர்நிலையிற்றானே யமையுமென் பது. இதனாற் சொற்றொடர் நிலையே சிறப்பும் பெருவரவும் ஆசிரிய ரிலக்க ணஞ்செய்த காலத்து நிகழ்வுமென்க.

நூல்

திருவா ரணங்கு மணமகன் பூசித்த செல்வர் வெள்ளைக்
கருவா ரணங்குமி றும்பண்ணை சூழ்மறைக் காடரிசை
மருவா ரணங்கு திரையாரைப் பாடுமென் வாய்க்கவிதைக்
கிருவா ரணங்குசெய் பூண்முலைப் பாமயி லென்றுணையே.

இ—ள்: திரு ஆர் அணங்கு மணமகன் பூசித்த செல்வர்-இலக்குமியாகிய அருமையான தெய்வமாதுக்குத் தலைவரான புருஷோத்தமர் அருச்சித்த பகவரும், வெள்ளைக் கரு வாரணங் குமிறும் பண்ணை சூழ் மறைக்காடர்-வெண்மையாகிய சூலையுடைய சங்குகள் முளங்கும் வயல் சூழ்ந்த வேதாரணியத்தையுடையவரும், இசை மருவு ஆரணங் குதிரை யாரை-இசைபொருந்திய வேதமாகிய குதிரையை யுடையவருமாகிய சிவபெருமானை, பாடும் என் வாய்க் கவிதைக்கு-பாடுகின்ற எனதுவாயிற் பாட(லினிது முடிதற்)பொருட்டு, வார் அணங்கு செய் பூண் இருமுலைப்பாமயில் என் துணை-கச்சுக்கு வருத்தத்தைப் புரியும் ஆபரணத்தைததாங்கிய இரண்டு தனத்தையுடைய கலைமகள் எனது துணை எ-று.

திரு ஆர் அணங்கு என்பதற்கு இலக்குமிக்கும் பூமிதேவிக்கும் எனப் பொருள் கூறினுமமைம். ஆர் பூமிக்காதலை சூடாமணி நிகண்டில் "ஆர் கூர்மை யாத்தி சோதி பம்புவி பாகுமாமே" என்பதனாலுணர்க. ஆரணங் குதிரையாரை யென்பது, மெலிக்கும் வழி மெலித்தல். செல்வர் மறைக் காடார் குதிரையாரைப் பாடும் என்றதும் மேல்வருமின்னவும், "ஒருபொருண் மேற் பல பெயர்வரினுறுதி-யொருவினை கொடுப்ப" என்னும் நன்னூல்விதியிலமைவன. திரு என்பது மங்கலமொழி (க)

என்று டலையொன்று காலனைத் தாக்கி யெழிற்கனக
மன்று டலைச்செய்து வான்பர வைப்பெயர் மண்ணும் விண்ணுஞ்
சென்று டலைக்கடை வாயிற் படியினிற் சேர்ந்துவைகு
முன்று டலைவைப் பதுமறைக் காட்டி லுறைபரனே.

இ—ள்: மறைக்காட்டில் உறை பரனே-வேதாரணியத்தில் வீற்றிருக்கின்ற கடவுளே, ஆடல் ஒன்று காலனைத் தாக்கி - வலிபொருந்திய நமனையுதைத்தும், எழில் கனக மன்று ஆடலைச் செய்து-அழகையுடைய பொன்னம்பலத்தி லானந்த நடனத்தைச் செய்தும், வான் பரவைப் பெயர் மண்ணும் விண்ணுஞ் சென்றுள் தலைக் கடைவாயில் படியினில் சேர்ந்து வைகும் உன் தாள்-பெருமையாகிய பரவையென்னும் பெயர் பூமியிலும் ஆகாயத்திலும் செல்லப்பெற்றுளது தலைவாயிற்படியினிற் சேர்ந்துமிருந்த நுமது திருவடியை, தலைவைப்பது என்று-(என்) சிரத்தில் வைப்பது எப்போது எ—று.

ஆடலை என்பதின் ஐ சாரியை. கடைவாயில் ஒருபொருட் பலபெயர். உன் தாள் என்பது, "உன்னன்புடையவொரு மகவு மீங்கிலை" என்னுங் கந்த புராணச் செய்யுள்போல நின்றது. (௨)

பரமரம் பாலிகைச் செம்பவ ளக்கொடி பங்கர்சுரும்
பரமரம் பானை யெரித்தார் மறைசைப் பதியர்வரிப்
பிரமரம் பாடிய பொற்கொன்றைத் தாமரைப் பேசுதியோர்
தரமரம் பாவிநெஞ் சேவினை யாங்கருந் தாதினுக்கே.

இ—ள்: பாவி நெஞ்சே-பாவியாகிய மனமே, பரமர்-முன்னானவரும், அம் பாலிகைச் செம்பவளக்கொடி பங்கர்-அழகாகிய அநாமாய செம்பவளத்தையுடைய வல்லிபோல்வாரைப் பாகத்தி லுடையவரும், சுரும்பர் அமர் அம்பானை எரித்தார்-வண்டுகளிருக்கின்ற மலர்ப் பாணத்தை யுடையானாகிய மதனை யெரித்தவரும், மறைசைப் பதியர் - வேதவனமாகிய பதியை யுடையவரும், வரிப் பிரமரம் பாடிய பொன் கொன்றைத் தாமரை-வரியைக்கொண்ட வண்டுகள் பண்ணைப் பாடும் பொன்போலுங் கொன்றைமாலையையுடையவருமாகிய சிவனை, ஓர் தரம் பேசுதி-ஒருமுறை துதி, வினை ஆங் கருந்தாதினுக்கு அரம்-(அத்துதி) வினையாகிய இருமபை தேய்ப்பதற்கு அரமாகும்.

பொன் அழகுமாம். பிரயோகவிவேகத்தில், "கொள்வோன் விடநிகழ்கின்ற குத்தாதர்த்தியாதி" என்ற சூத்திரத்தில் ஆதிசத்தத்தினாற் கருந்தாதினுக்கு என்பதின் நடுவில் தேய்க்கவென்னுஞ் சொல்லுப்பெய் துரைக்கப்பட்டது, "துன்பத்துக்கியாரே துணையாவார்" என்றதுபோல. மேல் மையற் பிணிக்கு என வருவது மிது. (௩)

கருந்தாதை யன்ன கயவர்தம் மீதிற் கவிதை சொல்லி
வருந்தாதை யாநநன் வேதா ரணியன்வை வேற்குகனைத்
தருந்தாதை தெய்வ மணங்கமழ் சேவடித் தாமரைமேற்
பொருந்தாதை யோநினை வில்லாவென் சித்தப் பொறிச்சுரும்பே.

இ—ள்: என் நினைவு இல்லாச் சித்தப்பொறிச் சுரும்பு-எனது நினைவு இல்லாத மனமாகிய பொறியையுடைய வண்டு, கருந்தாதை அன்ன கயவர் மீதில் கவிதை சொல்லி வருந்தாது-இரும்பை யொத்த (வன்னெஞ்சையுடைய) கீழ்மக்கள்மேற் பாட்டைப் பாடி வருந்தாமல், ஐயாநநன்-ஐந்து திருமுகங்களை யுடையவரும், வேதாரணியன்-மறைக்காட்டை யுடையவரும், வை வேல் குகனைத் தருந்தாதை - கூரிய சத்தியைக்கொண்ட குமாரக்கடவுளைத் தந்த பிதாவுமாகிய சிவனது, தெய்வ மணங் கமழ் சேவடித் தாமரை மேல் - தெய்வமணங் கமழாநின்ற செம்மையாகிய பாதாரவிந்தத்தின்மேல், ஐயோ பொருந்தாது-அந்தோ பொருந்துதல் செய்திலது எ—று. (௪)

சுரும்பர வைக்கிசை தாமரை யோவிடந் தொல்புவியோ
தரும்பர வைக்க ணியலேது தூதிருட் காலமுல்லை
யரும்பர வைப்பயி லும்வா ணகையல்கு லன்னமென்ன
வரும்பர வைக்கு நடந்தார் மறைசை வரையிறையே.

இ—ள்: முல்லை அரும்பு (பயிலும்) வாள் நகை - தளவமுகையை யொத்த வொளியைக்கொண்ட பல்லையும், அரவைப் பயிலும் அல்குல்-சர்ப்ப படத்தையொத்த நிதம்பத்தையுமுடைய, அன்னம் என்ன வரும் பரவைக்கு-அன்னத்தைப்போல நடக்கும் பரவையாரிடத்தில், இருள் காலந் தூது நடந்தார் மறைசை வரை இறையே-இருளையுடைய விராக்காலத்திற் (சுந்தரமூர்த்தி நாயனாருக்காகத்) தூதுபோன சிவபெருமானது வேதவனத்து மலையில் தலைவனே, கரும் பரவைக் கண் இடம் - (நின்னிறையை வாங்கிய) கரிய கடலை யொத்த கண்ணையுடையாளுக்கு இடம், சுரும்பர் அவைக்கு இசை தாமரையோ-வண்டுகளுக்கு ஏற்ற தாமரைமலரோ?, தொல்புவியோ - (அல்லது) பழைய பூமியோ?, இயல் ஏது-இயல் யாது? (சொல்லுதி) எ—று.

அவை பகுதிப்பொருள் விகுதி. வாணகையல்குலன்னமென்ன வரும் பரவைக்கு என்பது, திருமுருகாற்றுப்படையில் "பலர்புகழ் திணிதோ - ளுமையமர்ந்து விளங்கு - மிமையாமுக்கண் மூவெயின் முருக்கிய - முரண் மிகு செல்வனும்" என முடிந்ததுபோல முடிந்தது. அன்னமென்னவரும் பரவைக்கு என்பது, இலக்கணக்கொத்தில் "பலசொல்லினையே யொருசொல் லாகவும்" எனக் கூறிய விதியமைந்து, "வெருவந்த செய்தொழுகும் வெங் கோலன்" என்பதுபோல நின்றதெனினுமாம். பரவைக்கு என்பது, "கிளை யரிநாணற் கிழங்கு மணற்கீன்ற" என்பதுபோல "யாதனுருபிற் கூறிற்றாயி னும் - பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்" என்ற தொல்காப்பிய விதியமைந்து நின்றது. பரவைக்கண் உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த வன்மொழித்தொகை. சொல்லுதி அகப்பாட்டுறுப்பினெச்சம். [எவ்விடத் தெவ்வியற்றென்றல்]. (௫)

வரைச்சங் கரிக்கு மணவாளர் கூடல் வளர்ந்திடுமூ
வுரைச்சங் கரிக்கு வனஞ்சூழ் மறைசையி லுத்தமநா
தரைச்சங் கரிக்கு விடப்பாணி சக்கிரந் தானைதொட்ட
திரைச்சங் கரிக்குந் தெரியாப் பதகிழல் சேர்மின்களே

இ—ள்: வரைச்சங்கரிக்கு மணவாளர்-மலையிற் பிறந்த உமாதேவிக்கு நாயகரும், கூடல் வளர்ந்திடும் மூவுரைச் சங்கர்-மதுரையில் வளர்ந்த முத் தமிழ்ச்சங்கத்தை யுடையவரும், இக்கு வனஞ் சூழ் மறைசையில் உத்தமநாதர்-கருப்பஞ்சோலை சூழ்ந்த வேதவனத்தில் வாழும் முதன்மையாகிய கடவுளு மாகிய சிவனது, கரிக்கு அச்சம் விட - யானைக்கு (முதலையா லடைந்த) பயம்

நீங்க, பாணி சக்கிரத் தானை தொட்ட-கையிற்றங்கிய சக்கிராயுதத்தைத் தாண்டிய, திரைச் சங்கு அரிக்குந் தெரியாப் பதநிழல் சேர்மின்கள்-கடலிலெழுந்த சங்கையுடைய மாயவனுக்குந் தெரியாத திருவடிநிழலிற் (பிறவிவெய்யி லினைப் பொழிய நீவிர்) சேருவீர் எ—று.

முத்தமிழ்: இயல் இசை நாடகம் என்பன. நாதர்பதமென வியையும். திரை ஆகுபெயர். (சு)

மின்னஞ்சு கங்கைச் சடாதரன் சத்த விடங்கன்றிரை
வன்னஞ்சு கந்தவன் மாமறைக் காடற்கு மாதொரிராப்
பன்னஞ் சுகமென வேள்காம காண்டப் பகழியினு
லின்னஞ் சுகமில்லை யென்றந்தை யோது மிளந்தத்தையே.

இ—ள்: இளந் தத்தையே-இளமையாகிய கிளியே, மின் அஞ்சு கங்கைச் சடாதரன்-(ஒளியினுல்) மின்னல் பயங்கொள்ளுங் கங்கையைத் தரித்த சடாமுடியை யுடையவரும், சத்த விடங்கன்-ஏழாகிய விடங்க மூர்த்தமானவரும், திரை வல் நஞ்சு உகந்தவன்-கடலிலெழுந்த வலிய நஞ்சை விரும்பினவரும், மாமறைக்காடற்கு-பெருமையாகிய வேதவனத்தை யுடையவருமாகிய சிவனுக்கு, மாது ஓர் இரா பன்னஞ்சு உகம் என-(நமது) மங்கை ஓரிரவு பதினைந்து யுகமென்ன, வேள் காமகாண்டப் பகழியினுல்-மதனது காமகாண்டதனு (விலிருந்தெழும்) பாணத்தால், இன்னஞ் சுகம் இல்லை என்றத்தை ஓதும்-இன்னுஞ் சுகமில்லையென்று சொன்னதை (நீர்) சொல்லும் எ—று.

பன்னஞ்சு என்பதற்குச் சொல்லப்படும் ஐந்து என்னினு மமையும். கழிதுயர் விளைத்தலிற் காமகாண்டமென்றுன். தத்தையே ஒதுமென உவப்பினுல் "புறவே தமியேன் பெறவே புகல்வீர்" என்றவாறு முடிந்தது. அல்லது தத்தைபால்பகா வஃறிணைப்பெயராதலிற் கிளிகளேயெனக் கூறி, ஒதும் எனவழாநிலையாக்கினுமாம். இது கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்த பக்கத்துக் கிளியைத் தூதுவேண்டல். (எ)

தத்தலை வேலையன் காணுத வேதத் தனிவனத்து
முத்தலை வேலையன் வெற்பினம் மாது முளரியடி
யத்தலை வேலையன் முட்சொரி பாலை யருஞ்சுரத்து
வைத்தலை வேலையன் பாலெனை காடி வரவெண்ணுமே.

இ—ள்: தத்து அலை வேலையன் காணுத-தத்துகின்ற திரையைக் கொண்ட (பாற்) கடலையுடைய மாயவன் காணுத, தனிவேதவனத்து முத்தலைவேல் ஐயன் வெற்பில் நம்மாது-ஒப்பற்ற திருமறைக்காட்டில் வாழும் முத்தலைச் சூலத்தையுடைய சிவனது மலையில் நமது மங்கை, முளரி அடி-தாமரைமலரைப்போலும் (மெல்லிய) தாளை, அத் தலைவேல் அயல் முள்

சொரி-அவ்விடத்து வேலமரம் பக்கத்தின் முள்ளைச் சொரியும், பாலை அருஞ் சுரத்து வைத்து அலை வேலை-பாலைவனத்திலுள்ள அரிய நெறியில் வைத்து அலையும்போது, அன்பால் என்னை நாடி வர எண்ணும் - அன்பினு லென்னைத் தேடி (யிங்கு) வரக் கருதுவள் எ—று.

ஐயல் போலி. [தலைமகண் மென்மைத் தன்மைக் கிரங்கல்.] (அ)

வரபர சங்கர வேதா ரணிய மடங்கலஞ்சுஞ்
சரபர சங்கர ளம்பொதி வாய்விழித் தையல்பங்கி
னரபர சங்க ரவிபோ லொளியி னணிதிகழும்
புரபர சங்கர வாநம ஞர்வரும் போதத்திலே.

இ—ள்: வர - அநுக்கிரகத்தைக்கொண்டவரே, பர - முன்னானவரே, சங்கர-சுகத்தைச் செய்பவரே, வேதாரணிய-மறைக்காடரே, மடங்கல் அஞ்சுஞ்சரப-நாரசிங்கம் பயந்த சிம்புள்வடிவானவரே, ரசம் (பொதி) வாய் களம் பொதி விழித்தையல் பங்கின் அர-அமுதைப் பொதிந்த வாயையும் நஞ்சைப் பொதிந்த கண்ணையுமுடைய உமாதேவியைக்கொண்ட பாகத்தையுடைய சங்காரகருத்தரே, பர-பரமாத்மாவே, சங்க ரவிபோல் ஒளியின் அணி திகழும் புர-கூட்டமாகிய சூரியரைப்போலச் சோதியினுல் அலங்காரம் விளங்குந் திருமேனியை யுடையவரே, பரசுக் கர-மழுவைத் தாங்கிய கையை யுடையவரே, நமஞர் வரும் போதத்தில் வா - (என்மாட்டுக்) காலன்வரும்போது (மரண வேதனை தீர) வந்தருளும் எ—று.

சங்கரவி என்பதற்குச் சங்கசூரியரெனினு மமையும். சங்கம் ஓரெண். பரச- அங்க என வைத்து, துதிக்கப்படும் அங்கத்தையுடையவரே என்பது மொன்று. ரசம் ஆகுபெயர். அம்மும் அத்துஞ் சாரியை. (கூ)

போதவ னத்த னவிராழி விற்கதை பூட்டுசிலை
மாதவ னத்தன் மனுதிக்கெட் டாத வரதனங்கி
யாதவ னத்த நகுமதி மூன்றுகண் ணன்பொறியார்
வேதவ னத்தன் பதம்பேணிற் பாச விலங்கறுமே.

இ—ள்: போதவன்-தாமரைமலரின் வசிக்கின்ற பிரமனுக்கும், நத்தம் நவிர் ஆழி வில்கதை பூட்டு சிலை மாதவன் அத்தன் - சங்கையும் வாளையுஞ் சக்கிரத்தையும் ஒளியைக்கொண்ட தண்டையும் நாண் பூட்டும் வில்லையுமுடைய மாயவனுக்கும் பிதாவானவரும், மனுதிக்கு எட்டாத வரதன் - மன முதலியவற்றிற்கு அதீதமான வரதரும், அங்கி ஆதவன் நத்தம் நகு மதி மூன்று கண்ணன்-அக்கினியுஞ் சூரியனும் இரவில் விளங்குஞ் சந்திரனுமாகிய திரிநேத்திரத்தை யுடையவரும், பொறி ஆர் வேதவனத்தன் - இலக்குமி வாழும் மறைக்காட்டை யுடையவருமாகிய சிவனது, பதம் பேணில் பாச விலங்கு அறும்-திருவடியைப் பேணினுற் பாசமாகிய விலங்கு அறும் எ—று.

**விலங்க லரிக்குலஞ் சூழ்மறைக் காடன் விரிந்ததுழா
யலங்க லரிக்கரு மாரூரி லோர்புற் றமர்ந்திருக்கு
மிலங்க லரிக்கட் களக்கறை யானைச்சற் றெண்ணுநெஞ்சே
கலங்க லரிக்குநந் தீவினை யான கருங்கலையே.**

இ—ள்: நெஞ்சே-மனமே, விலங்கல் அரிக் குலஞ் சூழ் மறைக்காடன்-மலையிற் சிங்கக்கூட்டஞ் சூழும் வேதாரணியத்திறைவன், விரிந்த துழாய் அலங்கல் அரிக்கு அரும் ஆரூரில் ஓர் புற்று அமர்ந்து இருக்கும் - அலர்ந்த துளவமாலையை யணிந்த மாயவனுக்கு மரிய கமலாலயத்தில் ஒரு புற்றிலும் மகிழ்ந்து வீற்றிருக்கும், இலங்கு அலரிக்கண் களக்கறையானை-(அங்ஙனம் வீற்றிருக்கின்ற) விளங்காநின்ற சூரியனாகிய கண்ணையுடைய களக்கறையானை, சற்று எண்ணு-சிறிது கருதுதி, நந் தீவினை ஆன கருங்கலை அரிக்கும் - (கருதில் அக்களக்கறையான்) நமது தீவினையாகிய கரிய வஸ்திரத்தை அரிக்கும், கலங்கல்-கலங்கேல் எ—று.

களக்கறையானென்பது கழுத்திற் கறையை யுடையானெனவும் களக்கறை யானெனவும் பொருள் பயந்தது. கறையானென்றதற்கிசைய வினையைக் கலையென்றார். மறைக்காடனாகிய களக்கறையானென விசைப்பாருமுளர். (கக)

**கருங்கலை மானுமென் சித்தா சனம்புகுங் கண்ணுதலோ
னருங்கலை மானுறை வேதா ரணிய னணிவரைமேன்
மருங்கலை மாநுதிக் கண்முலை யீருங்கள் வார்தடங்கண்
பொருங்கலை மானொன்று வந்ததுண் டாயிற் புகன்றிடுமே.**

இ—ள்: என் கருங்கலை மானுஞ் சித்தாசனம்புகும் நுதற்கண்ணோன்-எனது கருங்கல்லையொத்த (திண்ணிய) இதையபீடிகையிலும் புகுந்தருளும் நெற்றியிற் கண்ணை யுடையவரும், அருங் கலைமான் உறை வேதாரணியன் - அரிய பாமக ளிருக்கின்ற திருமறைக்காட்டை யுடையவருமாகிய சிவனது, அணி வரைமேல்-அழகைக்கொண்ட மலையில் (வாழும்), மருங்கு அலை மா நுதிக் கண் முலையீர் - இடையை யலைக்கின்ற கரிய நுதியைப் பெற்ற கண்ணை யுடைய தனத்தீர், உங்கள் வார் தடங்கண் பொருங் கலைமான் ஒன்று வந்தது உண்டாயின் புகன்றிடும் - நுமது நீண்ட விசாலமாகிய கண்ணைப்போலும் ஒரு கலைமான் (இப்புனத்து) வந்ததுண்டானாற் சொல்வீர் எ—று.

மாவை முலைக்கு அடையாக்கிற் பெரியவெனப் பொருளுரைக்க. கண் பொருங் கலைமானென்பது "கருநெடுங்கண் போலுங் கயல்கள்" என்பது போல நிற்றலின் விபரீதவுவமையணி. [தலைவனவ்வகைவினாதல்.] (கஉ)

புகரானை யீரு முரியானை வெண்பொருப் பானையெண்ணம்
பகரானை மேய்த்துவெண் பற்றானை யாற்கைப் பகட்டைக் கவ்வி
யகராவை யச்சுட ராழிதொட் டாற்கரி யானைமறை
நகரானை யன்றிச்சொல் லாதிறைஞ் சாதென்ற னுச்சிரமே.

இ—ள்: புகர் ஆனை ஈரும் உரியானை - கபிலநிறத்தைக் கொண்ட யானையி லுரித்த தோலை யுடையவரும், வெள் பொருப்பானை - வெள்ளிய கயிலைமலையை யுடையவரும், எண் அம்பகர்-எட்டுக் கண்ணைக் கொண்ட பிரம னுக்கும், ஆனை மேய்த்து-பசுவை மேய்த்து, வெள் பல் தானையால் கைப் பகட்டைக் கவ்விய கராவையச் சுடர் ஆழி தொட்டாற்கு அரியானை - வெள் ளிய பல்லாகிய படையாற் றுதிக்கையைக்கொண்ட யானையைக் கவர்ந்த முதலை வருந்தப் பிரபையையுடைய சக்கிரத்தைத் தூண்டிய மாயவனுக்கும் அரியவரும், மறை நகரானை அன்றி என் நாச் சொல்லாது சிரம் இறைஞ் சாது - வேதவனத்தை யுடையவருமாகிய சிவனை (ச் சொல்வதும் வணங்கு வது) மன்றி (ப் பிறதெய்வத்தை) எனது நாச் சொல்லாது, தலை வணங்காது.

முதலில் ஆனை கெடுதல்விகாரம் பெற்றது; இரண்டில் ஆனையில் ன் சாரியை. (௪௬)

சிரவர விந்தம் புனைமறைக் காடத்ரி சூலங்கொண்ட
கரவர விந்தம் பணித்தோன் மலைத்தென்றற் கன்றுயிர்க
வரவர விந்த மடநடைக் கோமள வஞ்சியிரு
ளிரவர விந்த மெனக்கிடந் தாள்பின்னை யென்செய்வளே

இ—ள்: அரவு இந்து அம் புனை சிர - பாம்பையுஞ் சந்திரகலையையுங் கங்கையையுந் தரித்த தலையை யுடையவரே, மறைக்காட - வேதவனத்தரே, திரிசூலங் கொண்ட கர - முத்தலைச் சூலத்தைக்கொண்ட (வலக்) கையரே, வர-அநுக்கிரகஞ் செய்பவரே, விந்தம் பணித்தோன் மலைக் கன்றுந் தென் றல்-விந்தமலையைத் தாழ்த்தவராகிய அகஸ்தியமுனிவரது (பொதிய) மலையில் (நின்றெழு) மந்தமாருதம், உயிர் கவர வர - ஆவியைக் கவர வர, மடநடைக் கோமள இந்தவஞ்சி - மடநடையையுடைய இளமையாகிய இப்பெண், இருள் இரவு அரவிந்தம் எனக் கிடந்தாள்-இருளையுடைய இரவில் தாமரைமலர்போ லக் (கூம்பிக்) கிடக்கின்றாள், பின்னை என் செய்வள் - (அவ்வாறு கிடத்தலன் றிப்) பின் யாது செய்வாள்! எ—று.

அர எனக் கொள்ளினுமாம். இது கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்த பக்கத்துத் தலைவி மயலையிறையோன் முன்னர்த் தோழி சொல்லியது. "வாகைதன்பின் கொட்கும் பொதுவியல்பாடாண் புறப்புறம்" என வீரசோழி யத்திற் சொன்னமையின், இத்திறனெல்லாம் புறப்புறம் என்க. (௪௭)

செய்யரைக் கோடியை மாவுரியாரைச் செழுங்கனன்மான்
கையரைக் கோடி புனைமறைக் காடரைக் கண்ணிற்கண்டாற்
பையரைக் கோடிமின் னார்மய லால்வரும் பாவமெல்லா
மையரைக் கோடி யருந்துக ளாவ தறிசித்தமே.

இ—ள்: சித்தமே-மனமே, செய்யரை-செம்மையை யுடையவரும், கோடு இயை மா உரியாரை-தந்தம் பொருந்திய யானையினது தோலை யுடையவரும், செழுங் கனல் மான் கையரை - அழகிய அக்கினியையும் மானையுந் தாங்கிய கையை யுடையவரும், கோடி புனை மறைக்காடரை - கோடி தீர்த்தத்தைத் தாங்கிய வேதவனத்தையுடையவருமாகிய சிவனை, கண்ணிற் கண்டால்-நேத்திரத்தால் தரிசித்தால், பை அரைக்கோடி மின்னார் மயலால் வரும் பாவம் எல்லாம்-நிதம்பத்தையுடைய அரையிலாடையைக்கொண்ட மகளிரது மயக்கத்தால் வரும் பாவம் முழுதும், அரும் ஐயரைக்கோடி துகள் ஆவது அறி - அரிய இரண்டரைக்கோடி துகளாகச் சிதைதலை யறிவாய் எ—று.

பை உவமவாகுபெயர். (௧௫)

சித்திர வன்னிக ருங்கொங்கை பங்கர்செற் றார்புரமூன்
றத்திர வன்னிக் கருணகை யார்க்கிட மாகமநூன்
மித்திர வன்னியும் பூவையுங் கேட்டு வியந்துரைக்கும்
பத்திர வன்னி மரஞ்சேர் மறைசைப் பதியகமே

இ—ள்: அகமே-நெஞ்சே, சித்திர வன்னிகருங் கொங்கை பங்கர்-அழகிய சூதாடு கருவியைப்போலுந் தனத்தையுடைய உமாதேவியைப் பாகத்திலுடையவரும், செற்றார் மூன்று புரம்-பகைவரது முப்புரத்தையும், அத்திர வன்னிக்கு அருள் நகையார்க்கு இடம்-அந்த வலிய அக்கினிக்குக் கொடுத்த சிரிப்பையுடையவருமாகிய சிவபெருமானுக்கு இடமாவது, மித்திர வன்னியும் பூவையும் ஆகமநூல் கேட்டு வியந்து உரைக்கும்-சினேகத்தையுடைய கிளியும் நாகணவாயும் (ஆன்றோரோதும்) ஆகமசாஸ்திரத்தைக் கேட்டு வியந்து பேசுகின்ற, பத்திரவன்னிமரஞ் சேர் மறைசைப் பதி-இலையைக்கொண்ட வன்னிமரஞ்சேர்ந்த வேதவனபுரி எ—று.

சித்திரவன்னி கருங்கொங்கை என்பது அன்மொழித்தொகை. இதனைப் பிரயோகவிவேகத்தில், "இருமொழி பன்மொழி பின்மொழியெண்ணொ டிருமொழியெண்-டருமொழி யொற்றொழி திக்கந்தாளஞ் சகமுனிற்கு-மொருமொழியேனை விதிகார லக்கணத்தோடு வரும் - பெருமொழியாகி வெகு விரியன்மொழிப் பேரடைந்தே" என்னுஞ் சூத்திரத்தானறிக. அத்திர வன்னிக்கு என்பதற்குப் பாணத்தில் நுதியாகிய அக்கினிக்கு எனக் கூறினுமமையும். இதில் அத்திரம் ஆகுபெயர். கொங்கை பங்கர் என்பதற்குத்

தனத்தைப் பாகத்திலுடையவரென்பதுமொன்று. வியந்துஎன்பதை வினையெச்சத்திரிபாக்கி வியக்கவெனினுமமையும். அகமே என்பதை இடமாக்கினுமாம். (கசு)

பதிகம் பரிக்குங் குழன்மாத ராயப் பரவையுள்ளே
வதிகம் பரிக்கு நிகர்விழி யாய்மலை மாதுகங்கா
ளிதிகம் பரிக்கு மணியாக மீந்தரு ளீசர்முத்தம்
பொதிகம் பரிக்குந் திரைவேலை வேத புரிவரைக்கே.

இ—ள்: மலை மாது-(இமைய) மலையில் (உதித்த) மங்கையும், கங்காளி - முழுவெலும்பைப் புனைந்தவரும், திக் அம்பரிக்கு - திசையாகிய ஆடையையுடையவருமாகிய உமாதேவிக்கு, மணி ஆகம் ஈந்தருள் ஈசர்-அழகாகிய (பாதித்) திருமேனியைக் கொடுத்த இறைவரது, முத்தம் பொதி கம்பு அரிக்கும்-முத்தைப் பொதிந்த சங்கையரிக்கின்ற, திரை வேலை வேத புரிவரைக்கு-அலையையுடைய கடலை (யோர்சாரிற்கொண்ட) திருமறைக்காட்டு மலையில், அம்பு அரிக்கு நிகர் விழியாய்-பாணத்துக்கும் வண்டுக்குஞ் சமமாகிய கண்ணையுடையாய், பதிகம் பரிக்குங் குழல் ஆய மாதர்ப் பரவையுள் வதிக - பாசியை வருத்துகின்ற கூந்தலையுடைய தோழிப்பெண்களாகிய கடலுளிருக்கக்கடவை எ—று.

பதிகம் இப்பொருளாதலை இரகுவமசத்தில், "செறியணிப்பதிகத்திடை வளரிளஞ்சேல்கள்" என்னுஞ் செய்யுளானுணர்க. பரிக்குங்குழல் என்பதற்குத் தாக்கினுற் போன்ற கூந்தலெனினுமாம். மிகுதிபற்றிப் பரவையென்றான். உள்ளே என்பதின் ஏ இசைநிறை. வதிக என்பது ஈறுகெட்டது. வதுநி என்பாருமுளர் [ஆபத்துய்த்தல்] (கஎ

புரியார நந்த னறியாப் பதம்பெறப் பொற்கயிலைப்
பெரியா ரனந்தனை வென்னடை பாகர் பிறப்பினிலங்
குரியா ரனந்த வளமறைக் காட்டைக் குறித்திருந்து
மரியா ரனந்தன் சிரமேற் புவித்தல மானவரே.

இ—ள்: புரி ஆர் அம் நந்தன் அறியாப் பதம் பெற-புரி பொருந்திய அழகாகிய சங்கையுடைய மாயவனுமறியாத பாதத்தைப் பெற, பொன் கயிலைப் பெரியார்-அழகைக்கொண்ட கைலாசத்தில் வீற்றிருக்கும் பெரியவரும், அனந்தனை வெல் நடை பாகர்-அன்னத்தை வென்ற நடையைக் கொண்ட உமாதேவியைப் பாகத்திலுடையவரும், பிறப்பினில் அங்குரியார்-பிறவியில் முளையாதவருமாகிய சிவனது, அனந்தவளமறைக் காட்டைக் குறித்திருந்து-அளவற்ற வளத்தைக் கொண்ட வேதாரணியத்தைக் கருதியிருந்து, அனந்தன் சிரப் புவித்தல மேல் மானவர் மரியார்-சேடனது தலைக்கட்டங்கிய நிலவுலகத்தின் மேலிடத்துள்ள மனுடரிறவார் எ—று.

அரந்தன் எனக் கொண்டு அந்தரநந்தனென்றும், புரி ஆர நந்தன் எனக் கொண்டு புரியையும் முத்தையுமுடைய நந்தனென்று முரைக்கினு மமையும். (௧௮)

மானத் தரக்கரந் தைப்பட வீர்ந்துரி வாங்கினர்கற்
றூனத் தரக்க ரரசுட்க வூன்றிய தாளர்குடப்
பானத் தரக்கர விந்தத்தின் மேற்றுயில் பண்ணைமறைக்
கானத்த ரக்கர மைந்துணர் வீர்வினைக் கட்டறுமே.

இ—ள் மானத் தரக்கு அரந்தை பட ஈர்ந்து உரிவாங்கினர்-வலியைக் கொண்ட புலி இடருற இழுத்துத் தோலைக்கொண்டவரும், கல்தானத்து அரக்கர் அரசு உட்க ஊன்றிய தாளர்-(கயிலை) மலையாகிய இடத்தின்கண் இராக்கத இராசனாகிய இராவணன் அஞ்ச ஊன்றிய திருவடியையுடையவரும், குடப் பால் நத்து அரக்கு அரவிந்தத்தின் மேல் துயில் பண்ணை மறைக்கானத்தர் - குடத்தைப்போலும் வெண்மையாகிய சங்குகள் சிவப்பாகிய தாமரைமலரில் துஞ்சுகின்ற வயல் (சூழ்ந்த) வேதவனத்தையுடையவருமாகிய சிவபெருமானது, ஐந்து அக்கரம் உணர்வீர் வினைக் கட்டு அறும்-பஞ்சாக்கரத்தை அறிமின், வினைத்தளை அறும் எ—று.

அரந்தைப்பட விரித்தல் விகாரம். ஊன்றியது பெருவிரலாலாகவும் முதல் சினையொற்றுமை கருதித் தாளிலேற்றினார். தாள் ஆகுபெயரென்னினுமமையும். அரக்குத் தேனுமாம். (௧௯)

அறுத்தவித் தாரச் சமைத்தபிள் ளைக்குகந் தார்பொதியக்
குறுத்தவித் தார முனிக்கருள் கோலக் குழகராராப்
பொறுத்தவித் தாரணி யேத்தா ரணபுரம் போந்துகரு
வறுத்தவித் தாக்கும தல்லாது வேறு மருந்தில்லையே.

இ—ள்: அறுத்து அவித்து ஆரச்சமைத்த பிள்ளைக்கு உகந்தார்-அறுத்து அவித்து முற்றச்சமைப்பித்த (சிறுத்தொண்டநாயனாரது) பிள்ளைக் கறியை மகிழ்ந்தவரும், பொதிய வித்தார குறுத்த முனிக்கு அருள் கோலக் குழகர்-பொதியமலையில்வாழும் விற்பன்னத்தையுடைய அகஸ்திய ரிஷிக்குக் காட்டிய திருமணக்கோலவழகை யுடையவருமாகிய சிவனது, அராப் பொறுத்த இத்தாரணி ஏத்து ஆரணபுரம் போந்து-(சேஷனாகிய)சர்ப்பந் தாங்கிய இந்நிலத்தார்கள் துதிக்கும் வேதபுரியிற் போய், கருவறுத்த வித்து ஆக்கும்-கருவைவறுத்த விதைஆக்குமின், அதுஅல்லாது வேறுமருநது இல்லை-(அங்ஙனம்ஆக்குதற்கு)அந்தவேதபுரியன்றிப் பிறிது மருந்தில்லை எ—று.

ஆரணபுரம் போந்து என்பது, "புலம் புக்கனனே" என்றது போல நின்றது. (௨௰)

மருக்கர வீரநின் னோதியைக் காரென் றுமாஞ்ஞையெல்லா
முருக்கர வீர வயில்விழி யாய்நட முற்றனவைந்
திருக்கர வீரகத் திச்சே தகன்றந்தை சீர்மறைசை
யெருக்கர வீர மதிவேணி வெற்பி லெழிலியன்றே.

இ—ள்: ஐந் திருக் கர வீரகத்திச் சேதகன் தந்தை-ஐந்து திருக் கைகளையுடைய வீரகத்திச் சேதகராகிய விநாயகரது தாதையும், சீர் மறைசை எருக்கு அரவு ஈர மதி வேணி வெற்பில்-செல்வத்தைக் கொண்ட வேதவனத்தில் வீற்றிருக்கும் எருக்கலரையும் பாம்பையும் குளிர்ச்சியுடைய சந்திர கலையையுந் தாங்கிய சடையையுடையவருமாகிய சிவனது மலையில், உருக்கு ஆர வீர அயில் விழியாய்-உருக்காரத்தையும் வீரத்தைப் பெற்ற வேலையுமொத்த கண்ணையுடையாய், மஞ்ஞை எல்லாம்-(இந்நிலத்து வாழும்) மயில்கள் யாவும், நின்மருக் கரவீர ஓதியைக் கார் என்று நடம் உற்றன எழிலி அன்று-நினது வாசத்தையுடைய அலரிப்பூவைப் புனைந்த கூந்தலை மேகமென்னக் கருதி நடித்தன; இது கார்காலமன்று எ—று.

விழிக்கு அரம் உவமையாதலைக் கம்பரந்தாதியில், "களங்கண் முகங் கம்பரந்தாதியைகஞ்சமன்னாள்பங்கனே" என்னுஞ் செய்யுளானுணர்க.
[இருளாவம்பென்றல்.] (உக)

அன்றாலி னாட்டந் துயின்றோ னிகரண்ண லேதிருமான்
பொன்றாலி நாட்டநஞ் சுண்டார் மறைசைப் பொருப்பகத்தி
லொன்றாலி நாட்டவழ் கார்போலும் வார்குழ லொண்டொடியூர்
குன்றாலி நாட்டவர் கொள்ளா ருனது குளிர்முத்தமே.

(இ—ள்) அன்று ஆலில் நாட்டந் துயின்றோன் நிகர் அண்ணலே—அக் காலத்தில் (ஆலிலையிற்) கண்வளர்ந்த புருஷோத்தமனையொத்த தலைவனே, திருமான் பொன் தாலி நாட்ட நஞ்சு உண்டார் மறைசைப் பொருப்பு அகத்தில்—இலக்குமியினது பொன்னுலாய தாலியை நாட்டுதற்கு நஞ்சை யுண்டாராகிய தம்பிரானாரது வேதாரணியத்து மலைக்கண், ஆலி ஒன்று நாள் தவழ் கார்போலும் வார் குழல் ஒள் தொடி ஊர் குன்று—ஆலங்கட்டி பொருந்தாநின்ற மழைக்காலத்துத் தவழும் மேகத்தைப்போலும் நீண்ட கூந்தலையும் ஒள்ளிய வளையலையுமுடையாளது பதி மலையாதலால், இந் நாட்டவர் உனது குளிர் முத்தங் கொள்ளார்—இந்த நாட்டார்கள் உனது குளிர்ந்த முத்தமாலையை (இவள்மேற்கண்டாலததனை யிவளுக்குரிய அணி யென்று) கொள்ளார் (ஐயுறுவர்) எ-று.

நின்னைப் புரப்பேமென்பது படப் பொன்றுலிநாட்ட நஞ்சுண்டார் மறைசைப்பொருப்பென்றாள். திருமான் பொன்றுவிநாட்ட நஞ்சுண்டார் என்னுந் தொடர் பிறிதினவிற்சி யணி [கையுறை மறுத்தல்.] (உஉ)

முத்திரு மாதங்க வார்முலை பாகர் முதுமறைசை
மெய்த்திரு மாதங்க மாற்கரி யானை விளம்புகிலீர்
பத்திரு மாதங்க கருவயி னூறிய பாழுடம்பை
வைத்திரு மாதங்கத் தென்றிசைக் கூற்று வருங்கடைக்கே.

(இ-ள்)முத்து வார் மாதங்க இரு முலை பாகர்—முத்தமாலையையுங் கச்சையையும்(புனைந்த)யானைத்தந்தத்தைப்போலும் உபயஸ்தனத்தையுடைய உமாதேவியைப் பாகத்திலுடையவரும், முது மறைசை மெய்த் திரு மாது அங்கமாற்கு அரியானை விளம்புகிலீர்—பழைய வேதவனத்தில் வீற்றிருக்கின்றவரும் மெய்ம்மையாகிய இலக்குமியை மார்பிற்கொண்ட மாயவனுக்கும் அரியவருமாகிய சிவனைத் துதிக்கின்றிலீர், பத்து மாதம் இருங் கருவயின் ஊறிய பாழ் உடம்பை வைத்து இரும்—பத்துத்திங்களளவும் பெரிய கருவிடத்திலூறிய பாழான காயத்தை வைத்துக்கொண்டு இரும், ஆதங்கத் தென்திசைக்கூற்று கடைக்கு வரும்—தாபத்தை விளைக்கின்ற தெற்குத்திக்கில் யமன் முடிவில் வருவன் எ-று.

பத்திருமாதம் என்பதற்குப் பன்னிருமதி யென்பதுமொன்று. அப்பொருள்கூறில், முதலடியில் இரும் எனவைத்துப் பெருமையாகியவென்க. ஆதங்கம் இப்பொருளாதலைப் பாரதத்தில், "இப்பாராதங்கமாற வருமைவரினைவர்மைந்தர்" என்னுஞ்செய்யுளானுணர்க. கூற்று என்பது, "உயர்திணையீறுபோலஃறிணை வருதலு-மஃறிணை யீறுபோ லுயர்திணை வருதலும்" என்னும் இலக்கணத்திரட்டு விதியான்வந்தது. (உ௩)

வருகர நாக மகவான் பதமும் வனசப்பிரான்
பொருகர ஞகம் பிளந்தான் பதமும் புகலின்மிக்கோ
முருகர நாகர் பணிமா முகரத்தன் மூவர்தமிழ்க்
குருகர ஞக மருங்குழை யாற்பணி யொண்டவர்க்கே.

(இ-ள்) அ நாகர் பணி முருகர் மாமுகர் அத்தன்—அத்தேவர்கள் வணங்குகின்றகுமாரக்கடவுளுக்கும் யானைமுகத்தையுடைய கணபதிக்கும் பிதாவும், மூவர் தமிழ்க்கு உருகு அரன்—(திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர் சுந்தரமூர்த்திநாயனுர் திருநாவுக்கரசு நாயனுராகிய) மூவரது தேவாரத்துக்கு உருகாநின்ற சங்காரகருத்தாவும், அமரும் நாகுக் குழையான் பணி ஒள் தவர்க்கு—பொலிவுற்ற சங்கக்குண்டலத்தை யுடையவரு

மாகிய சிவனை வணங்குகின்ற ஒள்ளிய தவத்தருக்கு, வரு கர நாக மகவான் பதமும்—சரிக்கின்ற துதிக்கையைக்கொண்ட(ஐராவத) யானையையுடைய இந்திரனது பதவியும், வனசப் பிரான் (பதமும்)—தாமரைமலரிலிருக்கின்ற பிரமனது பதவியும், பொரு கரன் ஆகம் பிளந்தான் பதமும் புகலின் மிக்கோ—(வனத்திற்) பொருத கரனது மார்பைப் பிளந்த மாயவனது பதவியும் சொல்லில் மேம்பட்டனவோ, அன்று எ-று.

ஆகம் உடலுமாம். தலப்பெயர் யாண்டும் வரல்வேண்டுமென்னும் யாப்புறலின்மையாலும், திருச்செந்திலந்தாதியில், "சாரங்கஞ் சங்கரி கட்கிச்சித் தேய்ந்தகைச் சங்கரனார்-சாரங்கஞ் சங்கரி தாஞ்சக் கரங்கையிற் றாங்கினன்சேய்-சாரங்கஞ் சங்கரி யானண்ணி னர்க்கந்தத் தந்திரத்தா—சாரங்கஞ் சங்கரி தேயெனச் செய்கின் சரணடைந்ததே" என முடிந்ததனாலும், இது வழுவுடைத்தன்றென்க. (உச)

ஒண்டூதை யுண்புற வீர்மறந் தாரெம தூரர்முன்னாண்
மண்டூதை யாக்கிய சோறீந் திடமகிழ்ந் தார்வயலி
னண்டூதை யால்வெயில் காய்மறைக் காட்டுறை நாகமணி
வண்டூதை யோதிக்குச் செம்பாதி யாதி மணிவரைக்கே.

(இ-ள்) ஒள் தூதை உண் புறவீர்—ஒள்ளியகோடாங்கல்லை யுண்ணும் புறாக்காள், வயலில் நண்டு ஊதையால் வெய்யில்காய் மறைக்காட்டுறை—கழனியில் நெண்டுகள் குளிர்காற்றல் வெய்யில்காயும் வேதவனத்தில் வீற்றிருக்கின்ற, நாகம அணி வண்டு ஊது ஐயோத்திகத்துச் செம்பாதி ஆகி மணிவரைக்கு—டாம்பையணிந்த வண்டுகள்(மகரந்தத்தை) ஊதும் ஐவகையாய் முடிக்கப்படுங் கூந்தலையுடைய உமாதேவிக்குச் செம்பாதி யாகிய சிவனது அழகாகிய மலைக்கண், எமது ஊரர்—நமது ஊரர், முன் நாள் மண் தூதை ஆக்கிய சோறு ஈந்திட மகிழ்ந்தார்— (யாக்கைசொன்றாக முயங்கிய) தலைநாளில் மண்ணாலாய தூதையிலும் அட்டசோற்றையுதவ மகிழ்ந்தவர், மறந்தார்—இந்நாள் மறந்தார் எ—று.

தூதையிலும் என்னும் இழிவுசிறப்புமமை விகாரத்தாற் றொக்கது. நாகம் புன்னைமலருமாம். நாகமணி வண்டூதை யோதிக்குச் செம்பாதியாதி என்பது வல்லமெறிந்த நல்லிளங்கோசர் தந்தை மல்லல்யானைப்பெருவழுதி என்பது போன்ற பொருத்தமில் புணர்ச்சியாயினும் பெருவரவிற்றென்க. உறை அணி என்னும் எச்சவடுக்குகள், ஆதியோடு முடியும். ஐயோதி முடி கொண்டை குழல் பனிச்சை சுருள் என்பன. ஐ அழகுமாம். [பறவையொடு வருந்தல்.] (உரு)

மணிக்குட நாடகன் மாறன் பதாகை வரித்தநுதற்
கணிக்குட ஞட்க வாழுமென் றுலிம்மை காயுமையற்

பிணிக்குட ஞடகப் பொற்கொன்றை வாங்கும் பெருமறைசை
யணிக்குட நாடக மால்பணி யாதி யரனிடத்தே.

இ—ள்: மணிக் குடநாடு அகன் பதாகை வரித்த நுதல் - அழகைக் கொண்ட மேஞட்டிடத்தை யுடையாஞய சேரனது துவசமாகிய வில்லை அமைத்தாற்போன்ற நெற்றியையும், மாறன் (பதாகை வரித்த) கணிக்கு - பாண்டியனது துவசமாகிய மீனை அமைத்தாற் போன்ற கண்ணையுமுடையா ளுக்கு, உடல் நாள் தக வாழும் என்றால் இம் மை காயும் - காயந் தின மேற வாழுமாஞல் இத்தகரை வெட்டுதிர், மையல் பிணிக்கு (என்றால்)- மயக்கநோய் போதலுக்காஞல், அணிக் குட நாடக மால் பணி - அலங் காரத்தைக் கொண்ட குடக்கூத்தையுடைய மாயவன் வணங்கும், பெரு மறைசை ஆதி அரன் இடத்து - பெரிய வேதவனத்தில் வீற்றிருக்கின்ற முதலானவெருஞ் சங்கார கருத்தாவுமாகிய சிவனிடத்தில், ஆடகப் பொன் கொன்றை உடன் வாங்கும் - பொன்போலும் அழகிய கொன்றைமாலையை இப்போதே வாங்குமின் (மறியை யறுக்கவேண்டா) எ—று.

இலக்கணையா யமைத்தற்பொருண்மேல் நின்ற வரித்தவென்பது, கல்லாடத்தில், "கைதை முட்செறித்த கூரெயிற் றரவனை" என்பதுபோல நின்றது. மறைசையணி என நின்றபடி நிற்ப, மறைசையிற் கிட்டி எனப் பொருள் கூறில், தலைவி பிறபதியாளாம். இது சடவுண்மாட்டு மாஞடப் பெண்டிர் நயந்த பக்கத்தில் வெறிவிலக்கி மாலை பெறுவிதகல். (உசு)

இடங்க ரடக்கய மேனின்று கூப்பிட் டிரங்குமந்தத்
தடங்க ரடக்கயங் காதமேதான் சரமனைத் தையல்கன்ம
கடங்க ரடக்கய மேருகு நான்மறைக் கானபுவனி
விடங்க ரடக்கய நீர்போ லெனைமுத்தி மேல்வைப்பரே.

இ—ள்: இடங்கர் அடக் கயம் மேல் நின்று கூப்பிட்டு இரங்கும்- முதலை தெறக் குளத்தின்மேல் நின்று (ஆதிமூலமேயென்று) கூப்பிட்டு இரங்கிய, தடங் கரட அந்தக் கயங் காதமேதான் (ஆகும்) சரம் - பெருமை யாகிய மதம்பாய் சுவட்டையுடைய அந்தக் (கஜேந்திரஞய) யானையைப் புரந்தோஞகிய மாயவஞன பாணத்தையும், கல் மகள் (ஆகும்) மனைத் தையல் - (இமய) மலை (ராச) குமாரியாய உமாதேவியாகிய இல்லக்கிழத்தி யையும், தம் ஏறு ஆகுங் கரடக் கயம் - தமது இடபமாய கையிற் கொடி யையு முடைய, நான்மறைக் கான் புவனி விடங்கர் - நான்மறைக் காட்டில் வீற்றிருக்கின்ற புவனி விடங்கர், அயம் அடக்கும் நீர்போல் எனை முத்தி மேல் வைப்பர் - இரும்பு அடக்கிய சலத்தைப்போல் என்னையும் மோக்கத் தின்கண் வைப்பர் எ—று. (உஎ)

மேல்விண்டு நாயக வில்லார் மறைசை விமலரிடப்
பால்விண்டு வேதன் வலப்பாலு மாகப் படைத்தவர்வா
யால்விண்டு நூனிரை சுற்றுஞ் சிலம்பிக் கரசளித்தாற்
போல்விண்டு முத்தரு மெற்கு மருள்வ ரிப்புன்சொற்கொண்டே.

இ—ள்: மேல் விண்டு நாயக வில்லார் - மேலாகிய மலைகளுக்குத் தலைமையாகிய மேருவாய வில்லையுடையவரும், மறைசை விமலர் - வேதவனத்தின் மலரகிதரும், விண்டு இடப்பா (லும்) வேதன் வலப் பாலும் ஆகப் படைத்தவர் - மாயவன் வாமபக்கத்திலும் பிரமன் வலப்பக்கத்திலுமாகப் படைத்தவரும், விண்டு முத்தரும் - மூங்கில் முத்தானவருமாகிய சிவன், வாயால் விண்டு நூல் நிரை சுற்றுஞ் சிலம்பிக்கு அரசு அளித்தால் போல் - வாயால் விட்டு நூல் நிரையைச் சுற்றிய சிலந்திக்கு இராச்சியத்தைக் கொடுத்தாற்போல, இப்புல் சொல் கொண்டு எற்கும் அருள்வர் - இப்புல்லிய பாடலைக்கொண்டு எனக்குந் திருவருள் செய்வர் எ—று. (௨௮)

புன்னாக வேலி மறைக்காட ரன்பரைப் புண்டரிக
மின்னாக மாதவ னான்முகன் வாசவன் மேற்பதத்தின்
மன்னாக வைப்பவர் காடோடு மாடு மகிழ்ந்துபுன்றோல்
பன்னாக நஞ்சுடை பூணூண தாகப் படைத்தவரே.

இ—ள்: புன்னாக வேலி மறைக்காடர் - புன்னையாலாகிய வேலியையுடைய வேதபுரீசர், வாசவன் நான்முகன் புண்டரிக மின் ஆக மாதவன் பதத்தின் மேல் - இந்திரனதும் பிரமனதும் வனசமங்கையாகிய இலக்குமியைத் தாங்கிய மார்பையுடைய புருஷோத்தமனதும் (சொர்க்க சத்தியலோக வைகுந்த) பதங்களுக்கு மேலாகிய சிவபதத்தில், அன்பரை மன் ஆக வைப்பவர் - அடியாரை நிலையாக வைப்பவர், காடு ஓடு மாடு மகிழ்ந்து - (நடனபூமியாக) மயானத்தையும் (பிக்ஷா பாத்திரமாக) ஓட்டையும் (வாகனமாக) எற்றையு முவந்து, புல் தோல் உடை (ஆக) - புல்லிய தோலை ஆடையாகவும், பல் நாகம் பூண் (ஆக) - பல்லையுடைய பாம்பைப் பணியாகவும், நஞ்சு ஊண் ஆகப் படைத்தவர் - ஆலகாலத்தை யுணவாகவும் பெற்றவர் எ—று.

அது பகுதிப்பொருள்விகுதி. மறைக்காடர் எழுவாய். வைப்பவர், படைத்தவர் பயனிலைகள். வைப்பவர் மறைக்காடர் எனவும், படைத்தவர் மறைக்காடர் எனவும், எழுவாயும் பயனிலையு மாக்கினுமாம். மறைக்காடரும் வைப்பவருமாகிய சிவன் படைத்தவரென்றும், வைப்பவரும் படைத்தவருமானவர் மறைக்காடரென்று மிசைப்பினுமாம். மன் அரசருமாம். பல் பலவுமாம். ஏனையுயிர்களது பற்போலாது விஷத்தை வெளிப்படுத்துந் துளையினைக்கொண்ட சிறப்புடைமையிற் பல்லென்றார். (௨௯)

படைக்கந்த ரத்தர் திருமறைக் காடர் பனிவரைமே
லடைக்கந்த ரத்த நிறத்தா மரைமுகத் தன்னமன்னு
டொடைக்கந் தரத்தம ருஞ்சுரு ளோதிச் சுரும்பினங்கா
ளிடைக்கந் தரம்வரி னுங்களுக் கேபழி யேற்றிடுமே.

இ—ள்: படைக் கந்தர் அத்தர் - வேலையுடைய சுப்பிரமணிய சுவாமிக்குப் பிதாவும், திரு மறைக் காடர், பனி வரை மேல் - வேதவனத்தை யுடையவருமாகிய சிவனது குளிர்ச்சியைக் கொண்ட மலையில், கந்தம் அடை-வாசமடுத்தலையுடைய, ரத்த நிறத் தாமரை முகத்து அன்னம் அன்னாள்—சிவப்பு நிறத்தைக்கொண்ட தாமரை மலர்போலும் முகத்தை யுடைய அன்னம் போல்வாளது, தொடைக்கந்தரத்துச் சுருள் ஓதி அமருஞ் சுரும்பு இனங்காள்—மாலையைப்புனைந்த மேகத்தையொத்த சுருண்ட கூந்தலில் வாழும் வண்டுத்தொகுதிகாள், இடைக்கு அந்தரம் வரின் உங்களுக்கே பழி ஏற்றிடும்—இடைக்கு முடிவுநேரின் (இறந்துபடின் அதனாலாய) பழி நுமக்கேயிசையும் எ-று.

படைக்கலங்களுள் தலைமையாதல் பற்றிப் படையென்றார், நால்வர் நான்மணிமாலையில், "பூவெனப்படுவது பொறிவாழ் பூவே" என்றாற்போல. அடை இக்கலையென்னுமோவெனின், என்னும்; என்னை? அது சினைக்கின்மையின். தாமரையைப் பூவுக்குப் பெயரென்பாருமுளர். அன்னமன்னாள் என்பது, திருக்கோவையாரில், "அம்மாமுலைசுமந்து தேயுமருங்குற் பெரும் பணைத்தோளிச்சிறுநுதலே" என்றதிற் சிறுநுதல்போல நின்றது. மெய் தொட்டுப் பயிலுங் கழிகாதன்மையின் உங்களுக்கே பழியேற்றிடுமென்றான். [மெய்தொட்டுப்பயிறல்.] (௩௦)

ஏற்றுக் கொடியர் திருமறைக் கானத்த ரேழுலகப்
பேற்றுக் கொடியத்தர் திக்காடைநாதனைப் பேணிக்கொண்டேன்
கூற்றுக் கொடியுற்கு மஞ்சே னினியிக் குவலயத்திற்
றோற்றுக் கொடிவரை கேதன மாதுந் தொலைந்தனளே.

இ—ள்; ஏற்றுக் கொடியர்—இடபத் துவசத்தையுடையவரும், திருமறைக் கானத்தர்—திருமறைக் காட்டையுடையவரும், ஏழு உலகப் பேற்றுக்கொடி அத்தர்—சத்தலோகப் பேற்றையுடைய உமாதேவிக்குப் பிதாவானவரும், திக்கு ஆடை நாதரைப் பேணிக்கொண்டேன்—திகம்பர நாதருமாகிய சிவனைப் பேணிக் கொண்டேன், இனிக் கூற்றுக் கொடியற்கும் அஞ்சேன் — (அதனால்) மேல் நமனாகிய கொடியவனுக்கும் பயமுறேன், இக்குவலயத்துக் கொடி வரை கேதன மாதுந் தோறறுத் தொலைந்தனள்—இப்பூமியிற் காக்கையெழுதிய துவசத்தையுடைய மூதேவியுந் தோற்று அழிந்தனள் எ-று.

ஏழ் என்பாருமுளராசிரியர். "பரமசிவன் தன்னுடைய பராசத்தியரு ளாற் பகர்குடிலை தனினுதந் தோன்றுமதில் விந்து—வருமவைகள் சிவஞ் சத்தி யென்னும்போம்" எனத் தத்துவப்பிரகாசத்திற் கூறியபடி சிவதத் துவத்தினின்றுஞ் சத்திதத்துவம் றோன்றினமையின், ஏழுலகப்பேற்றுக் கொடியத்தரென்றார். திருக்கோவையாரில், "தன்னொருபா லவளத்தனும்" என்றதூஉமிது. அத்தர் பாதியானவரெனினுமமையும். (௯௧)

தொலைவே தனையர் கருக்குழி வாய்ப்படுக் தொல்லைச்சன்ம
நிலைவே தனையென் றுழலூசல் போல நினையுநெஞ்சி
னுலைவே தனைய வொருகாலஞ் சேலென் றுரைக்கினென்னுங்
கலைவே தனையன் பணிமறைக் காடவென் கண்முனின்றே.

இ—ள்: வேத கலையன் ஐயன் பணிமறைக்காட - வேதநூலையுடைய பிரமனும் அவனது தந்தையாகிய மாயவனும் வணங்கும் மறைக்காடரே, அனையர் கருக் குழிவாய்ப்படுந் தொல்லைச் சன்ம நிலை வேதனை—தாயரது கருக் குழிக்கட்படும் பழமையாகிய பிறவியாகிய நிலைத்தீ வேதனை, தொலைவு ஏது என்று - அழிதல் யாது என்று, உழல் ஊசல்போல நினையும்- உழலும் ஊஞ்சலது திரிவுபோல நினைக்கின்ற, நெஞ்சின் உலைவு ஏதம் நைய- மனத்தினுலைவுந் துன்பமுங் கெட, என் கண் முன் நின்று - எனது விழிக்கு முன்னின்று, அஞ்சேல் என்று ஒருகால் உரைக்கின் என் - பயப்படேல்- என்று ஒருமுறை திருவாய்மலர்ந்தருளினுலென்னை! எ—று.

ஆம் அசை. என் ஆம் என்பதற்கு யாதாமெனக் கூறினுமாம். திருக் குறளில், "கற்றதனாலாய பயனென்" என்பதில் என் வினாப்பொருளைக் குறி யாது இல்லையென்னும் பொருளைக் குறித்தல்போல, தொலைவேது என்பதி லுள்ள ஏது ஈண்டு இல்லை என்னும் பொருள் குறித்தது. (௯௨)

கண்ணச் சிராக வரிசூழுங் காமறைக் காடன் செந்தீ
வண்ணச் சிராசல மேருவில் லாளி வரைவிடுதே
ருண்ணச் சிராக விழிக்கால வேலுறை விட்டுவிட்டுப்
பெண்ணச் சிராள்வல வாவிறங் காது பிடியன்னமே.

இ—ள்: வலவா - பாகனே, கள் நச்சு இராக அரி சூழுங் கா மறைக் காடன் - தேனை விரும்புகின்ற இசையைப் பாடும் வண்டுகள் சூழுஞ் சோலை யை யுடைய வேதவனத்தை யுடையவரும், செந்தீ வண்ணச் சிராசல மேரு வில் ஆளி வரை - சிவந்த அக்கினி வண்ணத்தைப் பெற்ற மலைகளுள் தலைமையாகிய மேருவை வில்லாவாண்டவருமாகிய சிவனது மலையில், பெண் - மங்கை, உள் நச்சு ராக விழிக் கால வேல் உறை விட்டு விட்டு- அகத்தில் நஞ்சு நிறத்தைக்கொண்ட கண்ணாகிய காலத்தைச் செய்யும் வேல் நீரை விட விட, பிடி அன்னம் இறங்காது - ஒருபிடி சோறும் உட்புகாது,

அச்சு இரான் - உயிர் தரியான், தேர் விடு - (ஆதலில் இறந்துபடுமுன் ஆண்டுச் செல்லத்) தேரை (விரைந்து) தூண்டுதி எ—று.

நச்சி என வினையெச்ச மாக்கினுமாம். காலவேல் என்பதற்குச் சிந்தாமணியிலும் இப்பொருளுரைத்தார். விட்டுவிட்டு என்பன, "உரற்கால்யானையொடித்துண் டெஞ்சியயா" என்பதுபோன்ற வினையெச்சத் திரிபு. அச்சிரான் என்பது பாரதத்தில், "தன்னுட்ட மிகச்சிவந்தான்" என்பது போல நின்றது. அச்சிரா என்பது பாடமேல், பெண் என்பதை எழுவாயாக்காது நான்காவதாக்கி, உயிரிராது என்க. இப்பொருட்கு இராது என்பதனீறு கெட்டது. அன்னமும் என்பதினும்மை தொக்கது. [பாகனொடு சொல்லல்.]

அன்னம் பலவ நறும்புன்னைச் சேக்கை யமர்மறைசை
முன்னம் பலவன் முடித்த சடாதர மூர்த்திதில்லைப்
பொன்னம் பலவன் பிநாகிகங் காளன் புராந்தகன்சீர்
வன்னம் பலவன் பசுபதிநாதனென் வான்றுணையே.

இ—ள்: அன்னம் பலவ புன்னை நறுஞ் சேக்கை அமர் மறைசை முன் - அன்னங்கள் தளிரையுடைய புன்னைகளிலுள்ள நறிய படுக்கையிலிருக்கப் பெற்ற வேதவனத்து முதல்வரும், அம்பு அலவன் முடித்த சடாதர மூர்த்தி - கங்கையையுஞ் சந்திரகலையையுந் தரித்த சடாமுடியையுடைய அருள்வடிவரும், தில்லைப் பொன்னம்பலவன் - சிதம்பரத்துக் கனகசபையை யுடையவரும், பிநாகி - பிநாக வில்லையுடையவரும், கங்காளன்-முழுவெலும்பை யணிந்தவரும், புராந்தகன் - முப்புரங்களுக்குக் காலரும், சீர் வன்னம்பலவன் - நன்மையாகிய பல மந்திரத்தை யுடையவரும், பசு பதி நாதன் - பசுக்களுக்குப் பதியானவருமாகிய சிவன், என் வான் துணை-எனது பெரிய துணை எ—று.

முதலடி திணைமயக்கம்; "திணைமயங் குறுதலுங் கடிநிலை யிலவே" என்றார் தொல்காப்பியனார். பல அம் என வைத்து, காயை அல்லது கனியைக்கொண்ட அழகாகிய என்னினும், பலவு என வைத்து, பலாமரத்தினதும் என்னினுமமையும். வன்னம் இப்பொருளாதலைச் சிவஞானசித்தியாரில், "வந்திடு மந்திர மிரண்டு பதங்கண் மூவேழ் வன்னங்க ளைஆறு" என்பதனு னறிக. அதற்கு நிறமென்பது மொன்று. (௩௪)

வானப் பிறையையும் வாடைப் புலியையு மையல்செய்யுந்
தேனப் பிறையையுந் தென்றலை யுங்கண்டு சில்லரிக்கண்
மீனப் பிறைக்கு மடமானை மேவிலர் வேடனிடு
மூனப் பிறைச்சிக் குகந்தார் மறைசை யுகந்தவரே.

இ—ள்: வேடன் இடும் ஊன் அப்பு இறைச்சிக்கு உகந்தார் மறைசை உகந்தவர்-கண்ணப்பநாயனரிட்ட ஊன் அப்பிய இறைச்சியை விரும்பினவரும் வேதவனத்தை மகிழ்ந்தவருமாகிய சிவன், மையல்செய்யும் வானப்

பிறையையும் வாடைப்புலியையும் தேன் அப்பு இறையையுந்தென்றலையுங் கண்டு—மயக்கத்தை விளைக்கும் ஆகாயத்தில் தோற்றும் பிறையையும் வடந்தையாகிய புலியையும் தேனைக்கொண்ட(மலர்ப்) பாணத்தையேந்திய மதனராசனையுந் தென்காலையுங் கண்டு, சில் அரிக் கண் மீன் அப்பு இறைக்கும் மட மானை மேவிலர்—சிலவாகிய அரியையுடைய கண்ணாகிய மீன் நீரிறைக்கப்பெற்ற இளமையாகிய மங்கையை அணைகின்றிலர். (இனிச் செய்யக்கிடந்ததுதான் யாது!) எ-று.

கண்மீன் தொகையுருவகம். இது கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்தபக்கத்து இறைவனணையாமையைத் தோழிகூறி மெலிந்தது. (ரு௫)

உகந்தா வடிக்கு மிடையர்தம் பாலளை யுண்டுகடற்
சகந்தா வடியனுக் கெட்டாத ஞான தலத்துமுத்திச்
சுகந்தா வடிதமிழ் நான்மறைக் காட துணைவரியம்
பகந்தா வடிசெல் குழையாண் மருவிய பாகத்தனே.

இ—ள்: வடி தமிழ் நான் மறைக்காட – (சங்கத்தாரால்) தெள்ளி தாக்கப்பட்ட தமிழைக்கொண்ட நான் மறைக் காட்டை யுடையவரே, வரித்துணை அம்பகம் தாவடிசெல்குழையாள் மருவியபாகத்தனே-வரியைப் பெற்ற இரண்டு கண்களும் போர்க்குச்செல்லுங் காதையுடைய உமாதேவி யணைந்த (வாம) பாகத்தரே, உகந்து ஆ அடிக்கும் இடையர் பால் அளை யுண்டு-மகிழ்ந்து பசுவை(மேய்த்தற்கு) அடிக்கின்ற ஆயரது பாலையுந் தயிரையுமுண்டு, கடல் சகந் தாவு அடியனுக்கு எட்டாத ஞான தலத்து முத்திச் சுகந் தா-கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்தையளந்த பாதத்தை யுடையமாயவனுக்கும் எட்டாத ஞானபூமியின்கணுள்ள மோக்ஷாநந்தத்தை (அடியேனுக்குத்) தந்தருளும் எ-று.

தாவடி இப்பொருளாதலைக் கந்தரலங்காரத்தில், "தாவடியோட்டு மயிலினும்" என்பதனானுணர்க. வரி நீளமுமாம். அளையுங் குழையும் ஆகுபெயர். (ரு௬)

பாக னகனி மொழியாய் நினது பணிமுகமாங்
கோக னகநில வுந்துணைப் பானலிற் கோடல்கண்டே
னாக நகநிமி ரும்புலிப் பாதரு காடவ் ரு
மாக னகநிலை மன்றாடி வேத வனமலைக்கே.

இ—ள்: நாகம் நகம் நிமிரும் புலிப்பாதரும் நாட—பதஞ்சலியும் நக நிமிரும் வியாக்கிரபாதரும் மகிழ்ச்சிகொள்ள, மாநிலை கனக மன்று-மகத்துவம் நிலைத்த பொன்னம்பலத்தில், அன்று ஆடி வேதவன மலைக்கு—அந்நாளிலானந்ததாண்டவஞ்செய்தருளிய இறைவனாது திருமறைக்காட்டு மலையில், பாகு அன கனி மொழியாய் – பாலையொத்த கனிந்த சொல்லை

யுடையாய், நினது பனிமுகம் ஆம் கோகனகம் நிலவுந் துணைப்பானலில் கோடல் கண்டேன்—உனது குளிர்ச்சியைக்கொண்ட வதனமாகிய தாமரை மலரில் விளங்கும் இரண்டு கருங்குவளை மலரிலுங் காந்தட்பூவைக் கண்டேன் எ-று.

பாகு கனி அன என வைத்துப் பாலையும் பழத்தையு மொத்த எனக் கூறினுமாம். கருங்குவளைமலர் விழி, காந்தட்பூ கை. துணைப்பானலிற் கோடல் என்னுந் தொடர் உருவகவுயர்வுநவிற்சியணி. [இடையூறு கிளத்தல்.] (௩எ)

மலைக்கார் முகந்தர யாழைப் பழிமொழி மான்குறையா
நிலைக்கார் முகமதி யாள்பங்க னேநிறை காய்க்கந்திச்சூ
ழலைக்கார் முகந்திடும் வேதா ரணிய வருந்துயரந்
தொலைக்கார் முகந்தமியேன் சொல்லுவே னென்னசொன்னதிலே.

இ—ள்: மலைக் கார் முகந் தர - (மேரு) கிரியாகிய வில்லைக்கொண்டவரே, குறையா நிலைக்கு ஆர் முக மதியாள் யாழைப் பழி மொழி மான் பங்கனே—நிறைந்த நிலையிலசைந்த வதனசந்திரனை யுடையாராகிய வீணைவாத விதூஷணியம்மையாரை (வாம) பாகத்தில் வைத்தவரே, நிறை காய்க் கந்திச் சூழலைக் கார்முகந்திடும் வேதாரணிய- நிறைந்த காயைப் பெற்ற கமுகஞ்சோலையை மேகமளக்குந் திருமறைக்காட்டை யுடையவரே, தமியேன் அருந் துயரந் தொலைக்க ஆர்முகஞ் சொல்லுவேன் சொன்னதில் என்—தமியேன் (இந்த) அரிய துன்பத்தை நீக்க யார் மாட்டுச் சொல்லுவேன்! சொன்னதினலாகும் பயன்றானென்னை? எ—று.

முகத்தல் ஈண்டு முகத்தலளவையைக் குறியாது அளத்தலென்னும் பொருண்மேல் நின்றது. தொலைக்க என்பதில் அகரந் தொக்கது. முகம் இடப்பொருள். (௩அ)

சொன்னச் சிலம்பு குழைத்தவில் லான்சுரு திப்பதியான்
வன்னச் சிலம்பிக் கரசளித் தான்வெற்பின் மாணிழைகண்
மின்னச் சிலம்பு கலைகனை யாமன்மெய் வேர்வரும்பச்
சின்னச் சிலம்படி யாய்குடைந் தாயொரு தேன்சுனையே.

இ—ள்: குழைத்த சொன்னச் சிலம்பு வில்லான்—வளைத்த பொன்மலையாகிய வில்லையுடையவரும், சுருதிப் பதியான்—மறைக்காட்டை யுடையவரும், வன்னச் சிலம்பிக்கு அரசு அளித்தான் வெற்பில்—அழகையுடைய சிலந்திக்கு இராச்சியத்தைக் கொடுத்தவருமாகிய சிவனது மலையில், சிலம்புச் சின்ன அடியாய்—சிலம்பைப் பூண்ட சிறிய தாளையுடையாய், மாண் இழைகள் மின்ன மெய் வேர்வு அரும்ப—மாட்சிமைப்பட்ட ஆபரணங்கள் விளங்கவுஞ் சரீரத்தில் வியர்வை பொடிக்கவும், சிலம்பு கலை

நனையாமல்—ஒலிக்கின்ற ஆடை நனையாமலும், ஒரு தேன் சுனை குடைந்தாய் ஒரு வாசம் பொருந்திய சுனையில் ஆடினாய் எ-று.

பண்டில்லாத நாற்றநிகழ்ச்சியையுந் தெரிப்பத் தேன்சுனை என்றாள். இதில் விரவியடுக்கியவினை காண்க. இது பரியாயவணி. [சுனைவியந் துரைத்தல்.]

தேன்றதும் பிக்குளிர் தாமரைப் பீடிகைச் செல்வனும்வாய்
நான்றதும் பிக்கருண் மாயனும் வான்புவி நண்ணியதுங்
கீன்றதும் பித்தவ ராற்கிட்டு மோகிடை யாவுலக
மீன்றதும் பிக்குழல் சேர்மறைக் காட னிரண்டையுமே

இ—ள்: தேன் ததும்பிக் குளிர் தாமரைப் பீடிகைச் செல்வன்வான் நண்ணியதும்-தேனிறைந்து குளிருகின்ற தாமரைமலராகிய ஆசனத்தை யுடைய பிரமன் அன்னமாய் ஆகாயத்திற் பறந்து போனதும், வாய் நான்ற தும்பிக்கு அருள் மாயவன் புவி கீன்றதும் பித்து—வாய் நான்ற யானைக்கு அருள்செய்த கண்ணன் (வராகமாய்ப்)பூமியைக் கீண்டதும் பித்தமே, உலகம் ஈன்றதும்பிக் குழல் சேர் மறைக்காடன் இரண்டும் அவரால் கிட்டுமோ கிடையா—உலகத்தைப்பெற்ற வண்டைத்தாங்கிய கூந்தலையுடைய உமாதேவி சேர்ந்த வேதபுரீசரது (முடியும் அடியுமாகிய அவ்) விரண்டும் அவர்களுக்குக் கிட்டுமோ கிட்டா எ-று.

செல்வனும் மாயனும் என்னுமிரைநிறையின்உம்மையை நீக்கி, விளங்குதற்பொருட்டு, ஆற்றொழுக்காகவுரைத்தாம். வாய்நான்றதும்பிக்கு என்பது "வாய்வன்காக்கை" போல நின்றது. அவரால் உருபுமயக்கம். அவ்வுருபாக நிற்பில் தேட என்னுமோர்சொல் வருவிக்கவேண்டும். இரண்டை என்பதின் ஐ சாரியை. (௩0)

இரண்டக் தகரங் கிருந்தன்ன பார்வை யிணைச்சுரும்பர்
புரண்டக் தகர மளவிய கோதையைப் பொன்னில்வைத்தார்
முரண்டக் தகரவை வேலா கடற்றிரை முத்தச்சங்கங்
குரண்டக் தகர வெறிமறைக் காடன் குளிர்கிரிக்கே.

இ—ள்: முரண் தந்த கர வை வேலா—வலிமையைப் பெற்ற கையிற் கூரிய வேலையுடையாய், கடல் திரை குரண்டந் தகர முத்தச் சங்கம் எறி—ஆழியின் அலையானது (தன்மாட்டுள்ள மீனைக்கவரத் தாங்கியிருக்குங்) கொக்குத் தகர்முகத்தையுடைய சங்கையெறிகின்ற, மறைக்காடன் குளிர் கிரிக்கு—வேதபுரியிலிறைவனாரது குளிர்ந்தமலையில், அங்கு இரண்டு அந்தகர் இருந்தன்ன இணைப்பார்வை—அவ்விடத்திலிரண்டு காலர்கள் இருந்தாற்போன்ற துணைவிழிகளையும், சுரும்பர் புரண்டு அந் தகரம் அளவிய கோதையைப் பொன் இல் வைத்தார்-வண்டு புரண்டு அழகிய சாந்திலளாவப்பெறுங் கூந்தலையுமுடையாளை(நமர்) அழகாகிய வீட்டிற் செறித்தார் எ-று.

இருந்தன்ன என்பது, காசிக்கலம்பகத்தில், "காந்தண்மலர்ந்தன்ன பாந்தளினிரையும்" என்பதுபோல நின்றது. மேல் நிரைத்தென்ன வருவதுமிது. முரண் போருமாம். கடற்றிரைமுத்தச்சங்கங் குரண்டந்தகா வெறியென்னவே, நீயும் வஞ்சித் தொழுகுவையேல் நமரான் மெலிவை யென உள்ளுறையுவமந் தொனித்தது. "அவற்றுள்,—உள்ளுறை யுவம முய்த்துணர் வகைத்தாய்ப்-புள்ளொடும் விலங்கொடும் பிறவொடும் புலப் படும்" என்றார் பொருளிலக்கணத்தார். தம்மாட்டுள்ள தண்ணளியை யுணர்த்துவாள் குளிர்கிரியென்றாள். [இற்செறிப்புணர்த்தல்.] (சக)

கிரிதா ரகையணிந் தாலென்ன முத்தங் கிடந்தகொங்கை
யரிதார மன்னவ ளம்பகங் காட்டு மருக்கன்மதி
யெரிதார வெற்பு விழியா சனத்த னெழின்மறைசை
விரிதார கப்பொரு ளானே றுகந்தவன் மெய்யொளியே.

இ—ள்: அருக்கன் மதி எரி விழியன் – சூரியனுஞ் சந்திரனும் அக்கினியுமாகிய (மூன்று)கண்ணையுடையவரும், தாரவெற்பு ஆசனத்தன்—வெள்ளிமலையாகிய ஆசனத்தை யுடையவரும், எழில் மறைசை விரி தாரகப்பொருள்—அழகைக்கொண்ட வேதவனத்தில் வீற்றிருக்கும் பரந்த பிரணவப்பொருளானவரும், ஆன் ஏறு உகந்தவன் மெய் ஒளி—எருதை மகிழ்ந்தவருமாகிய சிவனது திருமேனியிற் செஞ்சோதியை, கிரி தாரகை அணிந்தால் என்ன முத்தங்கிடந்தகொங்கை—மலையில் உடுக்களணிபட்டாற் போல நித்திலத்தொடை தங்கிய தனத்தையுடைய, அரிதாரம் அன்னவள் அம்பகங் காட்டும்-மாயவனது மனைவியாகிய இலக்குமியை யொத்தாளது கண்கள் காட்டும் எ-று.

கொங்கை தாரத்துக்கடை. பொருளான் எனவும் ஏறு எனவும் பிரிப்பினுமாம். கண்கள் சிவந்தமையிற் புணர்ச்சியுண்மை யுணர்ந்தபடி. [தோற்றத்தாலாராய்தல்.] (சஉ)

மெய்த்துத்தி யான பணியா பரணன் விரைமருவுங்
கொத்துத்தி யானஞ் செறிமறைக் காட்டுறை கோனை யெண்ணிப்
பொய்த்துத்தி யானம் புறுசெருக் கற்றுப் புலனடங்க
வைத்துத் தியான சமாதிசெய் வார்க்கில்லை வன்பிறப்பே.

இ—ள்: மெய்த் துத்தி ஆன பணி ஆபரணன் - படத்திற் பொறி யுண்டாகப் பெற்ற சர்ப்பாபரணத்தை யுடையவரும், விரை மருவுங் கொத்து உத்தியானஞ் செறிமறைக்காட்டு உறை கோனை எண்ணி—வாசம் பொருந்திய கொத்துகளையுடைய சோலை நெருங்கிய வேதவனத்தில் வீற்றிருக்கின்ற தலைவருமாகிய சிவனைக்கருதி, பொய்த்த உத்தியால் நம்புறு செருக்கு அற்று-பொய்த்த புத்தியால் நம்புஞ் செருக்கு ஒழிந்து, புலன் அடங்க வைத்துத் தியான சமாதி செய்வார்க்கு வல் பிறப்பு இல்லை—(ஐம்)புலனையும் அடங்கவைத்துத் தியானசமாதி செய்பவருக்கு வலியபிறவியில்லைஎ-று. மெய் ஆகுபெயர். (சங)

வன்போ தகவல் லியநெடுங் கான்சென்று மார்புடம்பி
னென்போ தகவல் லியன்மா தவம்புரிந் தேனிளைப்பீர்
பொன்போ தகவல்லி யன்பார் சுருதி புரத்தபத்த
ரன்போ தகவல்லி யங்கொன்றை யாயென் றறைந்திடுமே.

இ—ள்: வல் போதக வல்லிய நெடுங்கான் சென்று - வலிய யானையையும் புலியையுங் கொண்ட நெடிய வனத்திற்போய், மார்பு உடம்பின் என்பு ஓதக - மார்பிலும் (மற்றை) யங்கத்திலுமுள்ள எலும்புகள் (வலி) யொழிதல் பொருந்த, வல் இயல் மாதவம் புரிந்து என் இளைப்பீர் - கிடம்மிகுந்த பெருமையாகிய தவத்தைச செய்து எனிளைக்கின்றீர், பொன் போதகவல்லி அன்பு ஆர் சுருதி புரத்த - இலக்குமியும் ஞானச்செல்வியாகிய வாணியும் அன்பாகச் சேர்ந்த வேதபுரீசரே, பத்தர் அன்பு ஓது அக அல்லிக் கொன்றையாய் என்று அறைந்திடும் - மெய்யடியார் அன்பாற் றுதிக்கின்ற அகவிதழைக் கொண்ட கொன்றைமாலையை யுடைய இறைவரேயென்று (மனைக்கண் இருந்து உண்டு உடல்வலி குன்றாமலிளைப்பின்றிச்) சொல்லும் (சொல்லில்) அத்தவந்தர் பெறும்பேறு எளிதிலடைவீர் எ—று.

ஓதகவில் ஓ முதனிலைத்தொழிற் பெயா; 'ஓசுரு செயலிலா வுலகத் தேவையும்'' என்றதில் ஓவும் இது. உடம்பு என்பு ஆகு பெயர். "நாவின் கிழத்தி யுறைதலா னண்ணுளோ—பூவின் கிழத்தி புலர்ந்து' என்பார் மதம் ஈண்டமையாதென்பார், பொன்போதக வல்லியன்பார் சுருதி புரத்த வென்றார். சிந்தாமணியிலுங் ''கோவீற்றிருந்த திருநாட்டணிக்கு முதலணியாக, நாவீற்றிருந்த கலைமா மகளோடு நன்பொற் - பூவீற் றிருந்த திருமாமகள் புல்ல'' என்றார். அம் சாரியை. (சச)

அறைக்கண் டவழரு விக்கிரி வேத வனத்தண்ணினோ
மறைக்கண் டரிய பிரானிறந் தோரைப்பொன் மானத்துய்த்துப்
பிறைக்கண்ட வேணியிற் பாணியும் பாணியிற் பேர்மழுவுங்
கறைக்கண்ட முந்தரச் செல்லுதல் பார்த்தி கருங்குழலே.

இ—ள்: கருங்குழலே – கருமையாகிய கூந்தலையுடைய மாதே, அறைக்கண் தவழ் அருவிக் கிரி வேத வனத்து அண்ணினோம்-முழைமிலே தவழாநின்ற அருவி நீரைப்பெற்ற மலையையுடைய திருமறைக்காட்டிற் கிட்டினோம், மறைக்கு அண்ட அரிய பிரான்-வேதத்துக்குக்கிட்ட அரிய சிவன், இறந்தாரைப் பொன்மானத்து உய்த்து –(அத்திருப்பதியில்) இறந்தவர்களைப் பொன்விமானத்திலேற்றி, பிறைக் கண்ட வேணியிற் பாணியும் பாணியில் பேர்மழுவுங் கறைக் கண்டமுந் தரச் செல்லுதல் பார்த்தி—பிறைத்துண்டைக் கொண்ட சடையிற்றங்கிய கங்கையையும் (வலத்) திருக்கையிற் பொலாநின்ற பாசையுங் காளகண்டத்தையும் (அவர்களுக்குக்) கொடுத்தருளும்வண்ணம் போதலைப் பார் எ-று.

[தலைவன்றன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தல்.] (சரு)

கருமந் திரிகா ரணம்வேறு மாறு கயவர்ப் பற்றித்
தருமந் திரியு மெனை யாள்வை யோவெற்றித் தானவர்தம்
பெருமந் திரியை யுதரத்தில் வைத்த பிரானளகை
யொருமந் திரிநண்ப னேமறைக் கானுறை யுத்தமனே.

இ—ள்: வெற்றித் தானவர் பெருமந்திரியை உதரத்தில் வைத்த பிரான் - ஜெயத்தையுடைய அசுரரது பெரிய அமைச்சனாகிய சுக்கிரனை வயிற்றில் வைத்த கடவுளே, அளகை ஒருமந்திரி நண்பனே - அளகாபுரியில் வசிக்கும் ஒப்பற்ற குபேரனது தோழரே, மறைக்கான் உறை உத்தமனே - வேதாரணியத்தில் வீற்றிருக்கின்ற முதல்வரே, திரிகாரணம் கருமம் வேறு மாறு கயவர்ப்பற்றித் தருமந் திரியும் எனை ஆள்வையோ - முக்காரணத்தையும் (அவற்றாலாகுந்) தொழிலையும் வேறாக மாறுகின்ற கீழ்மக்களைப் பிடித்துப் புண்ணியத்தோடு மாறுபட்டுத் திரியும் என்னையும் ஆள்வீரோ எ—று.

ஆள்வை எனக்கொண்டு, ஆள்வீர் எனப் பொருள்கூறி, ஓவை அசையாக்கினுமாம். பிரான் என்பது திருவாசகத்தில் "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என்பது போல விளியாய் நின்றது. (சுசு)

உத்தம ரத்தி யுரியார் மறைசை யொருத்தர் வெள்ளோ
லத்தம ரத்தி னிறைகங்கை வேணிய ராலெரித்த
நத்தம ரத்தி முராசான் செழுங்கணை நல்க முன்னாள்
வைத்த மரத்தின்மெய்த் தூரில்வெந் நீர்விடு மங்கையரே.

இ—ள்: மங்கையரே - மாதரே, உத்தமர் - முதல்வரும், அத்தி உரியார் - யானைத்தோலை யுடையவரும், மறைசை ஒருத்தர் - வேதவனத்தில் ஏகநாதரும், வெள் ஓலத் தமரத்தில் நிறை கங்கை வேணியரால் எரித்த - வெள்ளிய திரையின் பேரொலியால் நிறைந்த கங்கையைத் தாங்கிய சடையை யுடையவருமாகிய சிவபெருமானால் எரித்த, நத்து அமர் அத்தி முராசான் செழுங்கணை நல்க - சங்குகள் வசிக்கின்ற கடலாகிய முரசையுடைய மன்மதனுக்கு அழகிய (மலர்ப்) பாணத்தைக் கொடுக்க, முன் நாள் வைத்த மரத்தின் மெய்த் தூரில் வெந்நீர் விடும் - முற்பகலில் வைத்த தருக்களது மூலவேரில் வெந்நீரை விடுமின் (விட அவை படும், பட மதனுக்கு மலரின்றாதும், ஆக மடவார் சுகமுறுவர்) எ—று.

"பிரிந்துழி நெஞ்சொடும் பிறரொடும் வருந்திச் - சொல்லவு முரியள்" என்ற ஒத்துப்படி தலைவி தன்றுயரைத் தோழியர்க் குரைத்தல். இது அகப்பொருட் பெருந்திணைப்பாற்படும். (சஎ)

மங்கல மந்தர முன்னுத நின்கண்ட வண்ணங்கண்டு
சங்கல மந்தர வங்கொண்டு கூனிச் சுரிமுகஞ்சார்ந்

திங்கல மந்தர மதநான் கையிற்புக் கிருந்ததுகா
கங்கல மந்தர தம்புலி யான்மறைக் கானமின்னே.

இ—ள்: கலம் நாகம் அந்தரம் புலியான் மறைக்கான மின்னே - ஆபரணம் பாம்பும் அத் தேர் பூமியுமாகக் கொண்டவராகிய சிவனது வேத வனத்தில் மாதே, மங்கலம் அந்தரம் உன்னுத நின்கண்ட வண்ணங் கண்டு - மங்களத்துக்கு வேறுபாட்டைக் கருதாத உனது கழுத்தின் அழகைக்கண்டு, சங்கு அலமந்து அரவங்கொண்டு கூனிச் சுரிமுகஞ் சார்ந்து - சங்கானது சுழன்று ஏங்குதலையுற்று வளைந்து சுரித்த முகத்தை யடைந்து, இங்கு அல மந்தரமத்தான் கையில் புக்கு இருந்தது - இவ்விடத்துமன்று மந்தர மலையாகிய மத்தையுடைய மாயனது கரத்திற் போயிருந்தது எ—று.

அந்தம் - அழகுமாம். தற்குறிப்பேற்றவணி. [பொய்பாராட்டல்] (உஅ)

கானவண் டானக் களிற்றைவர்க் காகக் கழுவிற்றங்கு
மானவண் டானது காணுத தாமரை யானுஞ் செவ்வி
ஞானவண் டானத் துறைவோனும் வாவிபி னுடிக்கொந்து
மீனவண் டானந் திரிமறைக் காட்டுறை வித்தகனே.

இ—ள்: கானவன் தானக் களிற்று ஐவர்க்கு ஆகக் கழுவில் தங்கும் - காட்டிற் சஞ்சரிக்கும் வளவிய மதத்தைக்கொண்ட யானைப் படையை யுடைய பஞ்சவர்களைக் காக்கும்பொருட்டாகக் கழு (நுனியி) லிருந்த, ஆன வண்டானது காணுத தாமரையானும் - பசுக்களையுடைய மாயவனாகிய வண்டு காணுத தாமரைமலரையுடையவரும், செவ்வி அணை ஞான தானத்து உறைவோனும் - அழகு சார்ந்த ஞான நிலத்தில் எழுந்தருளியிருப்பவரும் (யாரென்னில்), மீனம் நாடிக் கொத்து வண்டானம் வாவியில் திரி மறைக் காட்டு உறை வித்தகன் - மீனைத் தேடிக் கொத்துகின்ற நாரைகள் வாவியிற் சஞ்சரிக்கும் வேதவனத்தில் வீற்றிருக்கும் பெரியோர் எ-று.

வித்தந் தியாக முதவா வுலோபர்க்கு வீணிற்சொற்பாட்
டைத்தந் தியாக பதியென்ப ரான்முத லாம்பிள்ளையை
மைத்தந்தி யாகப் பெறுமறைக் காடர் வயங்குமுண்மைச்
சித்தந்தி யாக தியாகரைப் பாடிலர் திங்கறவே.

இ—ள்: வித்தந் தியாகம் உதவா உலோபர்க்கு - பொன்னைக் கொடையாக உதவாத உலுத்தர்கள்மேல், சொல் பாட்டை வீணில் தந்து யாகபதி என்பர் - சொல்லையுடைய பாவை வாளா பாடி மகத்தலைவனாகிய இந்திரனே என்று சொல்லும் புலவர்கள், முதல் ஆம் பிள்ளையை மைத் தந்தி ஆகப் பெறு மறைக்காடர் - மூத்த பிள்ளையைக் கருமையாகிய யானையாகப் பெற்ற வேதவனத்தரும், வயங்கும் உண்மைச்சித்து - விளங்குகின்ற உண்மையா

கிய சிற்சொரூபரும், அர்ந்தி ஆக தியாகரைத் தீங்கு அறப் பாடிலர் - செவ்வானத்தை யொத்த திருமேனியையுடைய தியாகருமாகிய சிவனைத் தீமையொழியப் பாடிலர் (இவர் மதியிருந்தவாறென்னே!) எ—று.

என்பர் வினையாலணையும் பெயர். உறுப்புகளிற் சிறந்தது முகம்; அவர்க்கு அது யானைமுகமாதலில், தந்தியாக என்றார். பெரியபுராணத்தில் "கடக்களிற்றைக் கருத்து ளிருத்துவாம்" என்றதுமிது. இவ்வாறு எல்லா வாசிரியரும் கூறுப. இக பர சுகமெலா மடையலாமென்பதும் எத்தீமைகளும் ஒழியலாமென்பதும் படத் தியாகரைத் தீங்கறப் பாடிலர் என்றார். (௫0)

தீங்கரும் பாரஞ் செறிவயல் வேதத் திருவனத்துக்
கோங்கரும் பார மணிமுலைச் சாமளக் கோமளப்பெண்
பாங்கரும் பாரண சூலாயு தாவிப் படிவச்சுமை
தாங்கரும் பார மினிப்பிற வாமுத்தி தந்தருளே.

இ—ள்: தீம் கரும்பு ஆர் அம் செறிவயல் திரு வேதவனத்து - மதுரமாகிய கரும்புகள் பொருந்திய நீர் செறிந்த வயலைக்கொண்ட திருமறைக்காட்டில் எழுந்தருளியிருக்கின்ற, ஆரம் அணி கோங்கு அரும்பு முலைச் சாமளக் கோமளப் பெண் பாங்கர் உம்பா - முத்தமாலையை யணிந்த கோங்கமுகையை யொத்த தனத்தையுடைய பசுமையையும் இளமையையுங்கொண்ட மங்கையைப் பங்கிலுடைய தெய்வமே, ரண சூலாயுதா - போரை விளைக்குஞ் சூலப்படையை யுடையவரே, இப்படிவச் சுமை தாங்க அரும் பாரம் - இத்தேகச் சுமை தாங்க அரிய பாரமாயிற்று (ஆதலா லிதை யொழித்து), இனிப் பிறவாமுத்தி தந்தருள் - மேற் பிறவாவண்ணஞ் செய்கின்ற (பர) முத்தியைத் தந்தருளும் எ—று.

கரும்பு ஆரம் எனப் பிரித்து கரும்பினது முத்தெனக் கூறி, இரண்டாமடியில் ஆரத்தைச் சந்தனம் என்னினும் இழுக்காது. தீங்கரும் பார் அஞ்சு எறி என வைத்து, கொடியரானவரும் பிரபஞ்சவாழ்வையும் ஐம்புலனையும் வென்ற என்றும், பூமியிற் பஞ்சபாணத்தை வென்ற வென்றும், தீங்கு அரும்பார் அஞ்சு எறி என வைத்து, தீமை சிறிதுமில்லாதவர்கள் புலனையும் பாணத்தையும் வென்றவென்றும், பொருள் கூறினுமாம். (௫௧)

தந்தம் படைத்த களிறொன்று தாக்கத் தனிபுரந்து
நுந்தம் படைத்தலை வேல்விழிக் கன்னியை நோக்கியதா
னந்தம் படைத்தலைச் சால்வழி யூர்ந்திடு நான்மறைசை
யிந்தம் படைத்த சடையான்வெற் பாடவ' வென்றிங்கமே.

இ—ள்: தந்தம் படைத்த களிறு ஒன்று தாக்க - கொம்பைப் பெற்ற யானை யொன்று எதிர்ப்ப, நந்தம் படைத் தலைச்சால் வழி ஊர்ந்திடும் - சங்குகள் கலப்பையாலுண்டாகிய உழவுசால்வழியே ஊர்கின்றன, நான்மறைசை இந்து அம்பு அடைத்த சடையான் வெற்பு - நான்மறைக்காட்டில் வீற்றிருக்கின்ற சந்திர கலையையும் நீரையுஞ் சேர்த்த வேணியை யுடையாரது மலையில், தலை வேல் படை விழி நும் கன்னியை, தலைமை யாகிய வேலாயுதத்தை யொத்த கண்களையுடைய உமது கன்னியை, ஆடவ னென் சிங்கம் தனி புரந்து நோக்கியது - காளையாய மதிக்கப்படுஞ் சிங்கம் தனியே காத்துப் பார்த்தது எ—று.

ஆடவனைச் சிங்கமாக வுருவகித்தமையின், நோக்கியதென்னும் பயனிலைகொண்டது. சிந்தாமணியிலும், "சீவக வேழயர் போதக மினத் தொடேற்றதே" என்றது மிது. தனி என்றமையில் வீரம் விளங்கியது. [களிறு தருபுணர்ச்சியா லறத்தொடு நிற்றல்]. (௫௨)

சிங்க முருக்குவன் றென்கால னாவியைச் செப்பிலின்னே
கங்க முருக்குர னாய்விருந் துண்ணக் கனத்திடுமென்
னங்க முருக்கும் பிணியங்கு மிங்கு மலையவைத்தாய்
பங்க முருக்கிதழ் சேர்மறைக் காட்டுறை பண்ணவனே.

இ—ள்: முருக்கு இதழ் சேர் பங்க - முருக்கம்பூவை யொத்த அதரத்தை யுடைய உமாதேவி சேர்ந்த பாகரே, மறைக்காட்டு உறை பண்ணவனே - வேதவனத்தில் வீற்றிருக்குங் கடவுளே, தென் காலன் என் ஆவியைச் சிங்க முருக்குவன் - தென்திசையில் நமன் எனது உயிரைக் குன்ற வருத்துவன், செப்பில் - (இன்னும்) சொல்லில், கங்கம் உருக்குரல் நாய் விருந்து உண்ணக் கனத்திடும் அங்கம் பிணி உருக்கும் - பருந்தும் அச்சப்படுத்து முழக்கையுடைய நாயும் விருந்து உண்ணக் கனத்த காயத்தை நோய்வருத்தும், இன்னே அங்கும் இங்கும் அலைய வைத்தாய் - இவ்வண்ணமாகவே அவ்விடத்தும் இவ்விடத்தும் அலையும்படி வைத்தீர் (இவ்வலைவு மாறும் வகை இனியருள் செய்வது தான் என்றோ?) எ—று.

இதற்கு, பங்கரே பண்ணவரே கங்கமும் நாயும் விருந்துண்ணக் கனத்த என் அங்கத்தை மெலிவிக்கும் பிணியால் அங்கும் இங்கும் அலைய வைத்தீர்; அக்கடும் பிணியாற் காலன் ஆவியை இப்போதே முருக்குவன் எனவும் பொருள் கூறலுமொன்று. இதன் கருத்து: பிணிகளுக்கரசான பெரும் பிணியால் எனது காயம் பீடிக்கப்படுகை இப்போதே யிறப்பதனோ டொக்குமென்பதாம். (௫௩)

பண்ணா முதலையின் சொல்லிபங் காளன் பகைவிடம்வன்
கண்ணா முதலையி னேமியை யேவிய கண்ணனுயி
ருண்ணா முதலையின் றோன்மறைக் காடனை யுண்டென்பதே
யெண்ணா முதலையின் கானிடைப் பூவி னினிநெஞ்சமே.

இ—ள்: ஐக்கான் இடைப் பூ நெஞ்சமே - கோரைக் காட்டிலுள்ள பூப்போன்ற மனமே, பண் அமுது அலை இன் சொல்லி பங்காளன் - பண்ணையும் அமுதையும் வென்ற இனிய சொல்லையுடைய உமாதேவியைப் பாகத்திலுடையவரும், வன் கண்ணை முதலையில் நேமியை ஏவிய கண்ணன் உயிர் - வன்கண்மையையுடைய முதலையிற் சக்கிராயுதத்தைத் தூண்டிய மாயவனது ஆவியை, பகைவிடம் உண்ண முதல் - பகைத்த நஞ்சு உண்ண முன், அயின்றோன் - அதைத் தாமுண்டவரும், மறைக் காடனை - வேதவனத்தை யுடையவருமாகிய சிவனை, உண்டு என்பதே இனி முதல் எண்ணம் - உண்டு என்னத் துணிதலே இனி முதலாகிய எண்ணம், (அந்திய காலத்துக்கு அவரே துணை, ஒழியாது கருது தி) எ—று.

இனி என்றதினால் இத்துணைக் காலமெல்லாம் வாழ்நாளை வீணாள் படக் கழித்தனை என்பது போதரும். ஈற்றடியில் இன் இரண்டுஞ்சாரியை. ஐயின்றோன் போலி. (௫௬)

நெஞ்சத் திருக்கு மறிவுநீயைம் பூத நிலயமுநீ
கஞ்சத் திருக்கு மரிசேருங் கண்ணனெண் கண்ணனுநீ
வஞ்சத் திருக்கு மலமாயை நீங்கிய மாதவத்தோர்
தஞ்சத் திருக்கு வனத்துறை காரண தற்பரனே.

இ—ள்: வஞ்சத் திருக்கு - கொடுமையாகிய ஆணவ மலத்தையும், மலம் - கன்ம மலத்தையும், மாயை நீங்கிய மாதவத்தோர் சத்து - மாயா மலத்தையும் ஒழித்த தவத்தர்களது சத்தாகிய, இருக்கு வனத்து உறை காரண தற்பரனே, வேதாரணியத்தில் வீற்றிருக்குந் (சகத்துக்கு) நிமித்த காரணமாகிய பதியே, நெஞ்சத்து இருக்கும் அறிவு நீ - மனத்திலிருக்கும் அறிவும் நீ, ஐம்பூத நிலையமும் நீ - பஞ்சபூதங்களுக்கு இடமும் நீ, கஞ்சத் திருக்குமரி சேருங் கண்ணன் (நீ) - (செந்) தாமரை மலரிலிருக்கின்ற இலக்குமியாகிய கன்னி சேர்ந்த மாயவனும் நீ, எண் கண்ணனும் நீ - எட்டு நேத்திரத்தையுடைய பிரமனும் நீ எ—று.

வஞ்சத்திருக்கு என்றமையின் ஆணவம் போதர்ந்தது. திருக்கு மலம் என நின்றாக்கினுமாம் காத்தலும் படைத்தலும் அழிப்பவன்மேலவாத

வின் அது சொல்லாதமைதலானும் காரண தற்பரனே யென்றதினானும், நீயே முழுமுதற் கடவுளாதலின், நின்மாட்டடைந்தேன் என்பது கருத்து. மதி புத்தியுமாம். (௫௫)

தற்கோல மென்ற கனிவாயை வேட்டுத் தயங்குமணப்
பொற்கோல மென்றடி யேன்காண் குவன்புவி புக்கிடந்த
முற்கோல மென்றவி சம்புயன் போகி முதலமரர்
நிற்கோல மென்ற பொழுதால முண்ட நிருமலனே.

இ—ள்: முன் புவி புக்கு இடந்த கோலம் - முன்னாளிற் பூமியைப் புகுந்து கிழித்த பன்றியாகிய மாயவனும், மெல் அம்புயத் தவிசன் - மெல்லிய தாமரை மலர்ப் பீடிகையையுடைய பிரமனும், போகி முதல் அமரர் - இந்திரன் முதலிய தேவர்களும், நிற்கு ஓலம் என்ற பொழுது ஆலம் உண்ட நிருமலனே - நுமக்கு ஓலமென்று நொந்தபோது (அவர்களைப் புரப்ப) நஞ்சை யுண்டருளிய மலரகிதரே, தற்கோலம் மென்ற கனி வாயை வேட்டு - தக்கோலத்தை மெல்லாநின்ற (கொவ்வைப்) பழத்தைப் போலும் வாயை யுடைய உமாதேவியை விவாகஞ்செய்து, தயங்கும் பொன் மணக் கோலம் அடியேன் என்று காண்குவன் - விளங்காநின்ற (நுமது) பொன்போலும் அரிய திருமணக் கோலத்தை அடியேன் எப்போது காண்பேன் எ—று.

இறப்பை யொழிக்க ஓலமென்றார். அமராாகவும் அவரை அமரரென் பது முகமனுமென்னலெ 'வலியுறுத்தத் தாமுமங்ஙனங் கூறினர். இழித்தா ரெனினுமாம். நிற்கு என்பது "இன்னுமோர் கோடியாண்டிருந்து நிற் கியாம் பன்னினும்" எனக் கந்தபுராணத்தில் வந்தது போல வந்தது. (௫௬)

திருமல ரஞ்சனை சேய்பணி மாலத்தர் நீள்விசயற்
பொருமல ரஞ்சனை யக்கிடும் வேத புரிவரைக்கோன்
மருமல ரஞ்சனை யன்னார் மறார்சொல் வருவர்வன்க
ணருமல ரஞ்சனை யாதொழி யாய்மதி யாய்மனமே.

இ—ள்: மனமே - நெஞ்சே, திருமலர் - மலரகிதரும், அஞ்சனை சேய் பணிமால் அத்தர் - அஞ்சனாபுத்திரனாகிய அனுமன் வணங்கிய மாயவனுக் குப் பிதாவானவரும், நீள் விசயன் பொரு மலர் - நெடிய அருச்சுனனோடு பொருத மல்லருமாகிய சிவனது, அஞ்சம் நயக்கிடும் வேதபுரிவரை - அன் னங்கள் மகிழ்ந்து (உலாவுந்) திருமறைக்காட்டு மலையில், மரு அஞ்ச மலர்க் கோலனை அன்னார் - வாசத்தைக்கொண்ட பஞ்ச புஷ்பபாணத்தையுடைய மதனையொத்த தலைவர், சொல் மறார் - (தெய்வத்தின் முன்னுரைத்த) சூளுரையை மறார், வன்கணரும் அலர் - வைராமுடையவருமல்லர், அஞ்சல்-

(இகந்துவிடுவாரென்று) பயமுறேல், நையாது ஒழியாய் - துன்புறேல், வருவர்-(இன்னே) வருவர், மதியாய் - தெளிதி எ—று. [தேற்றாவு] (௩எ)

மனக்காக்கை மூவர் தமிழ்க்குயில் வாணியை வைத்தகுழை
யுனக்காக்கை வஞ்ச வினையேன்புன் னாவி லுரைத்ததமிழ்
சினக்காக்கை வாயி னுறுங்குரற் சொல்லொக்குஞ் சேண்முகிற்சந்
தனக்காக்கை நீட்டு மறைக்காட்டில் வாழ்சிவ சம்பரனே.

இ—ள்: சேண் முகில் - ஆகாயத்து மேகமண்டலத்தில், சந்தனக் கா கை நீட்டு மறைக்காட்டில் வாழ் சிவசம்பு அரனே - சந்தனச்சோலை கை நீட்டுகின்ற வேதவனத்தில் வீற்றிராநின்ற சிவசம்புவே சங்காரகருத்தரே, மனக்காக்கை மூவர் தமிழ்க் குயில் வாணியை வைத்த குழை உனக்கு - மனக்காப்பையுடைய மூவரது தேவாரமாகிய குயிற்சொல்லை அடக்கிய திருச்செவியையுடைய நும்மேல், ஆக்கை வஞ்ச வினையேன் புல் நாவில் உரைத்த தமிழ் - காய (மெடுத்தற்கு ஏதுவாகிய) கொடுமையாய வினையை யுடையேன் எளிய நாவாற் பாடிய பாடல், சினக்காக்கை வாயின் உறுங் குரற் சொல் ஒக்கும் - கோபத்தையுடைய காகத்ினது வாயில் நின்றுந் தோற்றும் வெடிசொல்லையொக்கும் எ—று.

புன்னாவிலெனவே இழிவாகவு மமையாமையின் உவமைமுகத்தானுங் கூறினார். சிவசம்பரனே என்பதைச் சிவ எனப் பிரித்துச் சிவனேயென வும், சம்பரனேயெனப் பிரித்து மானை அல்லது கங்கையைத் தரித்தவரே யெனவுங் கூறினு மமையும். (௩அ)

சம்பாதி யந்தச் சடாயுவும் போற்றுந் தலைவன்புரம்
வெம்பாதி யந்த மிலாமறைக் காடன் விரைக்குழல்சேர்
செம்பாதி யந்தண் சமயமல் லாது திரிநெஞ்சமே
நம்பாதி யந்தகர் பொல்லாச் சமயங்க ணன்றெனவே.

இ—ள்: திரி நெஞ்சமே - (மெய்யறியாது தடுமாறித்) திரியுமனமே, அந்தச் சம்பாதி சடாயுவும் போற்றுந் தலைவன் - (முன்னிலைமைமாறிப் புள்வடி வாகிய) அச்சம்பாதியுஞ் சடாயுவுந் துதிக்குந் தலைவரும், புரம் வெம்பு ஆதி அந்தம் இலாமறைக்காடன் - முப்புரத்தையும் எரித்த உற்பத்திநாசம் இல் லாத வேதவனத்தரும், விரைக் குழல் சேர் செம்பாதி - வாசத்தைக்கொண்ட கூந்தலையுடைய உமாதேவி சேர்ந்த செம்பாதியானவருமாகிய சிவனது, அந் தண் சமயம் அல்லாது - அழகிய அருளையுடைய சமயம் (ஒன்றை) யன்றி, அந்தகர் பொல்லாச் சமயங்கள் நன்று என நம்பாதி - (அகச்)குரு டரது பொல்லாச் சமயங்களை நன்றென்ன நம்பேல் எ—று.

சுட்டு பண்டறிசுட்டு. நம்பினோர்க்கு இன்பத்தையும் நம்பாதார்க்குத் துன்பத்தையும் அளிப்பாரென்பது போதரப் புரம் வெம்பு என்றும், எத்துதியையுங் கொண்டருள்வாரென்பது போதரச் சம்பாதி சடாயு போற்றுந் தலைவனென்றும், நித்தியானந்தத்தைத் தருவதென்பது போதர அந்தண சமயமென்றுங் கூறினார். அந்தகரெனவே சமயமுமதுவாக, பொல்லாவெனல் வேண்டாவாயினும் வலியுறுத்தற்கு வேண்டுமெனக். (௫௧)

நன்றென் புலமைந்தில் வாயொன்று மேநவை யாயினுஞ்சீர்
நின்றென் புலவு கறையாக்கை துஞ்சுமு னீள்பொதியக்
குன்றென் புலவர்முன் னோர்கவி யாயினுங் கூறியதால்
வன்றென் புலவனைத் தாக்கிய வேத வனத்தனையே.

இ—ள்: என்பு உலவு கறை சீர் நின்ற யாக்கை துஞ்சும் முன் - எலும்பையும் உலாவுகின்ற இரத்தத்தையுமுடைய சிறப்பு நிலைத்த காயம் அழியமுன், வல் தென்புலவனைத் தாக்கிய வேத வனத்தனை - வலிய தென்றிசையை யுடையனாகிய நமனை யுதைத்த வேதபுரீசருக்கு, நீள் பொதியக் குன்று என் புலவர் முன் - (மக்களுயிர்க்குத் தமிழ் சுரத்தலால்) நெடிய பொதியமலையென்னும் பண்டிதருக்குமுன், ஓர் கவியாயினுங் கூறியதால் - ஒரு பாவையேனும் பாடியபடினால், என் ஐந்து புலனில் நவை ஆயினும் வாய் ஒன்றுமே நன்று - எனது பஞ்சப்புலனில் குற்றத்தையுடைத்தாயினும் வாயொன்றுமே நன்று எ—று

"திரைக்கடல் குடித்த கரத்தமா முனிக்குந் - திங்கள் வாழ்குலந் தங்கு வேந்தற்கு - மமுத மூற்றெழுந்து நெஞ்சகங் களிக்குந் - தமிழெனுங் கடலைக் காணி கொடுத்த - பொதியப் பொருப்பு" எனக் கல்லாடத்திலும், "கவுணியர்க்குத் தமிழ் சுரக்குங் - காட்சியாலே வண்ணமுலை மலயமலை மானும்" எனச் சேதுபுராணத்திலும் கூறியதுபற்றி, 'பொதியக் குன்றென் புலவர்' என்றார். வேதவனத்தனை என்றது, இலக்கணக்கொத்தில் "எல்லா வுருபொடுங் கொள்வோ னெழுமே" என்ற விதியமைந்து "அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள் தௌவையைக் காட்டிவிடும்" என்னுங் குறள் போல நின்றது. (௪௦)

வனக்கோதை யேபு மறுகா றுவைத்துவன் டேள்பிழிந்த
கனக்கோதை யேனளித் தீர்கரும் பாட்டிய கட்டிநல்கா
தெனக்கோதை வாரித் திருவே மதிமலி யென்றமிழ்விற்
பனக்கோதை பால்விடுத் தான்மறைக் காடன் பனிவரைக்கே.

இ—ள்: மதி மலி என் தமிழ் விற்பனக் கோதை பால் விடுத்தான் மறைக்காடன் பனி வரைக்கு - மதிமலி என்ற (முதற் குறிப்பையுடைய) செய்யுளை (ப் பாடியருளிப் பாணபத்திர ரிடத்திற் கொடுத்து) வித்தாரத்தை

யுடைய சேரமான்பெருமாணாயனாரிடத்தில் அனுப்பினவரும், வேதவனத்தை யுடையவருமாகிய சிவனது குளிர்ச்சியைக் கொண்ட மலையில் (வாழும்) ஓதை வாரித் திருவே-சத்தத்தையுடைய (பாற்) கடலில் வந்த இலக்குமியே எனக்கு ஆட்டிய கரும்புக்கட்டி நல்காது - எனக்கு (ஆலையில்) ஆட்டியத னாலாய கருப்பஞ் சாற்றாலமைந்த கட்டி (போலும் வசனத்தைத்) தாராமல், வனக் கோதை எயும் அறுகால் நுவைத்து வள் தேன் பிழிந்த கனக்கோதை என் அளித்தீர் - அழகாகிய மாலையிற் பொருந்திய வண்டுகள் நுவைத்து வளவிய தேனைப் பிழிந்தெடுத்த மேகத்தைப்போலுங் கூந்தலை என் தந்தீரீர்-று

மதிமலி என்றசெய்யுளாவது: "மதிமலி புரிசை மாடக் கூடற் - பதி மிசைநிலவும் பானிற வரிச்சிற - கன்னம் பயில்பொழி லாலவாயின் - மன்னிய சிவன்யான் வைதரு மாற்றம் - பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க் குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ் - குருமா மதி புரை குலவிய குடைக்கீழ்ச் - செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க - பண்பால் யாழ் பயில்பாண பத்திரன் - றன்போ லென்பா லன்பன் றன்பாற் - காண்பது கருதிப் போந்தனன் - மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே". இது கட்டி உவமவாகுபெயர். மொழிபெற வருந்தலாதலின் வசனத்தைத் தாராமல் ஏன் தலைசாய்ந்து நிற்கின்றீரென்றான். கரும்புக்கட்டியைத்தாராது கனத்தகோதை என் தந்தீரென்று மொருபொருள் போதரும். இப்பாட்டை அகத்தமிழ் புறத்தமிழ்த் திறனறியார் தோன்றியவாறே புறங்காட்டலெனப் புதிதொன்று படைத்துக் கூறுவர். திருவே எனளித்தீர் என்னுமுடிபு கந்தபுராணத்தில் "நாவலோய் நீருநடந்தருளும்" என்னுஞ் செய்யுள்போல முடிந்தது. திருவே என்பது தொல்காப்பியனார் விளியெழுத்தைப் பொது மையிற் கூறி "உகாரந்தானே குற்றியலுகரம்" எனவிதந்த விதி பிற்கா லத்து ஒருசார் வீழ்ந்ததற்கு உரையாளர் "திருவே எனச்சிறுபான்மை முற்றுகா வீறுமுளவேனும்" எனக் கூறியதும், முற்றும் வீழ்ந்ததற்கு நன் னூலார் "இஉ ஊவோ டையோ னளரல" என்ற பொதுவிதிமேற் சிறப் புவிதி கூறியவற்றோடமையாததும், விருத்தியுரையாளர் எடுத்தமையாததும், நேமி நாதத்தார் "ஏயாம் உகார வோகார வுயிர்கள்" எனப் பொதுமை யிற் கூறியதும் சான்றுதலானும், இராமாயணத்தில் "சிலமின்னதென்றருந் ததிக் குதவிய திருவே" எனவும், "தெரிவைமார்க்கொரு கட்டளை யெனச்செய்த திருவே" எனவும்,தாயுமானார் பாடலில் "மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன் மரபில்வரு மவுனகுருவே" எனவும், தஞ்சைவாணன் கோவையில் "கார்தனைக்குங் குழற்றிருவே" எனவும், காரிகையில் "தெள் ளேச் செந்துறையாகுந் திருவே" எனவும், வந்ததுபோல, பன்னூல்களி னும் பயின்றுவருதலானும், இன்னோசையுடைமையானுஞ் சிறுவரவிற் றென்னக் கூறுதலினியேலாது. இன்னூர் தொல்காப்பியத்தின் வழியாய

நன்னூலெழுந்தகாலத்து முற்றும் வீழ்ந்த விதியைப் பின்னூல்செய்த தமது காலத்தும் நிகழ்ந்ததாக்கக் கருதிய கருத்துக்கேற்பவுந் தொல்காப்பிய னார் விதந்தது போலவும் நன்னூலாருந் தாமும் பிறவெழுத்துக்களை விதந்தது போலவுஞ் சூத்திரியாது "இடை ஊவோ டையோ னளரல -யவ் வீற் றுயர்திணை யோரவல் லிவற்றொடு - ணஃகா னுவீ றுகும் பொதுப் பெயர் - மெய்யுயிரனைத்தீற் றஃறிணை விளிப்பன - வொல்வழி யறிதல் வழக்கத்தான" எனக்கூறிக் குற்றுகரம் பெரும்பான்மையும் முற்றுகரஞ் சிறுபான்மையும் வருதலே ஒல்வழி என்பதனை விடர்ப்பட்டமைத்த இலக் கண விளக்கத்தார் கருத்து நன்னூலாரோடு மாறுபட்டெழுந்த மத முதிர்ச்சியெனத் தெளிக. (௬௧)

பனிச்சந் திரனணி வேணியுந் தாங்குஞ்செம் பஞ்சினுட
னனிச்சந் திரளன்னத் தூவியிற் சேக்குமஞ் சீறடிபாற்
றனிச்சந் திரவி னடந்தான் சிகர தளம்பொலிமே
தினிச்சந்திரவரை வில்லான் மறைசையிற் செந்துருவே.

இ—ள்: செம் பஞ்சினுடன் அனிச்சந் திரள் அன்னத் தூவியில் - செம் பஞ்சினும் அனிச்சமலர்த்திரளினும் அன்னச்சிறையினும் (மிதித்து நடப்பி னுங் கன்றி), சேக்கும் அஞ் சீறடி பால் இரவில் தனிச் சந்து நடந் தான் - சிவக்கின்ற (மெல்லிய அழகாகிய சிறிய தாளையுடைய பரவையாரி டத்தில் இராக்காலத்தில் தனியே தூதுசென்றவரும், மேதினிச் சிகர தளம் பொலி சந்திர வரைவில்லான்-பூமியில் முடிக்கணம் பொலியப் பெற்ற பொன்மலையாகிய வில்லையுடையவருமாகிய சிவனது, மறைசையில் செந்து உரு - வேதாரணியத்தில் (வாழும்) செந்துக்களாய உருவுடையனவும், பனிச் சந்திரன் அணிவேணியுந் தாங்கும் - குளிர்ச்சிபொருந்திய சந்திர கலையை அணிந்த சடாமுடியையுந் தாங்கும் எ-று.

வேணியுமென்னு மும்மையால் அத்தொடக்கத்தன பிறவும் ஒழிந்தபிறவு மமையும். செந்துருவுமென்னுமும்மை விகாரத்தாற்றொக்கது. தொக்கதன் றேல், இவையே சாரூபத்தை யடையுமென்றும், பிறவுயிர் அதை யடையா வென்றும் பொருள்பட்டு, இறைவனூலோடு பகைக்கும். திரிபுமுன்னி னும் பின்னினுஞ் சேர்ப்பினும் பொருளிசையும். (௬௨)

உருப்பவனுசன வாய்த்தேரை யிற்பிணிக் குள்ளுடைத்தேன்
கருப்பவ னாச நதிமணி கன்னிகைக் கான்மறைசை
நெருப்பவ னுசன காதியர் தேசிக நீள்பதுமத்
திருப்பவ னுசனப் பாற்கட லான்பணிந் தேத்திறையே.

இ—ள்: கருப்பவ நாச மணிகன்னிகை நதி மறைசைக் கான் - கருவை யும் பாவத்தையுந் துடைக்கின்ற மணிகன்னிகை நதியைக் கொண்ட வேதவனத்தில் வீற்றிருக்கும், நெருப்ப வனு-அக்கினியினது நிறத்தை யுடையவரே, சனகாதியர் தேசிக-சனகர் முதலியோரது குரவரே, நீள் பதுமத்து இருப்பவன் ஆசனப்பாற் கடலான் பணிந்து ஏத்து இறையே-நெடிய தாமரைமலரிலிருக்கின்ற பிரமனும் ஆசனமாகிய பாற்கடலையுடைய மாயவனும் வணங்கித் துதிக்குந் தலைவரே, உருப்பவனுசன வாய்த் தேரை யில் பிணிக்கு உள் உடைந்தேன்-அச்சத்தை விளைக்கின்ற பாம்பினது வாயிற்பட்ட தேரையைப்போல நோயாலுள்ளமுடைந்தேன் (இதை நீரன்றி நீக்குவார் பிறரில்லை) எ-று.

பிணிக்கு உள்ளுருவுடைந்தேனெனப் புணர்ப்பினுமமையும்

ஏத்திரப் பாண்டி யெனவைய மேற்கு மிறைவன்மதிக்
கோத்திரப் பாண்டிய னுகிமண் ணுண்டவன் கோலநகரைக்
காத்திரப் பாண்டின மறைக்கா டனைமல காயமென்னுஞ்
சூத்திரப் பாண்டி லிறுமிறுங் காணுந் தொழுமுன்னமே.

இ—ள்: மலகாயம் என்னுஞ் சூத்திரப் பாண்டில் இறும் இறும்-மலத்தை யுடைய உடலாகிய சூத்திரப்பண்டி (இன்றிருப்பினும் நாளை) முரியும் முரியும், முன்னம்-அது முரியமுன் [இப்போதே என்றபடி], ஏத்து இரப்பு ஆண்டி என ஐயம் ஏற்கும் இறைவன்-துதிக்கின்ற இரப்பையுடைய ஆண்டியாகப் பிச்சையை ஏற்ற தலைவரும், மதிக்கோத்திரப் பாண்டியன் ஆகி மண் ஆண்டவன்-சந்திரகுலத்துப் பாண்டியனுகிப் பூமியையாண்ட வரும், கோல நகைக் காத்திரப் பாண்டில் மறைக்காடனை-அழகாகிய வெண்மையையுடைய காயத்தைக்கொண்ட ஏற்றையுடைய வேதவனத் தருமாகிய சிவனை, தொழும்-வணங்குமின் எ-று.

ஐயமேற்றூரே இகபரசுகத்தையெல்லா முற்றுயிர்க்கு அருளவல்லாரென் பனதத் தேற்ற இறைவனென்றும், எல்லாஞ் செய்ய வல்லாரென்பார் ஆண்டியென்றும், மண்ணுண்டவனென்றும், கூறினர். காணும் முன்னிலை யசை. (௬௪)

முன்னுவ லாரிசை யுங்கூடற் சங்கர் முதியவெள்ளை
நன்னுவ லாரியன் மாமறைக் காடர் நயங்கொள்பச்சை
மின்னுவ லாரிவ ரைக்காண வேண்டும் விழிசதப்பத்
தென்னு வலாரி படைத்தா னவையு மிமைப்பிலவே.

இ—ள்: முன் நாவலார் இசையுங்கூடல் சங்கர் - முன் புலவர்களிருந்த மதுரைச் சங்கத்தையுடையவரும், முதிய நல் வெள்ளை நாவலார் - பழைய நல்ல வெண்ணாவலை யுடையவரும், இயல்மா மறைக்காடர் - இயற்றமிழைக்கொண்ட பெருமையாகிய வேதவனத்தை யுடையவரும், நயங் கொள் பச்சை மின் ஆவலார் இவரை - நயத்தைக்கொண்ட பசுமையாகிய உமாதேவிக்குக் காதலருமாகிய இச் சிவபெருமானை, காண சதப் பத்து விழி வேண்டும் என்று - தரிசித்தற்கு ஆயிரங் கண்கள் வேண்டுமென்று, வலாரி படைத்தான் அவையும் இமைப்பில் - இந்திரன் பெற்றான் அவையு மிமையாதன எ—று.

இசை நாடகமும் வழங்குவவேனும், அவை முதனூலை யுணர்தற்குக் கருவியின்மையிற் கூறாராயினர். தமிழில் முற்றுஞ்சை யுடையாரென்பதைத் தேற்ற நாவலார் இசையுஞ் சங்கர் என்றும் இயமன் மறைக்காடரென்றுங் கூறினர். இக்கருத்துப் பற்றியன்றே திருவிளையாடற் புராணத்திலும் "கண்ணுதற் பெருங் கடவுளுங் கழகமோடமர்ந்து — பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழேனை - மண்ணிடைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோ — லெண்ணிடைப்படக் கிடந்தா வெண்ணவும் படுமோ" எனக் கூறினர். இயலென்பதற்குச் சிலப்பதிகாரத்தில் "குணவாயிற் கோட்டத் தரசு வீற்றிருந்த" என்னுஞ் செய்யுளுரையினும் தொல்காப்பியத்தில் "வடவேங்கடந் தென்குமரியாயிடை" என்னுஞ் சூத்திர விருத்தியினுங் கூறியபடி இலக்கண மென்னினு மமையுமெனினும், இலக்கியத்தை ஒழித்தற்கு ஓரியைபு மின்மையானும், அதனமைதியே இலக்கணமாதலானும், அதினிரம்பார்க்கு இலக்கணத் தெளிவு பிறவாமையானும், அக்கருத்து ஈண்டைக்காகாதென்க. தற்குறிப்பேற்றவணியும் நிகழ்தலிற் புராணகாவிய சரிதத்தோடு இது மாறுபடாது. (௬௫)

இமையாத வம்பகச் சூழ்மறைக் கானத் திறைவகங்கைச்
சுமையாத வம்பக வன்செயச் சென்னி துளக்கரனே
கமையாத வம்பகல் வீசிய வாரிதிக் காசினியோ
ருமையா தவம்பக ரார்வேட னெச்சிலை யுண்டதற்கே.

இ—ள்: இமையாத அம்பகர் சூழ் மறைக்கானத்து இறைவ - இமையாத நாட்டத்தையுடையாராய தேவர்கள் சூழும் வேதபுரியில் இறைவரே, கங்கைச் சுமையா - கங்கையாகிய சுமையை உடையவரே, பகவன் தவஞ் செயச் சென்னி துளக்கு அரனே - பிரமன் தவத்தைச் செய்ய (நன்றென்று மகிழ்ந்து) சிரத்தையசைத்த சங்கார கருத்தரே, வேடன் எச்சிலை உண்டதற்கு - (நீர்) கண்ணப்பநாயனார் எச்சிலை யுண்டதற்காக,

கமை ஆதவம் பகல் வீசிய வாரிதிக் காசினியோர் - (சூரியனது வெம்மையைப் பலவுயிர்களும் பொறுக்கலாற்றா என்று நினைந்த தேவவிருடிகள் அவ்வெம்மையைப் பொறுத்தலாற்) பொறுமையாக வெய்யில் பகலில் வீசப்படுகின்ற கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்தார், உமை யாது அவம் பகரார் - நும்மை என்ன தோஷஞ் சொல்லார் (எல்லாத் தோஷமுஞ் சொல்வார்) எ—று.

பகல் சூரியனுமாம். கமையா தவம்பகல் வீசிய என்பதற்குரைத்ததை "நிலமிசை வாழ்ந ரலமர றீரத் - தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக் - காலுணவாகச் சுடரொடு கொட்கு - மவிர்சடை முனிவரு மருள" என்னும் புறப்பாட்டாலறிக. இடை குறைந்த உம்மையென்பது இராமாயணத்தில் "யாரென விளம்புவேனெ னெங்குலத் தலைவற்கும்மை" என்றது போலப் பெருவரவிற்றாகவும், புதியன புகுதலென்பார். (௬௬)

உண்டலத் தானையன் பின்வந்த வண்டின மூதுந்துழாய்க்
கொண்டலத் தானைய னஞ்சுடர் மூன்றையுங் கொண்டமுக
மண்டலத் தானையன் கொண்டாடும் வேத வனத்தன்சிறு
கண்டலத் தானையன றீருரி வாங்குங் கருணையெற்கே.

இ—ள்: அலத்தானையன் பின் வந்து வண்டு இனம் ஊதுந் துழாய்க் கொண்டல் அத்தான் - கலப்பைப் படையைத்தாங்கிய பலதேவனுக்குப் பின் பிறந்த வண்டுக் கூட்டங்கள் ஊதுகின்ற துளவமாலையைப் புனைந்த மேகம் போலும் மாயவனுக்கு அத்தானும், சுடர் மூன்றையும் நயனங் கொண்ட மண்டல முகத்தான் - சூரியனும் சந்திரனும் அக்கினியுமாகிய முச்சுடர்களையும் விழியாக் கொண்ட விம்பமுகத்தை யுடையவரும், அயன் கொண்டாடும் வேதத் தலத்தன் - பிரமன் கொண்டாடுகின்ற மறைக்காட்டை யுடையவருமாகிய சிவன், அன்று -(அஞ்சித் துன்புழந்து அடியாரானோர் காசியில் அபயம் புகுந்த) அந்நாளில், சிறு கண் தலத்து ஆனை ஈர் உரி வாங்குங் கருணை எற்கு உண்டு - சிறிய கண்ணையுடைய யானையில் இழுத்த தோலைக்கொண்ட கிருபைஎனக்கும் உண்டு எ—று. (௬௭)

எற்பதங் கன்று வளர்சோம னங்கி யிவர்செய்கையாய்
நிற்பதங் கன்று திருமறைக்காட னிறைவைகுந்த
கற்பதங் கன்று நிரைமேய்த் தவற்கருணைதன் பெண்பாற்
சிற்பதங் கன்று மெனச் சென்ற தூதன் செயல்வண்ணமே.

இ—ள்: எல் பதங்கன் து வளர் சோமன் அங்கி - ஒளியையுடைய சூரியனுஞ் சுத்தம் பெருகாநின்ற சந்திரனும் அக்கினியுமாகிய முச்சுடர்

கள், இவர் செய்கையாய் அங்கு நிற்பது அன்று - இவரது தொழிலாய் அங்ஙனம் நிற்பதன்று, திருமறைக்காடன் - திரு மறைசையை உடையவரும், கன்று நிரை மேய்த்தவற்கு நிறை நல் வைகுந்த பதம் அருள் நாதன் - கன்றுப்பசுவை மேய்த்த மாயவனுக்கு நிறைந்த நல்ல வைகுண்ட பதத்தை உதவிய கடவுளும், சிற் பதங் கன்றும் எனப் பெண்பால் சென்ற தூதன் செயல் வண்ணமே (நிற்பது) - ஞானமயமாகிய திருவடிகள் கன்றும் என்று (கண்டோர்) சொல்லப் பரவையாரிடத்திற் சென்றருளிய தூதருமாகிய சிவபெருமானது தொழில் வண்ணத்தாற்றான் நிற்பது எ—று.

தூ கந்தரந்தாதியிற் "செப்புங்கவ சங்கரபாலக" என்பது போலக் குறுகியது. ஈற்றில் ஏ தேற்றப்பொருட்டு. (௨௮)

வண்ணவெண் கண்ணன் மரையா ளுறைமறைக் காட்டிறைவர்
திண்ணவெண் கண்ணன் மதமாத் திரியுஞ் சிலம்பகம்பூ
வுண்ணவெண் கண்ண னணையே நிதம்ப முயர்சுருதிப்
பண்ணவெண் கண்ணன் மனையே முகநண்ப பைந்தொடிக்கே.

இ—ள்: நண்ப - பாங்கனே, பைந்தொடிக்கு அகம் - (என்னிறையை வாங்கிய) பசிய வளையலையுடையாளுக்கு இடமாவது, நள் நல் வெள் வண்ண மரையாள் உறை - தேனைக்கொண்ட நல்ல வெள்ளை நிறமாகிய தாமரைமலரையுடையாளாய வாணி இருக்கும், மறைக்காட்டு இறைவர் - வேதவனபுரீசரது, திண்ண எண்கு அண்ணல் மதமாத் திரியுஞ் சிலம்பு - வலிமையையுடைய கரடியும் பெருமையான மதயானையுந் திரியும் மலையே, நிதம்பம் - அல்குலாவது, பூ உண் அ எண் கண்ணன் அணையே - பூமியை உண்ட அந்த மிடலைப்பெற்ற மாயவனது படுக்கையாகிய பாம்பினது படமே, முகம் - வதனமாவது, உயர் பண்ண சுருதி எண் கண்ணன் மனையே - உயர்ந்த பண்ணைப்பெற்ற வேதத்தையுடைய பிரமனது வீடாகிய தாமரை மலரே எ—று.

அறிவைக் கொடுத்தலின் நல்லென்றார். எண் இப்பொருளாதலை "எண்வலி யெள்ளிலக்க மெளிமைசோ திடம் விசாரம்" என்னுஞ் சூடாமணி நிகண்டானுணர்க. [அவனம் திவ்விடத் திவ்வியற்றென்றல்] (௨௯)

தொடிப்பாணி நித்திரை யாகாவொன் காதிற் றுளைக்குமட்டோ
கொடிப்பாணி னித்தில தென்னும் விழுமெழு கோமிப்பிவாய்
வெடிப்பாணி நித்தில மையோ சுடுமென்னும் வேதவன
முடிப்பாணி நித்தியப் பெம்மான் பவனி முறையிற்கண்டே,

இ—ள்: வேத வன முடிப் பாணி நித்தியப் பெம்மான் பவனி முறையில் கண்டு - திருமறைக்காட்டில் எழுந்தருளியிருக்குஞ் சிரத்திற் கங்கையைக் கொண்ட நித்திய நாதராகிய சிவனது திருவுலாவை முறையாற் றரிசித்து, தொடிப் பாணி நித்திரை ஆகாள் - வளையலையணிந்த கையையுடையாள் துயில் கொள்ளாள், நொடிப் பாண் இனித்திலது என்னும் - சொல்லுதலைக்கொண்ட பண் இனித்திலது என்பாள், விழும் - விழுவாள், எழும் - எழுவாள், நோம் - நோவாள், வெடிப்பு வாய் இப்பி ஆணி நித்திலம் - வெடிப்பாகிய வாயையுடைய இப்பியினது ஆணிமுத்தம், ஐயோ சுடும் என்னும் - ஐயோ சுடுமென்பாள், என்காதில் துளைக்கும் மட்டோ - (இவ்வாறு வருந்தும் வகை) எனது காதைத் துளைக்குமளவோ அதிலும் விஞ்சியது எ—று.

என்காதிற் றுளைக்குமட்டோ என்பதற்கு எனதுகாதிற் றுளைக்குமளவோ அயலார் காதையுந் துளைத்தது என்னினுமமையும். காமச்சுவையணி. இது கடவுண்மாட்டு மானுடப் பெண்டிர் நயந்த பக்கத்தில் இறைவனுலாக்கண்டு மயலுற்றாள் றுயரைத் தோழி சொல்லியது. (௭0)

கண்டங் கடுத்தவி ராமாலை வேதன் கழிந்ததலை
முண்டங் கடுத்த மிசைந்திடும் வானின் முளைத்தபிறைத்
துண்டங் கடுத்த நுதலிமை யாசலத் துய்யபர்சைப்
பெண்டங் கடுத்தது பார்மறைக் காட்டுறை பேரொளிக்கே.

இ—ள்: மறைக்காட்டு உறை பேர் ஒளிக்கு - வேதவனத்தில் வீற்றிருக்கும் பெரிய சோதிக்கு, கடு கண்டந் தவிரா - நஞ்சு கழுத்தை நீங்காது, மாலை வேதன் கழிந்த தலை முண்டங்கள் - மாலையாவது பிரமனது கழிந்த தலைகள், அங்கு அடுத்தது - அவ்விடத்து அவரைச் சார்ந்திருப்பது, வானில் முளைத்த துத்தம் இசைந்திடும் பிறைத் துண்டங் கடுத்த நுதல் - ஆகாயத்திலே தோற்றுகின்ற பாலையொத்த (வெள்ளிய) பிறைத் துண்டம் போலும் நெற்றியையுடைய, இமை யாசலத் துய்ய பச்சைப் பெண்டு - இமையமலையிலெழுந்த சுத்தமாகிய பச்சைப்பெண், பார் - (தோழீ) பார்க்குதி எ—று.

இவ்வொழுக்கங்கள் களவொழுக்க மாகையானும், தலைமகள் பெருநாணினளாகையானும், தோழியாற் கூறப்பட்ட கூற்றுகட்கு வெளிப்படையாக மறுமொழி கொடாது, மறைக்காட்டுறை பேரொளிக்குப் பெண்டடுத்ததெனக் குறிப்பாற் கொடுத்தாள். கொடுக்கவே, முன்னர்ப் பாங்கற் கூட்டம் பெற்றவாறு மமைந்து நின்னினுய கூட்டம் பெறுகை காரணமாக நின்னிடத்து வந்திரந்து குறையுறு நின்றார்க்கு வேண்டியது செய்வாயாக என்பது மமைந்தது. [இறைவியறியாள் போன்று குறையால்கூறல்]

ஒளியா னிறையுந் திவாகரக் கண்ண னுலகத்துயி
ரளியா னிறையுந்தி யம்புயன் வேதற் கருஞ்சின்மய
வெளியா னிறையுந்தி முந்நீர் மறைசையில் வெற்பணங்கே
தெளியா னிறையுந் திகைத்தங் கிரேன்வந்து சேருவனே.

இ—ள்: ஒளியால் நிறையுந் திவாகரக் கண்ணன் - சுடரால் நிறைந்த சூரியனாகிய கண்ணையுடையவரும், உலகத்து உயிர் அளி ஆன் இறை உந்தி அம்புயன் வேதற்கு - உலகிற்றங்கிய ஆவிகளைக் காக்கும் பசுக்களுக்குத் தலைவனும் நாபிக்கமலத்தை யுடையவனும் இராநின்ற மாயவனுக்கும் பிரமனுக்கும், அருஞ் சின்மய வெளியான் - அரியஞானமய வெளியானவருமாகிய சிவனது, இறை உந்தி முந்நீர் மறைசையில் வெற்பு அணங்கே - பெருமைபாகிய யாறுங் கடலுஞ் சூழ்ந்த வேதவனத்து மலையில் மாதே, யான் இறையுந் திகைத்து அங்கு இரேன் வந்து சேருவன் தெளி - நான் இறையளவு நேரமுந் திகைத்தங்ஙனமிரேன் (இங்ஙனம் விரைவில்) வருவேன் இதைத் தெளிதி எ—று.

உந்திமுந்நீர் ஒருபொருட் பலபெயரெனக் கொண்டு கடலென்று உரைப்பினுமாம். "முந்நீர்ப் பிறந்த பவளத்தொடு சங்குமுத்தும்" என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளில், முந்நீர் படைத்தல் காத்தல் அழித்தலாகிய முக்குணமென்றார் நச்சினார்க்கினியர் [பிரிந்துவருகென்றல்] (எஉ)

சேரு வரிக்கடை யாளமில் லாவுருச் சித்தர்போ
லாரு வரிக்கடை யேநிற்ப ராலணங் கேசெழும்பூந்
தாரு வரிக்கடை பண்பாடும வேதத் தலத்திறைமுந்
நீரு வரிக்கடை வெங்கால போசன னீண்மலைக்கே.

இ—ள்: செழும் பூந் தாரு வரிக்கடை பண் பாடும் வேதத் தலத்து இறை - அழகிய பூந்தருவில் வண்டுகள் பண்ணைப்பாடும் வேதபுரியில் வீற்றிருக்குந் தலைவரும், முந்நீர் உவரிக்கடை வெங்கால போசனன் நீள் மலைக்கு - முந்நீரையுடைய கடற்கட்டோன்றிய வெய்ய நஞ்சவுணவை யுடையவருமாகிய சிவனது நீண்ட மலையில், அணங்கே - மாதே, இக்கு அடையாளம் இல்லாத சித்தசர் போல் உருச்சேருவர் - கருப்பு வில்லாகிய அடையாளம் இல்லாத மதனரைப்போல உருவத்தையுடையவரும், இக் கடையே நிற்பர் - (ஈண்டுள்ள பலவிடத்திலுமின்றி) இவ்விடத்திற்றானே (பயின்று) நிற்பவருமாகிய, உவர் ஆர் - உந்தக் காளையர் யார் (நீயறிவையேற்) சொல்லுதி எ—று.

உவப்பிற்சித்தசரென்று பால்வழுவக் கூறியதற்கிசைய உவரென்றான். "தண்கால்கடையிடை" என நன்னூலார் கூறினமையின் ஈண்டுக்

கடை அப்பொருட்டு. கடையே என்பதில் ஏ தேற்றம் வரிக்கடை இப் பொருளாதலை இரகுவமிசத்தில் "வரிக்கடைபாண்செயு மருதமெய்திஞன்" என்னுஞ் செய்யுளானுணர்க. சேருவர் நிற்பர் என்பவற்றிற்குச் சேர்ந்தவராகி நிற்பவராகிய எனக் கூறலுமொன்று. [இறைவன்றனக் குக்குறைநேர் பாங்கியிறைவிக் கவன்குறையுணர்த்தல்.] (எரு)

நீண்ட வராக மலைமா நிலங்கிண்டி நின்றறியா
னாண்ட வராக மலைகுனிந் தான்மறை நற்பதியான்
மாண்ட வராக மலையாமல் வைப்பவன் வான்புகழை
வேண்ட வராகம லைக்குமுன் றோற்றும் வெறுந்தவ்வையே.

இ—ள்: நீண்டவராகம் அலை மாநிலங் கிண்டி நின்று அறியான்-நெடிய (மாயவனாகிய) பன்றி கடலாற் சூழப்பட்ட பெரிய பூமியை யிடந்து நின்றறியப்படாதவரும், நாண் தவர் ஆக மலை குனித்தான் - நாரியை யுடைய வில்லாக மேரு கிரியை வளைத்தவரும், நல் மறைப்பதியான்- நல்ல வேதவனத்தையுடையவரும், மாண் தவர் ஆகம் அலையாமல் வைப்பவன்-மாட்சிமைப்பட்ட தவத்தர்களது காயத்தை அலையாமல் வைப்பவருமாகிய சிவனது, வான் புகழை வேண்ட - பெருமையாகிய கீர்த்தியை வேண்ட, கமலைக்கு முன் தோற்றும் வெறுந் தவ்வை வராள் - (அவரிடத்தில்) இலக்மிக்குமுன் பிறந்த வெறிய மூதேவி வாராள் எ—று.

அலை ஆகுபெயர். அறியான் என்பது, "முதனிலை தொழிற்பெயர் முற்றீ றெச்சம் - வினைமுதல் செயப்படு பொருளே ழாதியுட் - படுசொலற்றே படுபொருளாயும்" என்னும் இலக்கணக் கொத்துவிதியால், 'இல் வாழ்வா னென்பான்" என்பதுபோல நின்றது. வாராள் ஈறு கெட்டது வாராது என்னக் கொள்வது மொன்று. (எச)

வெறும்பத்தி நிச்சய மில்லெனை யாட்கொண்டு வீட்டில்வைப்பா
யுறும்பத்தி னிற்பத்து மாமகன் மாலய னும்பருக்கு
மெறும்பந்தி நிற்குங் கடை முதலாவி யெவைக்குமருள்
பெறும்பத் தினிபங்க னேமறைக் கானப் பெருஞ்சுடரே.

இ—ள்: பத்தினில் உறும் பத்து மா மகன் மால் அயன் உம்பருக்கும் - நூறாகிய அசுவமேதத்தையுடைய வாசவனுக்கும் மாயவனுக்கும் மலரோனுக்கும் வானவருக்கும், அத்தி முதல் எறும்பு கடைநிற்கும் ஆவி எவைக்கும் அருள் - யானைமுதலாய் எறும்புமுடிவாய் நிற்கின்றன உயிர்களெவற்றுக்கும் அருளுகின்ற, பத்தினி பெறும் பங்கனே - உமாதேவி பெற்ற பாகத்தை யுடையவரே, மறைக் கானப் பெருஞ் சுடரே - வேதா

ரணியத்திற் பெரிய சோதியே, பத்தி நிச்சயம் இல் வெறும் எனை ஆள் கொண்டு வீட்டில் வைப்பாய் - பத்திநிச்சயமில்லாத வெறியகடையேனையும் அடிமைக்கொண்டு மோக்ஷத்தில் வைத்தருளும் எ—று.

அருள்பெறும் எனை த்து அருளைச் சுரக்கின்ற வென்பது மொன்று; [பத்தி நிச்சயம் - திடபத்தி; உம்மைத்தொகையுமாம்]. (எரு)

பெருங் காசினித்தலங் கொண்டாடி யாடிப் பிறங்குகங்கை
யருங்காசி நீத்த முறைவோர் மறைசை யமலர்வெற்பின்
மருங்காசி னித்தலை கொள்ள விடாவென்ன மார்பகத்திற்
பருங்காசி னித்தகைப் பூட்கொங்கை மங்கைக்குப் பாரித்தவே.

இ—ள்: பெருங்காசினித் தலங்கொண்டாடி ஆடிப் பிறங்கு - பெரிய நிலவுலகத்தார் கொண்டாடி முழுகி உயர்வடைகின்ற, அருங் கங்கை காசி நீத்தம் உறைவோர் மறைசை அமலர் வெற்பில் மங்கைக்கு - அரிய கங்கைநதியைக் கொண்ட காசியில் எக்காலத்தும் வீற்றிருக்கின்றவராகிய மறைக்காட்டிறைவனது மலையில் மங்கைப்பருவ முடையாளுக்கு, மருங்கு ஆசு இனித் தலை கொள்ள விடா என்ன - இடையைச் சிறிதேனும் மேல் தலைகொள்ள விடாவென்னும் வண்ணம், மார்பு அகத்திற் பருங் காசின் இத் தகைப் பூண் கொங்கை பாரித்த மார்பின்கண் பருத்த மணிகளை யுடைய இத்தகுதியாகிய ஆபரணத்தையணிந்த தனங்கள் பணைத்தன எ-று.

உறைவோர் அமலர் என்பவற்றுக்கு உறைகின்றவரும் மலரகிதரு மாகிய சிவனது எனக் கூறலும் வழுவன்றென்க. இயற்கைப்புணர்ச்சி புணர்கின்ற காலத்துப் பதினொராண்டும் பத்துத்திங்களும் புக்காளாதலின், மங்கை ஈண்டுக் காலவாகுபெயர். அக்காலந்தான் பன்னிரண்டும் பதின் மூன்றுமாய இருவற்சரங் கொண்டதென்ப. [பருவங்கூறி வரவுவிலக்கல்]

பாரிக்கு மார முலையுமை யாட்கும் பகிரதியா
நாரிக்கு மாரப் புரமுஞ் சிரமு நயந்தளித்தோன்
மூரிக்கு மாரனைத் தந்தான் மறைசையின் மூர்த்திதந்தான்
றாரிக்கு மாரனுக் கில்லையென் மேற்பகை சாதிப்பதே.

இ—ள்: பாரிக்கும் ஆர முலை உமையாட்கும் பகிரதி ஆம் நாரிக்கும் - பருத்த முத்தமாலையை அணிந்த தனத்தையுடைய உமாதேவிக்கும் கங்கையாகிய பெண்ணுக்கும், ஆரப் புரமுஞ் சிரமும் நயந்து அளித் தோன் - அவர் தங்கும்வண்ணம் (நிரலே பாதித்) திருமேனியையுந் தலையையும் மகிழ்ந்து கொடுத்தவரும், மறைசையில் மூர்த்தி - வேதவனத்தில் அருள்வடிவுகொண் டமர்பவருமாகிய சிவன், தார் தந்தான் - (நானிரந்த

கொன்றை) மாலையைத்தந்தனர், இக்கு மாரனுக்கு என்மேல் பகை சாதிப்பது இல்லை -(அதனால்) கருப்புவில்லையுடைய மதனுக்கு (இற்றைவரையுஞ் சாதித்ததுபோல இனி) என்மாட்டுப் பகைசாதித்தலில்லை எ—று.

முன் கொன்றை வாங்கும் என்றதினாலும், சிதம்பரச்செய்யுட்கோவையில் "தண்ணென் கடுக்கை கொணர்ந்தாரோ தம்மினொன" என்றதினாலும், காசிக்கலம்பகத்திலே "தண்ணென்று நறையிதழித் தாரென்றாள்" எனவும், "நல்காரே யின்னங் கடுக்கை யிவட்கு" எனவுங் கூறியதினாலும், பொதுமையிற் கிடந்ததார் என்றதற்குக் கொன்றைமாலை என்றாம். இது கடவுண் மாட்டு மானுடப்பெண்டிர் நயந்த பக்கத்துக் கொன்றை மாலை பெற்ற துறைத்தல். இதுவுங் கிளிமுதலியவற்றறத் தூதுவிடுதலுமுதலிய இன்னோரன்னவா யகத்தமிழ் நெறிப்படாது வருவனவெல்லாம், புறப்பொருளில், "கடவுட்பக்கத்து மேனோர்பக்கத்து மடவரன் மகளிர் மகிழ்ந்த பக்கமும்" என்ற விதிப்பாற்படும்; கடவுண் மாட்டு மானுடப் பெண்டிர் நயந்தபக்கத்து வெண்பாமாலையில் இசைத்த செய்யுள், "அரிகொண்ட கண்சிவப்ப வல்லினென் னாகம் - புரிகொண்ட நூல்வடுவாப் புல்லி - வரி வண்டு - பன்னலங் கூட்டுண்ணும் பனிமலர்ப்பா குரெங் - னுண்ணலங் கூட்டுண்டானார்" என்பதே. மகிழ்ந்தபக்கமும் என்ற பற்றியே நூலியற்றுமாசிரியர் தத்தமக்கு வேண்டியவாறே விரிப்பாராயினர். (௭௭)

சாதிப்ப ராகம மென்பயன் வேட்டுவன் சாதிப்புழு
வேதிப்ப ராகம் பெறல்போல மெய்க்குரு வாற்பெற்றியான்
பூதிப்ப ராக மணிந்தன்ப னாவதெப் போதருளா
யாதிப்ப ராகவி னான்மறைக் கானத்தெ ணம்புயனே.

இ—ள்: ஆதிப் பரா - முதற்கடவுளே, கவின் நான்மறைக் கானத்து அம் எண் புயனே - அழகை யுடைய நான்மறைக்காட்டில் வீற்றிருக்கும் அலங்காரத்தைப்பெற்ற எட்டுப்புயத்தை யுடையவரே, ஆகமம் சாதிப்பர் பயன் என் - அறு (பவஞானமின்றி) ஆகமத்தைச் சாதிப்பார் அதனாற் பயன்யாது?, வேட்டுவன் சாதிப்புழு வேதிப்ப - வேட்டுவன் ஓர் சாதிப் புழுவை வேதிப்ப, ராகம் பெறல் போல -(அது அவ்வேட்டுவனது) வடிவத்தைப் பெறுதல்போல, யான் - நான், மெய்க் குருவால் பெற்று - உண்மையையுடைய ஞானசாரியரால் (உபதேசத்தைப்) பெற்று (முன்னிலை மாறி), பூதிப் பராகம் அணிந்து அன்பன் ஆவது எப்போது அருளாய் - திருவெண்ணீற்றைப் புனைந்து மெய்த்தொண்டனாவது எக்காலத்தில் உரைத்தருளும் எ—று. (௭௮)

புயற்கூடு போம்பொழில் வேதா ரணியன்பொன் னாட்டகத்தே
மயற்கூடு மாடவர் நாரிய ராருயிர் வாரியுண்ணு
முயற்கூடு தாக்க விறற்கூ டுடைமு முடிச்சிலம்பா
கயற்கூடு கண்ணாளிடை யாகாயந் தீட்டுதல் கைக்கரிதே.

இ—ள்: மயற்கு ஊடும் ஆடவர் நாரியர் ஆர் உயிர் வாரி உண்ணும்-மயக்கத்தால்ஊடுகின்ற காளையரதும் மாதரதும் அரிய ஆவியை வாரியுண்ணுகின்ற, முயற்கூடு தாக்க இறல் கூடு உடையும் முடிச்சிலம்பா - சந்திரன் தாக்கத் தேன்கூடு உடையப் பெற்ற சிகரத்தைக் கொண்ட மலையையுடையாய், புயற்கு ஊடு போம்பொழில் வேதாரணியன் பொன்னாட்டு அகத்து - மேகமண்டலத்துக்கு ஊடாகப் போகுஞ் சோலைசூழ்ந்த மறைக்காட்டில் இறைவரது பொன்னாட்டுக்கண் வாழும், கயல் கூடு கண் இடை ஆகாயந் தீட்டுதல் கைக் கு அரிது - கயல் சேர்ந்தாற்போன்ற கண்ணையுடையாளது இடையானது ஆகாயமாயிற்று (ஆதலாலதனை மனத்தாலெழுதலாமன்றிக்) கையாலெழுதுதல் அரிது எ—று.

இடையாகாயம் என்பதற்கு இடையாகிய ஆகாயமென்னினுமாம் [பாங்கி தலைமக ளவயவத் தருமை சாற்றல்.] (எக)

அரிதிரி கைக்கு வடுவாழ் மறைசை யரன்வறுமை
பெரிதிரிகைக்கு வந் தாண்டான் மெய்ஞ்ஞானப் பிறங்குசுடர்
விரிதிரி கைக்கும் வினையே னிடத்தினின் மேவியசக்
கிரிதிரி கைக்கு நிகராம் பிறப்புங் கெடுவிப்பனே.

இ—ள்: அரி திரி கைக்குவடு வாழ் மறைசை அரன் - சிங்கமும் யானையும் வாழும் வேதவனத்தில் வீற்றிருக்கின்ற சங்கார கருத்தரும், வறுமை பெரிது இரிகைக்கு வந்து ஆண்டான் - (அருளின்மையாகிய) வறுமை முற்றாய் நீங்கும் பொருட்டு (எளிது) வந்து அடிமைக்கொண்டவரும், பிறங்கு மெஞ்ஞானச் சுடர் விரி திரி - விளங்காநின்ற மெஞ்ஞானவிளக்கில் விரிந்த திரியானவருமாகிய சிவன், கைக்கும் வினையேன் இடத்தினில் மேவிய - (நல்லோரால்) வெறுக்கப்படும் வினையேன்கட் பொருந்திய, சக்கிரி திரிகைக்கு நிகர் ஆம் பிறப்புங் கெடுவிப்பன் - குயவனது திரிகைக்கு நேராகிய பிறவியையும் (தமது அருளால்) கெடுவிப்பவர் எ - று

திரிகை கைக்குவடு திரியுங் கையையுடைய மலை என்னவே யானையாம்; அது "வருங்குன்ற மொன்றுரித்தோன்" போல்வது. "அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம்" என்றலின் வறுமை அருளின்மையென்றாம். இரி

கைக்கு உவந்து என வைத்து மகிழ்ந்து எனக் கூறுவது பொன்று. பிறப்பும் என்புழி உம்மை இழிவுசிறப்பு. (௮௦)

கெடுப்போன கந்தையை நான்முகன் தேரவனுக் கொண்டோன்
கடுப்போன கந்தையம் பங்கில்வைத் தான்மறைக் கானுவந்தா
னடுப்போன கந்தை யுடையான் சிலம்பினம் மாதையொப்பாய்
வடுப்போன கந்தை மணிமுலை நின்குறை மற்றிலையே.

இ-ள்: நான்முகன் தேரவனுக்கும் அந்தையைக் கெடுப்போன்- பிரமனுக்கும் மாயவனுக்கும் ஆனவந்தையைக் கெடுத்தவரும், கடுப்போன கம் உண்டான் - நஞ்சவுணவை அமுதுசெய்தவரும், தையல் பங்கில் வைத்தான் - சத்தியை (வாம) பாகத்தில் வைத்தவரும், மறைக்கான் உவந்தான் - வேதவனத்தைமகிழ்ந்தவரும், கந்தை போன நடு உடையான் சிலம்பில் நம்மாதை ஒப்பாய் - ஆடை நீங்கிய அரையை யுடையவருமாகிய சிவனது மலையில் நம் மங்கையையொத்த அணங்கே, வடுப் போல் நகந் தை மணி முலை நின் குறை மற்று இலை - வடுவைப்போல நகந் தைத்த மணி போலும் (அரிய) தனமே (அவளோடு நின்மாட்டுள்ள) குறை பிறிது இல்லை எ-று

கெடுப்போன் இயல்பிற் காலம்பிறழ்ந்தது; திருவாதவூரர் புராணத்தில் "அந்தமால்விதி தேடுவார் மதிசூடினார்" என்றதுபோல. நடுப்போன கந்தையுடையான் என்பதற்கு அரையில் நீங்கிய உடையை யுடையவரென்றில் "கழித்த பற்றுடை வசிட்டன திருக்கையாய்" என்பதுபோல நின்றதென்க. இது திகம்பரனென்னும் பொருட்டு; நகந் தைக்கப்படுதல் முலைக்கு அழகென்று மகிழ்வித்து உட்கோளுணர்வாள் மணிமுலையென்றாள். மணி அழகுமாம். [தகையணங்குறுத்தல்.] (௮௧)

மற்றலத் தேரையு மின்றிநெஞ் சேயென்ன மாயங்கொலோ
முற்றலத் தேரை விடுஞ்சாலிற் சங்க முழங்கு பண்ணைப்
பொற்றலத் தேரை மறைமறைக் கானப் புனிதன்கல்லுட்
பற்றலத் தேரைக்கு மேயளந் தானைப் பாடிப்பாடியே.

இ-ள்: நெஞ்சே - மனனே, ஏரை விடும் முற்று அலத்தச் சாலில் - ஏற்றைத் தூண்டாநின்ற (தொழில்) முழுதும் அமைந்த கலப்பையாலுண்டாய உழவுசாலில், சங்கம் முழங்கு பண்ணை - சங்குகளாரவாரிக்கும் வயலாற் சூழப்பட்ட, பொன் தலத்து ஏரை மறை மறைக்கானப் புனிதன் - (தன்மாட்டுள்ள பெரியதோரழகினாற்) பொன்னிலத்துள்ள அழகைச் (சிறிதாகும்வண்ணம்) மறைக்கின்ற வேதவனத்தில் வீற்றிருக்குஞ் சிவபெருமான், கல்லுள் பற்றல் அத்தேரைக்குமே படி எப்படி அளந்தான் - கல்

லாட் பற்றுதலாகிய அத்திறத்தையுடைய தேரைக்குமே படியை எவ்வண்ண மளர்த்தார், என்ன மாயங்கொல் - இது யாது மாயமோ, ஐயம் இன்றித் தேர் - சங்கையின்றி யறிதி, மற்று அல - அதற்கு உணவு கிடைப்பது பிறிதொரு வழியானுமன்று எ—று.

ஓ அசை. மாயமோ வென்றாக்கி; நொல்லே அசையாக்கினுமாம். பொற்றலத்தேரை மறை என்பது சிலப்பதிகாரத்தில் "மண்டேய்த்த புகழினன்" என்பது போலும். பற்றலத் தேரைக்கும் என்றது கோயிற்புராணத்தில் "பொன்றிகழ் பங்கய மூழ்கி" என்பது போன்றது. (௮௨)

படிகந் தனையனை யான்மறைக் காடன்பொற் பாணியில்வேல்
பிடிகந் தனையரு டாதைய னாடகப் பேரவனைக்
கடிகந் தனைமுகில் காணானை யேத்தக் கருதுநெஞ்சே
விடிகந் தனைய மடவார் கலக விழிமையலே.

இ—ள்: நெஞ்சே - மனமே, படிகந்தனை அனையான் - பளிங்கை ஒத்தவரும், மறைக்காடன் - வேதாரணியத்தை யுடையவரும், பொன் பாணியில் வேல்பிடி கந்தனை அருள் தாதையன் - பொன்போலும் (அருமைத்) திருக்கரத்தில் வேலாயுதத்தை யேந்திய குமாரக்கடவுளை உதவிய தந்தையாரும், ஆடகப் பேரவனைக் கடி கந்து அனை முகில் காணானை - இரணியன் என்று பொன்னினது பெயரை யடுத்தவனைக் கொன்ற தூணாகிய தாயையுடைய முகில்போலும் மாயவனாற் காணப்படாதவருமாகிய சிவனை, ஏத்தக் கருத - துதிக்க எண்ணுதி, அனைய மடவார் கலக விழி மையல் இகந்து விடு - (நீ இத்துணை நான்று மணைந்து களித்த) அம்மகளிரது கலகத்தையுடைய கண்ணாலாகும் மயக்கத்தை நீக்கி விடு (நிச்சயம் முத்தி சித்திக்கும்) எ—று.

"தயாபரகரும சாதாக்கியரைத் தியானவுணர்விற் சேர்வு செய்யிற் படிகநிறம்" எனச் சதாசிவ ரூபத்திற் கூறினமைபற்றிப் படிகந்தனை யனையானென்றார். தாதையன் என்பது கல்லாடத்தில் "சின்முலைக்கொடி மடந்தையள்" என்பது போலும்; கந்தனை முகில், புலியூரந்தாதியில், "கந்தனை யூர்கவந் தாற்கரி யானை" என்பது போலும்; அனைய என்பதை அல் நைய எனப் பிரித்து, அஞ்ஞானமாகிய இருள்கெட என்றுரைப்பினுமமையும்.

மையகற் றானை முகன்றாதை மாணிக்க வாசகனை
மெய்யகற் றானை மகிழ்மறைக் காடனை வேண்டிபுன்னுஞ்
செய்யகற் றானைமுக் கோலந்த ணீர்சுரஞ் சென்றனரோ
துய்யகற் றானைப் புரந்தகனன் றானகத் தோகையுமே.

இ—ள்: மை அகற்று ஆனைமுகன் தாதை - (தம்மை வழிபடுவார்களது) குற்றத்தைத் தவிர்க்கின்ற யானை முகத்தையுடைய கணேசரது தந்தையும், மாணிக்கவாசகன் ஆம் மெய்ய கற்றனை மகிழ் மறைக்காடனை - மாணிக்கவாசகராகிய மெய்ம்மையையுடைய பண்டிதனை யுவந்த வேதவனத்தருமாகிய சிவனை, வேண்டி உன்னுஞ் செய்ய கல்தானை முக்கோல் அந்தணீர் - வேண்டித் தியானிக்கின்ற காவிக்கல் அளாயப்பட்ட ஆடையையும் திரிதண்டத்தையுங் கொண்ட வேதியரே, தூய கற்று ஆனைப் புரந்தான் அன்னனும் நங்கோதையுஞ் சாரச் சென்றனமீரோ - சுத்தமாகிய கன்றையுடைய பசுவைக் காத்த மாயவனை யொத்தா னொருகாலையும் (இலக்குமியை யொத்த) நமது மங்கையுஞ் சார்ந்து போயினரோ கண்டீரோ சொல்லும்? எ-று.

கன்று ஆன் என்பது கற்றான் என நின்றது. திருவாசகத்தில், "கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே" என்றது போல. "மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற் - றம்மின வன்றொடராகா மன்னே" என்பது விதி. [ஆற்றிடை முக்கோற்பகவரை வினாதல்.] (௮௪)

தோகை யிராமன் மதன்பாண மங்கந் துளைத்ததுகா
ரீகை யிராமன் விதிகற்ப மானதென் மீதிற்சற்று
மோகை யிராமன் மறந்தா ரிராவண னுட்கவென்ற
வாகை யிராமன் பணிமறைக் காடர்வந் தாரில்லையே.

இ—ள்: தோகையிர் - மாதரே, ஆ - ஆ, மன்மதன் பாணம் அங்கந் துளைத்தது - மதனது பூவம்பு சரீரத்தைத் துளைக்கவும், கார் ஈகை இராமன் விதி கற்பம் ஆனது - கருமையைத் தருதலையுடைய இரவும் நிலைபெற்ற பிரமகற்பமாகவும், இராவணன் உட்க வென்ற வாகை இராமன் பணி மறைக்காடர் வந்தார் இல்லை - இராவணன் அஞ்ச வென்ற வெற்றியையுடைய இராகவன் வணங்கிய திருமறைக்காடர் வந்திலார், என் மீதில் சற்றும் ஓகை இராமல் மறந்தார் - (அதனால்) என்மேற் சிறிதும் அன்பிராமல் மறந்தார்; (இனிச் செய்யக்கிடந்தது யாது? சொல்லுமின்!) எ-று.

துளைத்தது ஆனது என்னும் முற்றுக்கள், சொற்றிரியினும் பொருள் திரியா வினையெச்சமாய்க், "கானவ ரிரிய வில்வாய்க் கடுங்கணை தொடுத்த லோடு - மானினம் பெயர்ந்த தாய ரார்த்தன ரணிந்த திண்டோ - டானின்று முடங்கிற் றென்று நிமிர்ந்தது சாய்பெய் மாரி - போனின்ற தென்ப மற்றைப் பொருவருஞ் சிலையிற்றே" என்னுஞ் சிந்தாமணிச் செய்யுள்போல நின்றன. நின்றபடி நிற்ப மறந்து வந்திலாரென்னினுமமையும். அப்பொருட்கு வினைமுற்றெச்சமாயிற் றென்க. வினைமுற்றே எச்சமாகுமென்றும், முற்றுகள் திரிந்து எச்சமாகுமென்றும், எச்சமே முற்றுமென்றுங் கூறுவார் கருத்தை ஆங்காங்குக் காண்க. [இது கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்த பக்கத்தில் இரவினீட்டம்.] (௮௫)

வந்தித்திக் குங்கணை யுங்கொண்ட வேள்பணி மான்குழற்கா
டந்தித்திக் குங்கனி வாயும்வெண் மூரலு மொண்குழையும்
பந்தித்திக் கும்பெறத் தோன்றிய வேதப் பதியன்பொற்றா
ளந்தித்திக் குந்தகு மென்னமன் றாடு மரன்கிரிக்கே.

இ—ள்: வேதப்பதியன் - மறைக்காட்டை யுடையவரும், பொற்றாளந் தித் திக்குந் தகும் என்ன மன்று ஆடும் அரன் கிரிக்கு - அழகாகிய தாளந் தித்திக்குந் தகும் என்ன (ப் பொன்) அம்பலத்தில் ஆடுகின்ற சங்கார கருத்தருமாகிய சிவனது மலையில், இக்குங் கணையுங் கொண்ட வேள் வந்தித்துப் பணி மான் குழல் காடும் - கருப்பு (வில்லையு) (மலர்) அம்பையுங் கொண்ட காமனும் வழிபட்டு வணங்குகின்ற மங்கையுடைய கூந்தலாகிய வனமும், தித்திக்குங் கனி வாயும் - மதுரிக்கும் பழத்தையொத்த வாயும், வெண் மூரலும் - வெள்ளிய நகையும், ஒண் குழையும் - ஒள்ளிய காதும், பந்தித் திக்கும் பெறத் தோன்றிய - வரிசையாகிய (இந்த வெய்ய) திசையும் பெறும் வண்ணந் தோற்றின (இஃதென்ன மாயமோ நெஞ்சே சொல்லுதி).

குழற்காடு தொகையுருவக மாயினமையில் காடு மிகுதிப்பொருட்டன்று. தகுதியின்மையணி. [தலைமகன் றலைமகளதுருவு வெளிப்பாடு கண்டு சொல்லியது.] (௮௬)

ஆரம்பையங் காட்டக வேதா ரணியத்த னாவியச்சுக்
குரம்பையங் காட்டவல் லான்சித சித்தன் குரூஉச்சடில
சிரம்பையங் காட்ட வணிந்தோ னரவிந்தச் சேவடியென்
பரம்பையங் காட்ட வெரிமுற்பஞ் சாகப் பறந்திடுமே.

இ—ள்: ஆரம்பை காட்டு அக வேதாரணியத்தன் - வாழைக் காட்டிடத்தைக் கொண்ட திருமறைக்காட்டையுடையவரும், ஆவி அச்சுக் குரம்பை அங்கு ஆட்ட வல்லான் - உயிரது காயமாகிய கூட்டை அங்ஙனம் ஆட்டவல்லவரும், சித் அசித்தன் - சித்தும் அசித்தும் ஆனவரும், குரூஉச் சடில சிரம் பயம் காட்ட அணிந்தோன் - (செந்) நிறத்தைக் கொண்ட சடாமுடியிற் கங்கையைக் காட்டப் புனைந்தவருமாகிய சிவனது, அரவிந்தச் சேவடி - தாமரைமலர்போலுஞ் செம்மையாகிய திருவடி, என் பரம் - எனக்குப் பாரமானது, பயங் காட்டஎரிமுன் பஞ்சு ஆகப் பறந்திடும் - (அதனாற் பிறப் பிறப்பாதியவற்றால் வரும்) பயமெல்லாம் விறகிற் பற்றிய அக்கினிக்கு முற்பட்ட பஞ்சுபோல விரைவில் அழியும் எ-று.

பட்டினத்துப்பிள்ளையார்பாடலில் "ஆட்டவல்லானுமொருவனுண்டே இல்லையம்பலத்தே" என்பதுகொண்டு அங்காட்ட வல்லானென்றார். பறந்திடும் என்பது விரைவிலழியுமென்னும்பொருள்தருவதோரிலக்கணை. (௮௭)

பறக்கும் பருந்துவக் குங்கழி யூன்முடைப் பற்றுளதா
யிறக்கும் பருந்துவக் காக்கையை நீக்கி யினிப்பொதிய
வறக்கும் பருந்து தமிழ்மறைக் காட னருளைக்கொண்டு
திறக்கும் பருந்துதித் தற்கரி தாமுத்திச் சீர்க்கதவே.

இ—ள்: பறக்கும் பருந்து உவக்குங் கழி ஊன் முடைப் பற்று உளது ஆய் - பறக்கின்ற பருந்துகள் மகிழும் மிகுந்த மாமிசத்தின் நாற்றப்பற்றுள்ளதாகி, இறக்கும் பருந்துவக்கு ஆக்கையை நீக்கி - ஓஞ்சுகின்ற பருத்த தோலையுடைய காயத்தை யொழித்து, உம்பருந் துதித்தற்கு அரிது ஆம் சீர் முத்திக் கதவு - தேவருந் துதித்தற்கரிதாகிய சிறப்பையுடைய வீட்டுக் கதவை, பொதிய அறக் கும்பர் உந்து தமிழ் மறைக்காடன் அருளைக் கொண்டு இனித்திறக்கு - பொதியமலையில் வீற்றிருக்கின்ற புண்ணியத்தையுடைய அகஸ்தியமுனிவர் உயர்த்திய தமிழையுடைய திருமறைக்காட்டில் இறைவரது திருவருளைக்கொண்டு இனித்திறப்பேன் எ - று.

ஆக்கையை நீக்கி அருளைக்கொண்டு மோக்கக் கதவைத்திறப்பேனென்றியைக்க. "கடதற வென்னும், அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோ - டென்னே னல்லென வரூஉ மேழுந் - தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே" எனத்தொல்காப்பியத்திலும், "குடு துறு வென்னுங் குன்றிய லுகரமோ - டல்லன் னென்னே னாகு மீற்ற - விருதிணை முக்கூற் றொருமைத் தன்மை" என நன்னூலிலும், "புல்லுங் குடு துறு மென்னேனும் பொற்றொடியா - யல்லுந் தனித்தன்மையாம்" என நேமிநாதத்திலும், குடு துறு வென்னுங் குன்றியலுகரமோ - டல்லன் னென்னே னாகு மீற்ற - விருதிணை முக்கூற் றொருமைத் தன்மையும்" என இலக்கணவிளக்கத்திலுங் கூறியதனானும், திருக்கோவையாரில் "மடுக்கோ" "படுக்கோ" என்றற் றொடக்கத்தனவற்றுக்குத் தன்வினையாகப் பொருளுரைத்த நச்சினார்க்கினியர் சிந்தாமணியில், "தளர்கு" என்பதைத் தன்வினை யுரைக்குந் தன்மைச்சொல்லெனக் கூறுதலானும், அகப்பொருளில் பிரித்துவருகென்றலின் பொருள் வருவேனெனப்படுதலானும், அதனிலக்கியமாகிய தஞ்சைவாணன்கோவையில், "நின்றே வருவல்" எனக் கூறுதலானும் சீர்காழிக் கோவையிலும் வெங்கைக் கோவையிலுங் கோடீசுரக் கோவையிலும் அப்பொருள்பட வருதலானும், திறக்கு என்பதற்கு இதுவே பொருளெனத் தெளிக. (அஅ)

கதவாயு நீங்கி மண்காய மான கடவுளை
யுதவாயு மப்பனு மானவன் வேத முறைவனத்தான்

பதவாயு தக்கொடி வேடாதை கீர்த்தியைப் பாடுதற்குச்
சதவாயு நாவுந்தந் தானில்லை வாணி தலைமகனே.

இ—ள்: காயம் கதவாயு அங்கி நீர் மண் ஆன கடவுள் - வானமும் உக்கிரத்தையுடைய காற்றும் அக்கினியுஞ் சலமும் பிருதுவியுமாகியதேவும், எனை உதவு ஆயும் அப்பனும் ஆனவன் - என்னையும் பெற்ற தாயுந் தந்தையுமானவரும், வேதம் உறை வனத்தான் - ஆரணங்களிருக்குங் காட்டையுடையவரும், பத ஆயுதக் கொடிவேள் தாதை கீர்த்தியைப் பாடுதற்கு - கோளிக்கொடியையுடைய முருகக்கடவுளது பிதாவுமாகிய சிவனது கீர்த்தியைப் பாட, வாணிதலைமகன் சத வாயு நாவுந் தந்தான் இல்லை - சரசுவதியுடைய கணவனாகிய பிரமன் நூறு வாயையும் நாவையும் (எனக்குத்) தந்திலன் எ - று.

தோற்றமுறைக்கும் அரதனமாலையணிக்கும் பிறழ்ந்து, தொல்காப்பியத்தில் "தலைபினு நெஞ்சினு மிடற்றினு நிலைஇ" என்பதுபோலச் செய்யுளின்பம் படநின்ற முதலடியை முறைதந்து பொருளுரைத்தாம். (அகூ)

மகர சலந்தர ளந்தரு வேத வனத்தன்புய
சிகர சலந்தர னாவியுண் டானடல் சேர்ந்திலங்கு
முகர சலந்தர வாலாச னுவுரி யய்கையொன்றைப்
புகர சலந்தரப் போர்த்தா யெனவினை பொன்றிடுமே.

இ—ள்: மகர சலந் தரளந் தருவேத வனத்தன் - சுறாமீனையுடைய கடல் முத்தைத் தருகின்ற மறைக்காட்டை யுடையவரும், புய சிகர சலந்தரன் ஆவி உண்டான் - புயமலையையுடைய சலந்தராசுரனைக் கொன்றவருமாகிய சிவனை, அடல் சேர்ந்து இலங்கும் உகர - வலிமைபொருந்தி விளங்காநின்ற உகரமெனப்பட்ட, சலந் தர ஆலாசனு - வயிரத்தைக் கொண்ட காளபோசனரே, அம் ஒற்றைக் கைப் புகர் அசலம் உரி தரப் போர்த்தாய் என வினை பொன்றிடும் - அழகாகிய ஒரு கையையுங் கபில நிறத்தையுமுடைய யானை தோலைத் தரப் போர்த்தவரே யென்று துதித்துக் கொள்ளப் (பிறவிக்கேதுவாகிய) இருவினைகளும் அழியும் எ - று.

சங்காரத்தொழிலையியற்றலால் அடல்சேர்ந்து என்றார். உவ்வென்பது சிவனுக்கும் பெயராதலைக் கந்தரலங்காரத்தில் "ஆலுக்கணிகலம் வெண்டலைமாலை" என்பதனு லுணர்க. (௬௦)

பொன்றுதை யம்புயத் திண்கால னஞ்சிப் புரண்டுவிழ
நின்றுதை யம்புயத் தான்மறைக் காட னிழல்வெற்பினீ
ரொன்றுதை யம்புயங் கன்வாய் விழுங்கிய தோமணித்தே
ரென்றுதை யம்புயன் மூடிய தோவின் றியம்பிடுமே.

இ—ள்: பொன் துதை அம்புயத் திண் காலன் அஞ்சிப் புரண்டு விழ - ஆபரணம் நெருங்கிய அழகாகிய புயத்தையுடைய வலிய நமன் பயந்து புரண்டு வீழ, நின்று உதை அம்புயத்தான் மறைக்காடன் நிழல் வெற்பினீர் - நின்று உதைத்த திருவடியாகிய தாமரைமலரை யுடையராய வேதபுரீசரது குளிர்ச்சியைக் கொண்ட மலையில் வாழும் மடவீர், ஐயம் ஒன்றுது - சங்கை பிறக்கின்றது, மணித்தேர் என்று உதை - மணியைக்கொண்ட தேரை யுடைய உந்தச் சூரியனை, இன்று புயங்கன் வாய் விழுங்கியதோ - இன்றைக்குக் கேது வாய் விழுங்கிற்றோ, அம்புயல் மூடியதோ - (அன்றேல்) நீர்மேகம் மூடிற்றோ, இயம்பிடும் - (தெரிதிரேற்) சொன்மின் எ—று.

ஒன்றுகின்ற தெனற்பாலது, பட்டினத்தடிகள், "வேகுதே தீயதனில் வெந்துபொடி சாம்ப - ராகுதே" எனக் கூறியதுபோல மரீஇயிற்று. புயங்கன் என்பது பாரதத்தில் "உரகருந் தங்கள்வாய் விடங்கள் கொன்றென வீழ்ந்தார்" என்றாற்போல நின்றது. உது பண்டறிசுட்டு. [இரவினீட்டம்.]

இயக்கோடை யாம்பன் முசுகுந்த னேத்து மிறைவவண்டு
முயக்கோடை யாம்பன் மலர்மறைக் கான்முத லேசுருதிச்
சயக்கோடை யாம்பன்முந் தேயடியேன்சட் டகம்விடுநாண்
மயக்கோடை யாம்பன் மருந்தே நின்பார்வை வழங்குதியே.

இ—ள்: இயக்கு ஓடை ஆம்பல் முசுகுந்தன் ஏத்தும் இறைவ - (பாகர்) தூண்டுகின்ற (நெற்றியில்) பட்டத்தைக் கொண்ட யானையையுடைய முசுகுந்தச் சக்கிரவர்த்தி துதித்த தலைவரே, ஓடை வண்டு முயக்கு ஆம்பல் மலர் மறைக்கான் முதலே - ஓடையில் வண்டுகளைப் புணர்க்கின்ற ஆம்பற் பூமலரைப்பெற்ற வேதவனத்து முதல்வரே, சுருதிச் சயக்கோடை ஆம்பல் முந்தே - வேதமாகிய வெற்றியைக்கொண்ட குதிரையையுடைய மூங்கில் முத்தே, மயக்கோடு ஐ ஆம் பன் மருந்தே - (அன்பரது) மயலுக்குங் கோழைக்குமான நெருங்கிய ஔஷதம் போல்வாரே, அடியேன் சட்டகம் விடும் நாள் நின்பார்வை வழங்குதி - அடியேன் காயத்தைத் துறக்கும் நாளில் (மரணவேதனை நீங்க) நுமது திருநோக்கத்தைத் தந்தருளும் எ—று.

கோடைக்கியைந்தமையிற் சயமென்றார். (௧௨)

குதிக்குஞ் சிதாரிக் கட்கயற் பாவை கொழுநன்மன்றிற்
சதிக்குஞ் சிதநடத் தாள்கொன்றை மாலை தவழ்குழவி
மதிக்குஞ்சி தங்கிய வேணியன் வேத வனத்தலத்தி
னுதிக்குஞ் சிதலை யெறும்பாதி பேறு முரைக்கரிதே.

இ—ள்: குதிக்குஞ் சிதர் அரிக்கண் கயல் பாவை கொழுநன் - குதிக்கின்ற சிதறும் வரியையுடைய விழியாகிய கயலைக்கொண்ட உமாதேவிக்கு நாயகரும், மன்றில் சதிக் குஞ்சித நடத்தாள் - பொன்னம்பலத்திற் (புரிந்தருளுஞ்) தாளவொத்துக் (கிசைந்த) குஞ்சித நடனத்தை யுடையவரும், கொன்றை மாலை தவழ் குழவி மதிக் குஞ்சி தங்கிய வேணியன் - கொன்றை மாலையுந் தவழும் இளம்பிறையையும் புனைந்த குஞ்சி பொருந்திய சடையை யுடையவருமாகிய சிவனது, வேத வனத் தலத்தின் உதிக்குஞ் சிதலை எறும்பு ஆதி பேறும் உரைக்க அரிது - திருமறைக் காட்டிற் பிறக்குங் கறையான் எறும்பு முதலியவற்றின் பேறுஞ் சொல்ல அரிது எ—று.

குதிக்கும் வினையகள் மேற்று உரைக்கரிது என்பதை உரைக்கு அரிது என வைத்துச் சொல்லுக்கு அரிது எனக் கூறினுமமையும். (ருரு)

உரைத்தென்ன வன்மை பரன்மறைக் கானுறை யோங்கன்முகி
னிரைத்தென்ன வல்மலி பூங்குழலாளென் செனுமிரும்பைக்
கரைத்தென்ன வந்நகைப் பூண்மார்பஞ் சேரக் கருதுபொதி
வரைத்தென்ன வன்கொடி சாடிய வேல்விழி வானகையே.

இ—ள்: பொதி வரைத் தென்னவன் கொடி சாடிய வேல்விழி வால் நகையே - பொதிய மலையையுடைய பாண்டியனது துவசமாகிய சேலை வென்ற வேற்கண்ணையும் வெண்மையாகிய பல்லையுமுடைய மாதே, வன்மை உரைத்து என்ன - சமர்த்தைச் சொல்லி (அதனாற் பெறுவது) யாது, பரன் மறைக் கான் உறை ஓங்கல் - சிவனது வேதவனத்திலிருக்கு மலையில், முகில் நிரைத்தென்ன அல் மலி பூங் குழலாள் - மேகம் நிரைத்தாற் போல இருள் நிறைந்த மலரைக்கொண்ட கூந்தலை யுடையாள், என்ன அம் நகைப்பூண் மார்பஞ் சேர - எனது அழகாகிய ஒளியைக்கொண்ட ஆபரணத்தைப் புனைந்த மார்பைத் தழுவ, நெஞ்சு எனும் இரும்பைக் கரைத்துக் கருது - (நினது) மனமென்னப்பட்ட இரும்பைக் கரைத்து எண்ணுதி எ—று.

வால் நகையே பூங்குழலாள் என் மார்பைச் சேர நீ நெஞ்சைக் குழைத்து எண்ணுதி என முடியும். உரைத்து என்னும் வினையெச்சம், வருவித்த பெறுவது என்பதின் முதனிலையோடு முடிந்தது, "செய்வி யென்வினைபுட் செய்வினை சிலவே" என்னும் இலக்கணக்கொத்து விதி

யால் நிரைத்தென்ன நின்றது. "நிரையாமாச் சேர்க்கு நெடுங்குன்ற நாட" என்னும் நாலடியார்ச் செய்யுளு மிது. நிரைத்தாற்போல எனப் பொருள் கூறில், மூகில் இரண்டாவதாம். பொதி என்பது, "பொதியிலே விளைகின்றது சந்தனப் பொதியி னதியிலே விளைகின்ற முத்தம்" என்னுந் திருவிளையாடற் புராணச் செய்யுள்போல நின்றது. வேற்கண் ஒருசொல்; கந்த புராணத்தில் "கூற்றமன்ன வேற்கண்ணி" என வந்ததுமிது. [தன்னிலை தலைவன் சாற்றல்.] (௧௪)

வானண்ட ருண்டி வழங்குஞ்செவ் வாய்ச்சி மணிகறங்கு
மானண்டர் வேயிசை கேட்கப் பொறாளணை வாய்கவைத்த
கானண் டளையினி னந்தீனு முத்தினைக் காமரன்னந்
தானண்ட மென்றணைக் கும்மறைக் காட்டுறை சங்கரனே.

இ—ள்: கவைத்த கால் நண்டு அளையினில் நந்து ஈனும் முத்தினை-கவர்பட்ட காலையுடைய ஞெண்டினது அளையிற் சங்கு ஈன்ற முத்தை, காமர் அன்னம் அண்டந் தான் என்று அணைக்கும் மறைக்காட்டு உறை சங்கரனே - அழகையுடைய அன்னம் (தனது) முட்டையேயென்று அணைக்கின்ற வேதவனத்தில் வீற்றிருக்குஞ் சங்கரனே, வான் அண்டர் உண்டி வழங்குஞ் செவ்வாய்ச்சி - ஆகாயத்தில் வாழுந் தேவர்களது உணவாகிய அமுதைக் கொடுக்கின்ற சிவந்த வாயையுடைய (நம்) மாது, மணி கறங்கும் ஆன் அண்டர் வேய் இசை கேட்கப் பொறாள் அணை வாய்-(நும் மாட்டு வைத்த காதலால்) மணி ஒலிக்கும் எற்றையுடைய ஆயரது வேய்ங் குழலி (லெழுமினிய) இசையையுங் கேட்கப் பொறாளாய்ப் (பெரிது படருறுகின்றாள் அது தீர அவளைத்) தழுவுதிர் எ—று.

வானண்டர், திருக்கோவையாரில் "கருங்கண் ணனையறி யாமை நின்றோன்" என்பதுபோல நின்றது. வான் பெருமையுமாம். ஆன் எற்றுக்குமாதலைத் திருச்செந்திலந்தாதியில், "ஆங்கயிலையை யேய்ந்த தகை யானைக்கு" என்பதனானறிக. காமர் காதலுமாம். தான் அசையுமாம். தானாக என்னினு மமையும். சங்கரனே அணைவாய் என்றமையிற் கருத்தடையடையணி. மறைக்காட்டு உறை சங்கரனே, ஞெண்டளையிற் சங்கு ஈன்ற முத்தை, அன்னம் அண்டம் என்று அணைக்கும், அதுபோலச் செவ்வாய்ச்சி மணியொலிக்கும் ஆனண்டரது வேயிசையையுங் கேட்கப்பொறாது மயலுறுகின்றாள், அம்மயலொழிய அவளைத் தழுவுதி; தழுவில், (நீ யின்றும் அயின்றறியாத) தேவாமிர்தத்தைத் தருவள் எனக் கூறலுமொன்று. அமிர்தத்தைச் செவ்வாயில் தருவள் என்பதுபடச் செவ்வாய்ச்சி யென்றாள். கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்த பக்கத்தில் தலைவியோடணைய இறைவனை வருகவெனத் தோழி யிரத்தல். (௧௫)

சங்க மடங்கலை சூழ்மறைக் காடன் றடஞ்சிலம்பிற்
றுங்க மடங்கலை யன்னான் புரியுஞ்சொற் சூதையெண்ணேன்
பைங்க மடங்கலை நேரும் புறவடிப் பார்வைதக்கோர்
சிங்க மடங்கலை கற்பாரென் றூர்பொற் சிலைநுதலே.

இ—ள்: சங்க மடங்கு அலை சூழ் மறைக்காடன் தடஞ்சிலம்பில் சிலை நுதலே - சங்குகளையுடைய மறியுந் திரைபொருந்திய கடல் சூழ்ந்த வேதவனத்திலிறைவரது பெருமையாகிய மலையில் வாழும் வில்லையொத்த நெற்றியையுடைய மாதே, துங்க மடங்கலை அன்னான் - உயர்ச்சியாகிய சிங்கத்தையொத்த (சயத்தையுடைய) தலைவர், பைங் கமடம நேரும புறவடி கலை நேரும் பார்வை - பசிய கூர்மத்தைப் போலும் புறந்தாளையும் மானைப் போலுங் கண்ணையுமுடையாய், மடஞ் சிங்கத் தக்கோர் கலை கற்பார் என்றார் - அறியாமைகுன்றப் பெரியோர் சாஸ்திரங்களைப் படிப்பாரென (நென்னற்) சொல்லிவைத்தார், புரியுஞ்சொல் சூதை எண்ணேன் - அன்று சொல்லிய சொற்சூதைத தேற்றிலேன் (இன்று அவர் பிரிந்ததினாற் றேறினேன்) எ - று.

உயர்வுடை முயற்சியிற் கிளர்ந்ததினால், அன்னான் என்ற ஒருமை என்றார் என்ற பன்மையோடு மயங்கிற்று. திருவள்ளுவநாயனாரும் "எனைத் துணைய ராயினு மென்னாந்தினைத்துணையுந் - தேரான் பிறனில்புகல்" எனப் பான்மயங்கக் கூறியதையுணர்க. பிரிவு ஆறனுள் "ஓதலுந்தூது முயர்ந் தோர்மேன" எனத் தொல்காப்பியனார் கூறுதலின் இது உயர்ந்ததாயிற்று. விளியிரண்டில் ஈற்றது தலைவியைத் தோழி விளித்தது. மற்றது பாங்கியைத் தலைவன் விளித்தது. [கல்விகருப் பிரிவு தலைமகனுணர்ந்த தோழி தலைமகட்குரைத்தல்.] (௯௬)

சிலைக்கோடு மேல்வைத்த கோற்றே னுடைந்ததண் டேறல்வயற்
றலைக்கோடு வேத வனப்பெரு மான்மலைச் சங்கரிதன
முலைக்கோடு பட்ட தழும்பான் சடில முடிமணியாங்
கலைக்கோடு வெண்பிறை பைச்செங்கை கூப்புதி கார்மயிலே.

இ—ள்: கார் மயிலே - கார்காலத்து மயில்போல்வானே, சிலைக் கோடு மேல்வைத்த கோல் தேன் உடைந்த தண் தேறல் - மலைமுடிமேல் (ஈகன்) வைத்த கொம்பர்த் தேன்கூடு உடைந்ததனாலெழுந்த குளிர்ந்த தேன் வயல் தலைக்கு ஓடு வேதவனப் பெருமான் - கழனிக்கண் ஓடுந் திருமறைக் காட்டிற் பெரியவரும், மலைச் சங்கரி முலைக்கோடு பட்ட தழும்பான் - (இமய) மலையிலுதித்த உமாதேவியாரது தனக்கொம்பு பட்டதனாலாக, வடுவை யுடையவருமாகிய சிவனது, சடில முடி மணி ஆம் கலைக்கோடு

வெள் பிறையைச் செங்கை கூப்புதி - சடையாணியன்ற முடிக்கு மணியாகிய கலையையுடைய விளைந்த வெள்ளிய பிறையைக் கைகூப்பு எ—று.

உடைந்த சண்டேறலும் கோடுபட்ட தழும்பும், கல்லாடத்தில், "தேவர்கோமான் சிறையரி புண்ணுக்காற்றாது" என்பதிற் சிறையரி புண்ணுக்கு என்பது போல்வன. ஆட்டிய கரும்பும் இது. புணர்ச்சிக் களிப்புடைமைபற்றி நகையாடுவாள் கார்மயிலே யென்றாள். [பிறைதொழுகென்றல்.] (கஎ)

காரண னோமத் தலைவே திகைமறைக் கானப்பரி
பூரண னோமத்த மானவன் வில்லிடம் பொன்வெள்ளிமா
வாரண நோமத்த வாரணங் காத்திடு மாழிப்புவி
பாரண னோமத்த வேணியைத் தாங்கிய பால் விடையே.

இ—ள் காரணன் - (சகத்துக்கு நிமித்த) காரணரும், ஓமத் தலைவேதிகை மறைக் கானப் பரி பூரணன் - யாகத்துக்குரிய தலைவேதிகையையுடைய வேதாரணியத்துப் பரிபூரணரும், ஓம அத்தம் ஆனவன் - பிரணவப்பொருளானவருமாகிய சிவனது, வில் பொன் - தனுப்பொன் (னாகும்),- இடம் வெள்ளி - தானம் வெள்ளி (யாகும்), மா ஆரணம் - குதிரை வேத (மாகும்), மத்த வேணியைத் தாங்கிய பால் விடை - உன்மத்தம் பூவையணிந்த சடையையுடைய (அச்) சிவனைப் பரித்த வெள்ளையேறு, நோம் மதவாரணங் காத்திடும் ஆழிப் புவி பாரணன் - (முதலையால) நொந்த மத யானையைக் காத்த கடலாற் சூழப்பட்ட பூமியையுண்ட மாயவன் எ - று.

ஓ சிறப்புப்பொருளில் வந்தது. இக்கவி "ஐவயைக் கிழவன் வயங்குதார் மாணகலந் - தையலாய் நீயின்று நல்கினை - நல்காயேற் - கூடலார் கோவோடு நீபும்படுதியே - நாடறியக் கௌவை யொருங்கு" என்பது போல வந்ததனாற் பிரிந்துவழீஇயதன்றென்க. (கஅ)

பாலம் பகவன் மயிலுரைக் கோலியற் பாவைபங்கன்
ஞாலம் பகவன் மருப்பினிற் கீன்றிடு நாரணனுங்
கோலம் பகவ னவின்மறைக் காடன் குருஉச்சடில
மேலம் பகவ னமையாண் டருளுவன் மேதகவே.

இ—ள்: பால் உரை அம்புக் கோ அகவல் மயில் இயல் பாவைபங்கன் - பாலையொத்த சொல்லையும் பாணத்தை யொத்த கண்ணையும் நடித்தலைக் கொண்ட மயிலை யொத்த இயலையுமுடைய உமாதேவியைப் பாகத்திலுடையவரும், ஞாலம் பக வல் மருப்பினில் கீன்றிடுங் கோலம் ஆம் நாரணன் - பூமிகிழிய வலிய எயிற்றாற் கிழித்த பன்றியாகிய மாயவனும், பகவன்

நவில் மறைக்காடன் - பிரமனுந் துதிக்கும் வேதவனத்தை யுடையவரும், குரூஉச்சடில மேல் அம் பகவன் - (மின்) நிறத்தைக்கொண்ட சடையின் மேல் நீரைத் தரித்த செல்வருமாகிய சிவன், மேதக நமை ஆண்டு அருளுவன் - மேன்மைதக எம்மையும் அடிமைக் கொண்டருள்வன் எ-று. (௯௯)

தகர நகரமுன் றுமைந் தெழுத்தர் தறுகண் முகப்
புகர கரத் தரவேழப் போர்வையர் பொங்கனலம்
பகர நகரத்தர் வேதங்கள் பூசித்த பான்மைபெற்ற
சிகர நகரத்த ரெற்களிப் பார்முத்திச் செந்திருவே.

இ—ள்: தகர நகர மூன் ஆம் ஐந்து எழுத்தர் - தந்நகர முதலிய பஞ்சாக்கரத்தையுடையவரும், தறுகண் முகப் புகர் கரத் தர அன வேழப் போர்வையர் - மறமாகிய முகத்தையுங் கபிலநிறத்தையுந் துதிக்கையையும் வலிமையையுமுடைய அந்தக்கயாசுரனது தோலையுடையவரும், பொங்கு அனல் அம்பகர் - பொலிந்த அக்கினிக்கண்ணையுமுடையவரும், அநகர் - மலரகிதரும், அத்தர் - (சகத்துக்குப்) பிதாவானவரும், வேதங்கள் பூசித்த பான்மை பெற்ற சிகர நகரத்தர் - வேதங்களருச்சித்த தன்மையைப்பெற்ற முடி பொருந்திய திருக்கோயிலையுடையவருமாகிய சிவன், எற்கு முத்திச் செந்திரு அளிப்பார் - (நாயிற்கடைப்பட்ட) எனக்கும் மோக்கலக்குமியைத் தந்தருள்வர் எ - று.

திருவாசகத்தில் "நமச்சிவாய வாஅழ்க" எனவும் தேவாரத்தில் "நற்றுணையாவது நமச்சிவாயவே" எனவும் அருளப்பட்டமைபற்றி நகரமுன்றுமைந்தெழுத்தர் என்றார். (௧௦௦)

மறைசையந்தாதியுரை

முற்றிற்று.

பிழையும் திருத்தமும்.

பக்.	வரி.	பிழை.	திருத்தம்.
4	3	தரும் பரவைக்கண்	கரும்பரவைக்கண்
6	24	ஙவிராழி	நவிராழி
7	9	ஒரு புற்றிலும்	ஒரு புற்றில்
	24	இதைய	இதய
8	30	(கூப்பிக்)	(கூம்பிக்)
	34	பாடரண்	பாடாண்
9	30	வெண்ணொ	வெண்ணோ
10	21	தாக்கினாற்	தாங்கினாற்
	23	வகுதி	வதிகு
12	11	ஆர வீர அயில்	அர வீர ஆயில்
	23	ஆடில்	ஆலில்
13	3	பொன்றாவி	பொன்றாவீ
	7	மாதங்க	மாதங்
	10	கச்சையையும்	கச்சையும்
	17	தாபத்தை	ஆபத்தை
14	9	யாப்புறவின்மையாலும்	யாப்புறவின்மையாலும்
	11	யானண்ணி	யாநண்ணி
	12	சரணடைந்ததே	சரண்டந்ததே
	19	வெய்யில்	வெயில்
	21	ஐ யோத்திக்கு	ஐ யோதிக்கு
	25	சொன்றாக	யொன்றாக
15	4	நாடு அகன்	நாடகன்
	25	சயம் மேல்	சயமேல்
	31	கரடக் சயம்	கர டக்கயம்
16	15	புண்டிரிக	புண்டரிக
19	6	டெஞ்சியயர்	டெஞ்சிய யா
21	10	கார் முகந்தர	கார்முக தர
	16	லசைந்த	லமைந்த
	21	என்	என்ன
22	20	கிரைகிறை	கிரணிறை
	32	முகத்தையுடைய	முத்தையுடைய
23	34	கொத்துகளை	கொத்துக்களை

பக்.	வரி.	பிழை.	திருத்தம்.
24	10	தவத்தைச	தவத்தைச்
	15	(சொல்லில்)	(சொல்லில்
	16	எளிதிலடைவீர்	எளிதிலடைவீர்)
	19	னண்ணாளோ	னண்ணாளே
		புலர்ந்து	புலந்து
	21	"கோவீற்றிருந்த	கோவீற்றிருந்த
	22	நாவீற்றிருந்த	"நாவீற்றிருந்த
26	21	செவ்வி அணை	செவ்வி அண்
27	5	உறுப்புகளிற்	உறுப்புக்களிற்
	33	பதடத்தலை	படைத்தலை
28	4	உழவுசால்	உழவுச்சால்
	32	எனவும்	எனப்
30	19	ஓலமென்றார். அமரராகவும்	ஓலமென்றார் அமரர்; ஆகவும்
	24	ரஞ்சனே	ரஞ்சனை
31	2	னையாது ஒழியாய்	னையாதொழியாய்
	21	எனவுங்	எனக்
32	24	சுரக்குங் - காட்சியாலே	சுரக்குங் காட்சியாலே
33	16	விடுப்பதுவே". இது	விடுப்பதுவே" என்பது
	28	கூறியவற்றோ	கூறி அவற்றோ
	29	ஏயாம் உகார வோகார	ஏ யாம் - உகரவோ கார
	37	றென்னக்	றெனக்
34	19	(மெல்லிய	(மெல்லிய)
36	9	இமைப்பில்	இமைப்பில
	12	கருவி யின்மையிற்	கருவி யன்மையிற்
	13	இயமன்	இயன்மா
	24	வணியும்	வணி
	26	வம்பகச்	வம்பகர்
37	18	வந்து	வந்த
38	18	நள்	கள்
39	35	குறையால்	குறியாள்
40	17	பவனத்தொடு	பவளத்தொடு
	18	முந்நீர்படைத்தல்	முந்நீர் - படைத்தல்
	35	எண்டு	ஈண்டு
41	9	வராக	வராக
	19	இலக்மி	இலக்குமி
	24	என்னக்	எனக்
	32	நிற்கின்றன	நிற்கின்ற

பக்.	வரி.	பிழை.	திருத்தம்.
42	4	அடிமைக் கொண்டு	அடிமைகொண்டு
	5	என வை த்து	எனவைத்து
43	27	அநு (பவ	(அநுபவ
44	25	அடிமைக் கொண்ட	அடிமைகொண்ட
	26	மெஞ்ஞானச்	மெய்ஞ்ஞானச்
		மெஞ்ஞான	மெய்ஞ்ஞான
	31	கெடுவிப்பவர்	கெடுவிப்பார்
	32	திரிகை	திரி
45	10	உண்டான்	உண்டோன்
	16	(அவளோடு நின்மாட்டுள்ள)	(அவளோடு ஒத்தற்கு) நின்மாட்டுள்ள
	31	உழவு சாலில்	உழவுச்சாலில்
46	33	புரந்தநனன்	புரந்தரனன்
47	11	போயினரோ	போயினரோ?
	12	சொல்லும்?	சொல்லும்
	13	நின்றது.	நின்றது,
	35	முற்றுகள்	முற்றுக்கள்
48	6	ொ ான்	பொன்
	19	அரம்பயங்	அரம்பையங்
	20	சடில	சடிலச்
49	7	பருந்துக்கள்	பருந்துகள்
	25	பொருளுரைத்த	பொருளுரைத்தமையானும்
	30	கோமடசுர	கோமடச்சுர
50	5	பிருதுவி	பிருதிவி
	9	கோளி	கோழி
	18	யொன்றை	யொற்றை
	30	சிவனுக்கும்	சிவனுக்குப்
51	2	னஞ்கி	னஞ்சி
52	2	சிதாரி	சிதரி
	10	மாலையூர்	மாலையையுர்
	14	வினாயகன் மேற்று	வினா யகன்மேற்று.
	26	நிரைத்தாற் போல	நிரைந்தாற் போல
53	2	நிரைத் தென்ன	நிரைத்தென
	5	றூ சந்தனப்	றன சந்தனம்
		விளாகின்ற	விளாகின்றன
	28	கருத்தடை	கருத்துடை

பக்.	வரி.	பிழை.	திருத்தம்.
54	9	உயற்சி	உயர்ச்சி
	30	(ஈகன்)	(ஈக்கள்)
	34	பட்டதனுலாக,	பட்டதனுலான
	35	கலைக்ரோாடு	கலைக்கோடு
55	12	பாாணை	பாரணை
	15	ஓம	ஓம்
	20	மதவாரணங்	மத்த வாரணங்
	23	நல்கினை -	நல்கினை
56	5	அடிமைக்கொண் டருள்வன்	அடிமைகொண்டருள்வன்

77 - ம் கவியி னுரையில், மறைசையில் மூர்த்தி யென்னுந் தொடரின்முன் பின்வருவதைச் சேர்த்துக்கொள்க.

மூரிக் குமாரனைத் தந்தான் - (சரண்புக்க தேவர் துன்பங் களைதற் பொருட்டு அசுரரை யழிக்கத்தக்க) வலிமை படைத்த முருகக்கடவுளை உதவியவரும்,